AR
697

தவறின்றித் தமிழ் எழுதுவோம்

மா. நன்னன்

தவறின்றித் தமிழ் எழுதுவோம்

மா. நன்னன்

ஞாயிறு பதிப்பகம்
11, முதல் தெரு, அரங்கராசபுரம்,
சைதாப்பேட்டை, சென்னை - 15.
தொலைபேசி : 2350193

உரிமை	❖ மாணிக்கம் நன்னன் (1924)
நூலின் பெயர்	❖ **தவறின்றித் தமிழ் எழுதுவோம்**
ஆசிரியர்	❖ **மா. நன்னன்**
முதற்பதிப்பு	❖ தி. வ. ஆ. 2021; சிலை; கி.பி. 1990 டிசம்பர்.
இரண்டாம் பதிப்பு	❖ தி. வ. ஆ. 2029; கன்னி; கி.பி. 1998 அக்டோபர்.
மூன்றாம் பதிப்பு	❖ தி. வ. ஆ. 2030; சுறவம்; கி.பி. 1999 சனவரி.
தாளின் தன்மை	❖ 11.6 கி.கி
நூலின் அளவு	❖ கிரௌன்
அச்சு எழுத்து அளவு	❖ 11 புள்ளிகள்
பக்கங்கள்	❖ 112
படிகள்	❖ 2000
விலை	❖ **உரூவா. 25.00**
ஒளியச்சுக் கோவை	❖ ஏகம் கணினியர், சென்னை - 2.
அச்சிட்டோர்	❖ மைக்ரோ பிரிண்ட், சென்னை - 106.
நூல் கட்டுமானம்	❖ தையல்
வெளியிட்டோர்	❖ ஞாயிறு பதிப்பகம், சென்னை - 15.

1. உள்ளுறை

1.	உள்ளுறை	3
2.	மூன்றாம் பதிப்பின் முகவுரை	5
3.	முன்னுரை	6
4.	வழக்குத் தமிழ்	11
5.	ஒய்வும் ஒழிவும்	12
6.	'இறும்பூது'	13
7.	முதலிய, ஆகிய, போன்ற	14
8.	போன்ற	16
9.	என் மகன்	17
10.	மற்றும்	19
11.	'சரிந்தான்'	20
12.	முகவரி	22
13.	10-இல், 10-ஆம்	24
14.	வேறுபாடு, மாறுபாடு	25
15.	ஆசிரியை கத்திவாக்கம்	27
16.	மக்கள் தொகை, தொழில் துறை	29
17.	அனைத்து இந்தியா	32
18.	ஒருமை, ஒற்றுமை	33
19.	குறிப்பாக	35
20.	கள்	36
21.	அரசினர் பள்ளி	38
22.	எல்லாரும்	40
23.	எத்தனை!	41
24.	அன்று - அல்ல	42
25.	%50	42
26.	அனுப்புக	44
27.	ஏது, தவிரவும்	47

28. மாநாடு ஏற்பாடுகள் 48
29. எது? என்ன? 49
30. 'கொழும்புவிலிருந்து' 51
31. அவரது-தமது 53
32. ஐநூறு - ஐந்நூறு 54
33. அலுப்பு - சலிப்பு 56
34. மரம் நடு விழா 58
35. உண்ணுதல் 59
36. நாகசுரம் 61
37. எய்தல்-எய்துதல் 62
38. அதுவோ அல்லது இதுவோ 64
39. காவிரி, காவேரி 65
40. கருப்பு - கறுப்பு 68
41. ஆன்றோரும்-சான்றோரும் 69
42. மேல்நிலை, மேனிலை 71
43. பேச்சுவார்த்தை நடத்தினார் 73
44. என்று அழைக்கலாம் 75
45. 'அகலல், அகற்றல்' 76
46. மயக்கம் தரும் தெளிவு 78
47. 'தலா' 81
48. சேமிப்பு 82
49. ''சிக்கனம்'' 84
50. ''கஞ்சத்தனம்'' 86
51. வறுமை 87
52. செல்வம் 89
53. உடைமை 91
54. அண்ணாவின் புதிய பழமொழி 93
55. சரியன்று; சரி 98

2. மூன்றாம் பதிப்பின் முகவுரை

இந் நூலின் முதற் பதிப்பு வழுக்குத் தமிழ் என்னும் பெயருடன் 1990-இல் வெளிவந்தது. அதன் பின்னர் உடனடித் தேவை யிருந்தும் இரண்டாம் பதிப்பு வெளிவரவில்லை. அது 1998 அக்டோபரில்தான் வெளிவந்தது. இதன் மூன்றாம் பதிப்பு மிக விரைவில் அஃதாவது 1999 சனவரியிலேயே வெளிவருவது கண்டு மகிழ்கிறோம். இதைத் தொடர்ந்து மேலும் பல பதிப்புகள் வரும். இத்துடன் வெளிவரும் தடம் புரள்கிறதா தமிழ் உரைநடை என்னும் மொழி மரபு பற்றிய மற்றொரு வகை நூலும் தொடர்ந்து பல பதிப்புகள் வெளிவரும் என நம்புகிறோம்.

இவ் விரு நூல்களையும் சேர்த்தே வாங்கிப் படிப்பது பொருத்த மானது. இவை தமிழ் மாணாக்கர்க்கும், தமிழ் எழுத்தாளர்க்கும் பயன்பட வேண்டும் எனக் கருதி வெளியிடப் பெறுகின்றன. இவற்றில் இடம் பெற்றுள்ளவை கருத்து மாறுபாட்டுக் காளாகா விடினும் கருத்து வேறுபாட்டுக்கு ஆளாக நேரக் கூடும் என்பது எமக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் மொழி மரபு பேணப் பெற வேண்டும் என்னும் வேணவாவினால் இது வெளியிடப் பெறுகிறது. இந் நூல்களைப் படிப்போர் இவற்றில் இடம்பெற்றுள்ள கருத்துகள் குறித்து ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்; அதை யாம் ஆவலுடனும், நம்பிக்கையுடனும் எதிர்பார்க் கிறோம்; இயலுமாயின் அப் பெருமக்கள் தம் கருத்து வேறுபாட்டை எமக்குந் தெரிவிக்கலாம்; அது பயன் விளைக்கும் செயலுமாகும். இவ் விரு நூல்களின் முன்னுரைகளைத் தவறாமல் படிக்க வேண்டு மென்பது எமது வேண்டுகோள்.

இதன் ஈற்றிலுள்ள சரி, சரியன்று என்பதைப் போன்ற விரி வானதும் முழுமையானதுமாகிய பேரகர முதலி யொன்றும்; இந் நூல்கள் இரண்டிலும் உள்ள எடுத்துக் காட்டுகளும் விதி விளக்கங்களும் போன்றன அடங்கிய முழுமை வாய்ந்த மாபெரும் மொழி விளக்கவியல் நூல் ஒன்றும் வெளிவர வேண்டும் என்பது எமது பேரவாலாகும்.

இவை பற்றித் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களும் சிறப்பாகத் தமிழ்ப் பல்கலைக் கழகமும் ஆழ்ந்து எண்ணிப் பார்க்கலாம்.

மா. நன்னன்.

3. முன்னுரை

மொழி தன் கடமையைச் சரியாகச் செய்ய வேண்டு மானால் அதன் மரபு காப்பாற்றப்படுவது இன்றியமையாத தாகும். தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர் தம் மரபிய லுரையில் ''செவிப்புலனாய ஓசை கேட்டுக்கட் புலனாய பொருளுணர்வதெல்லாம் மரபு பற்றாக அல்லது மற்றில்லை என்றவாறு'' என்று உரைக்கிறார். நாம் சொற் களைக் காதால் கேட்டு அவற்றால் குறிக்கப்படும் பொருள் களை உணர்வது மரபை அடிப்படையாகக் கொண்டுதானே யொழிய வேறில்லை என்பது பேராசிரியரின் கருத்து. மரத்தை மரம் என்றும், மாட்டை மாடு என்றும் நாம் கூறுவனவெல்லாம் இம் மரபினால்தான். அதே போல் வருதல் என்றும் போதல் என்றும், விழித்தல் என்றும், உறங்குதல் என்றும் நாம் கூறுவன வெல்லாம் மொழி மரபின் அடிப்படையில் தான்.

மரத்தை மாடு என்றும், மாட்டை மரம் என்றும், வருதலைப் போதல் என்றும், போதலை வருதல் என்றும் மாற்றக் கூடாதா? ''பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல'' என்று பவணந்தி முனிவர் கூறியிருக்கிறாரே என்றால் அது இதற்காகக் கூறப்பட்டதன்று. இயல்பாகச் சில பழையன கழிவதும், சில புதியன புகுவதும் விலக்கத் தக்கன வல்ல என்பதுதான் பவணந்தியாரின் கருத்தே தவிர நம் அறியாமையாலோ, நம் தோதுக் கேற்பவோ, ஒன்றை மாற்றவோ, விலக்கவோ, சேர்க்கவோ, அவ் விதி இடம் தராது என்பது எம் கருத்து. அவ்வாறின்றி என் விருப்பப்படி நான் சேர்த்தல், விலக்கல், திரித்தல் போன்றவற்றைச் செய்வேன் என்று எழுதக் கூடிய வாய்ப்பையும், தோதையும் பெற்றுள்ள ஒருவர் செய்யத் தொடங்கினால் மொழி என்னவாகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மரத்தை மாடு என்று மாற்றினால் கேட்பவர்களுக்கு அது எப்படிப் புரியும்?

மாற்றுவ தென்றால்கூட அதை யார் மாற்ற வேண்டும்? மருந்தில் மாறுதல் செய்ய வேண்டுமானால் அதைச் செய்ய வல்லவர் மருத்துவரே யன்றி நோயாளிகள் அல்லர். கட்டு மான முறையில் மாறுதல் செய்ய வேண்டுமானால் அதைச் செய்யும் உரிமை அதில் வல்ல பொறிஞருக்கு உண்டே தவிரக் குடி இருப்பவர்களுக்கோ, கட்டடத் தொழிலாளி களுக்கோ இல்லை. நோயாளியினாலும், கட்டடத் தொழிலா ளியினாலும் செய்யப்படும் மாற்றங்கள் என்னென்ன விளைவு களை ஏற்படுத்தும் என்பது யாருக்குத்தான் விளங்காது! இவ்வாறு செய்யப்படும் மாற்றத்தையும் தக்கார் பலருங் கூடி முடிவெடுத்துச் செய்வதோடு அவ்வாறு செய்த பின் அதனை அனைவரும் பின்பற்ற வேண்டுமே யொழிய ஆளுக்கொரு மாறுதலைச் செய்து அதனை அவரவர் மட்டுமே பின்பற்றுவது நன்றோ? ஆகவே மரபு காக்கப்பட வேண்டும் என்று பேராசிரியர் கருதுகிறார். அதற்குக் காரணம்,

''மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்''

(தொல், பொருள், மரபு 91)

என்று தொல்காப்பியம் கூறுவது தான். மரபு நிலை திரிந்து வேறுபட்டால் சொற்கள் எல்லாம் பொருள் மாறி வெவ் வேறாகும் என்பது தொல்காப்பியரின் கருத்து.

ஆனால் இன்று பலர் இம் மரபைப் பொருட்படுத்துவ தாகத் தெரியவில்லை. எழுதுவதற்கு ஏடும் எழுதுகோலும் கிடைத்துப் படிப்பதற்கும் சிலர் கிடைத்து விட்டால் எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். கருத்துரிமை யையும், எழுத் துரிமையையும் இந்திய அரசமைப்பு (Constitution of India) மக்கள் எல்லாருக்கும் வழங்கியிருக்கிறது. ஆனால் மொழி மரபை மீறுவதற்கு அவ் வுரிமை துணை செய்யுமா என்பது எமக்குத் தெரியாது. மொழி மரபில் காணப்படும் சில

மீறல்களைச் சுட்டிக் காட்டி மரபைக் காக்க முயல்வதே இம் முயற்சியின் நோக்கமாகும்.

ஒரு காலத்தில் எழுத்து, புலவர் கையிலிருந்தது. அப்போது மொழி மரபு பெரும்பாலும் பேணப்பட்டே வந்துள்ளது. ஆனால் மக்களாட்சிக் காலமாகிய இக் காலத்தில் எல்லார்க்கும் கல்வி என்னும் உரிமை நம் அரசமைப்பில் விதிக்கப்பட்டுக் கல்வி கற்கும் வாய்ப்பும், எழுதும் உரிமையும், படிக்கும் வாய்ப்பும் குடிமக்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன. இக் காலத்தில் மரபு மீறலைத் தடுத்து நெறிப்படுத்த வேண்டியது அக் காலத்தினும் தேவையானதா யிருக்கிறது. பண்டைக் காலத்து எழுத்துரிமை உரியவரால் இழுத்துச் செல்லப்படும் கை வண்டி யோட்டம் போல் இருந்தது. அக் காலத்தில் அவ் வுரிமையாளர் இங்கே போக வேண்டும்; இங்கே திரும்ப வேண்டும்; இங்கே நிறுத்த வேண்டும் என்பன போன்றவற்றை யெல்லாம் நன்கு அறிந்து அதனை இழுத்துச் செல்வார். அவர் தம் கைகளால் இழுத்துக் கொண்டு தம் கால்களால் நடந்து செல்லும் உணர்வு பிறழாதவ ராதலால் அவ் வண்டி யோட்டம் செம்மையாகவே இருக்க முடிந்தது. இன்றைய எழுத்துரிமை திருவாரூர்த் தேரோட்டம் போல் நடைபெறுகிறது. அதுவும் அறிவியல் கருவிகளின் துணை யில்லாமல் ஆயிரக்கணக்கான மக்களால் ஈர்க்கப்படும் தேரோட்டம் போல் இருக்கிறது. எல்லாரும் எழுதுகிறார்கள்; ஏராளமாக எழுதுகிறார்கள்; தேவையானவற்றையும், பயனுள்ள வற்றையும் எழுதுகிறார்கள் என்பதில் அய்யமில்லை. ஆனால் எல்லோராலும் இழுக்கப்படும் தேரோட்டத்திற்கு அதனை நெறிப்படுத்தும் முட்டுக் கட்டை (தடுப்பதற்காக அன்று) இன்றியமையாததாக இருப்பது போல் பல்லோராலும் கையாளப்படும் எழுத்து நடைக்கும் மரபு விதிகள் இன்றி யமையாதன வாகும்.

இதற்கு மற்றோர் உவமையையும் காணலாம். மேடு பள்ளங்களையும், திருப்பங்களையும், குறுக்கீடுகளையும், குறுகலான பாதைகளையும், ஒலி எழுப்பக் கூடாது என்பது போன்றவற்றையும் குறிக்கும் பல்வேறு சாலைக் குறிகளும், சாலை விதிகளும் நடந்து செல்வோருக்கு இன்றியமையாதவை அல்ல. ஆனால் ஊர்திகளில் விரைந்து ஓடும் உரிமை யாளருக்கு அச் சாலை விதிகள் இன்றியமையாதன என்று யாம் கூறியா மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்? அது போல் பற்பலராலும், மிகுதியாகவும் எழுதப்படும் இக் காலத்திற்கு மொழி மரபு இன்றியமையாதவை என நாம் நம்புகிறோம்.

இடப் பக்கமாக ஓட்டுதல் என்பது சாலை விதிகளுள் ஒன்று. பச்சை விளக்கு எரிந்தால் செல்ல வேண்டும்; சிவப்பு விளக்கு எரிந்தால் நிற்க வேண்டும் என்பது மற்றொரு விதி. இவ் விதிகளை ஊர்தி ஓட்டுபவர் சரியாகவும் முழுமையாகவும் பின்பற்ற வேண்டு மன்றோ? அவ் விதிகள் ஊர்தி ஓட்டுநரால் மீறப்பட்டால் ஏற்படும் அழிவுகளைப் போல் மொழி மரபு விதிகள் எழுத்தாளர்களால் மீறப்படுவதால் கருத்து அழிவும், குழப்பமும் ஏற்படுமன்றோ? அதனாற்றான் மொழியில் மரபு காக்கப்பட வேண்டும் என்று தொல்காப்பியர் முதல் இக்காலப் புலவர் வரையில் கூறிக் கொண்டிருக்கிறோம். இன்று பலரும் ஆங்கில நடை, ஆங்கிலத் தொடரமைப்பு, ஆகியவற்றையே தழுவி எழுதத் தொடங்கி விட்டனர். இது திருத்தப்படாவிடில் எதிர் காலத்தில் ஆங்கில உரை நடையே தமிழ் நடை முதலியவற்றுக்குத் தாய்; தமிழுக்குத் தனி நடை முதலியன இல்லை என்று நிலை நாட்டப்படவும் நேருமன்றோ?

இப்படிப்பட்ட கருத்துகளைச் சான்றுகள் மூலம் யாம் ஒரு கூட்டத்தில் பேச நேர்ந்தபோது அதனைச் செவியுற்ற இன்றைய தமிழக முதல்வர், தமிழ வேள், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அத் தகைய கருத்துகளை எழுதி வெளி

யிடுமாறு எமக்குக் கூறியதோடு ''குங்குமம்'' ஏட்டில் அவை வெளி வரவும் ஏற்பாடு செய்தார்கள். அதற் கிணங்க இந் நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளில் பெரும்பாலானவை குங்குமம் இதழில் தொடர்ந்து வெளியிடப்பட்டவையே. அதில் வெளியிடப் பெறாத சில கட்டுரைகளும் சில வானொலிக் குற்றுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இக் கட்டுரைகளிலுள்ள கருத்துகள் முற்றிலும் சரியானவை யென்றோ, அய்யம் திரிபுகளுக்கு இடமற்றவை என்றோ யாமும் கருதவில்லை; யாரும் கருதத் தேவையுமில்லை. மொழி மரபு பேணப்பட வேண்டும் என்னும் வேட்கையினால் வெளியிடப்பட்ட இக் கருத்துகளைத் தமிழ்ப் பண்ணையில் பாடுபடும் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதே எம் விருப்பமாகும். ஆகவே தமிழ்த் தொண்டர்கள் அனைவரும் இவை போன்றவற்றை எண்ணிப் பார்த்து ஏற்றவாறு செயல் பட்டார்களானால் அதுவே யாம் எதிர்பார்க்கும் பலனாகும்.

30.12.90 **மா.நன்னன்.**

4. வழுக்குத் தமிழ்

தலைப்பைப் பார்த்துவிட்டுப் பின்னர் இப் பகுதியைப் படிக்கத் தொடங்குவோர், இது என்ன புதிய தமிழ் என்று நினைக்கக் கூடும். அவர்கள் முத் தமிழுக்கும் அப்பாற்பட்ட நான்காந் தமிழோ? அப்படியு மிராதே! அறிவியல் தமிழைத்தானே சிலர் நாலாந் தமிழ் என்று காட்ட முற்படுகிறார்கள். ஒரு வேளை அச்சுப்பிழையாக இருக்குமோ? வழக்குத் தமிழ் என்பதை வழுக்குத் தமிழ் என்று தவறாக அச்சிட்டு விட்டார்களோ? என்றவாறு நினைத்துத் திகைத்துத் திண்டாட வைத்து விடக் கூடாது என்பதற்காகத் தரப்படும் சிறு விளக்கமே இங்கு முதலில் இடம் பெறுகிறது.

முன்னால் நடந்து செல்லு மொருவர் ஏதேனும் ஒரு காரணத்தால் வழுக்கி விழ நேர்ந்துவிட்டால் பின்னால் வருகிறவர்கள் ''ஓகோ, இந்த இடத்தில் இப்படி விழுந்து செல்வதுதான் நல்லது போலிருக்கிறது'' என்று நினைத்துத் தாமும் அங்கு விழும் வழக்கமுடைய நாடு நம் நாடு. ஆகவே, யாரேனும் ஒருவர் ஒரு சொல்லையோ தொடரையோ எக் காரணத்தாலாவது தவறாகப் பயன்படுத்திவிட்டால் பின்னர்ப் பலரும் அச் சொல்லையோ தொடரையோ அவ்வாறு தவறாகவே பயன்படுத்தத் தொடங்கிப் பின் வாழையடி வாழை போல் அத் தகைய தவறுகளைத் தொடர்ந்து பலரும் செய்து வருவது மரபாகவே ஆகிவிட்டது. அத் தவறான தமிழுக்குத்தான் இங்கு நாம் வழுக்குத் தமிழ் என்று குறி யிட்டுள்ளோம். இனிஅதற்குரிய சான்றுகள் சிலவற்றைத் தொடர்ந்து காண்போமா.

☆☆☆☆☆

5.ஓய்வும் ஒழிவும்

ஒரு நாள் எம் நண்பர் ஒருவர் எம்மைப் பார்த்து ''அய்யா நான் உங்களோடு சிறிது நேரம் பேசவேண்டு'' மென்றார். யாம், ''அதற்கென்ன தடை, எம் வீட்டுக்கு வாருங்களேன்; பேசுவோம்'' என்றோம். 'நீங்கள் எப்போது ஓய்வாக இருப்பீர்க ளென்று தெரிந்தால் அந் நேரத்தில் நான் தங்களிடம் பேச வரத் தோதாக இருக்கும்'' என்றார் அந்த நண்பர். உடனே நாம் அவரைப் பார்த்து ''நீங்கள் அப்படிப்பட்ட நேரத்தில் வந்தால் எமக்குப் பொருத்த மாக இராதே. யாம் வேலை செய்து களைத்து, அலுத்துப் போய் இளைப்பாறும் நேரத்தில் நீங்கள் எம்மிடம் பேச வந்தால் அது எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தீர்களா?'' என்றோம். அதைக் கேட்ட அந்த நண்பர் ''நான் அதைச் சொல்லவில்லை நீங்கள் வேறு முக்கிய அலுவல்களில் ஈடுபடாமல் இருக்கும் நேரத்தில் வந்தால் பொருத்தமாயிருக்குமே'' என்றுதான் நினைத்தேன் என்றார். ''ஓ! அப்படியா? அப்படியானால் ஓய்வாக என்னும் சொல்லை நீங்கள் ஒழிவாக என்னும் பொருளில் பயன் படுத்தியிருக்கிறீர்கள். ஓய்வு வேறு ஒழிவு வேறு என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை யென்று நினைக்கிறோம். ஓய்வு நேரம் என்பது வேலை செய்துகளைத்துப் போய் இளைப்பாறும் நேரம் என்னும் பொருளுடையது. 'ஒழிவு நேரம்' என்பது எந்த வேலையும் இல்லாமையால் சும்மா இருக்கும் நேரம் என்னும் பொருளுடையது. ஆகவே ஒழிவாக இருக்கும் போது வந்தால் நன்றா யிருக்கும் என்று நீங்கள் கருதி அதை அவ்வாறு சொல்லியிருக்க வேண்டும்'' என்று கூறினோம். அதனாற்றான் நாம் ஓய்வும் ஒழிவுமில்லாமல் பாடுபடுகிறோம் என்றும் 'ஓய்ச்சலும் ஒழிச்சலும் இல்லாமல் பாடுபடுகிறார் அவர்' என்றுங் கூறுகிறோம். அப்படிப்பட்டவர்களுக்கு ஓய்வு நேரமென்றும், ஒழிவு நேரமென்றும் எதுவுமே இல்லாமலிருக்கும். வேறு சிலருக்கு இந்த இரண்டு நேரம் மட்டுமே இருக்கும். அத்தோடு

இப்படிப்பட்டவர்களுக்கு எது ஓய்வு, எது ஒழிவு என்று தெரியாமலுமிருக்கும். தமிழகத்தின் உட் பகுதிகளில் வாழும் கல்வியறிவு குறைந்த தமிழர் பலர் இதனைப் பிழையின்றிப் பயன்படுத்துவது கண்டு இறும்பூதெய்துகிறோம்.

☆☆☆☆☆

6. 'இறும்பூது'

இச் சொல்லைப் பொது மக்களோ, போதிய தமிழறிவு பெறாதவர்களோ பயன்படுத்த மாட்டார்கள். தமிழ் மொழி யறிவு பெற்றவர்களும், நல்ல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென்று நினைப்பவர்களும் இதனைப் பயன்படுத்தக் காண்கிறோம். ஆனால் அவர்களுள்ளும் இதனைச் சரியான பொருளில் பயன் படுத்துவோர் அரியர்.

''திராவிட முன்னேற்றக் கழகம் அண்மையில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் மா பெரும் வெற்றி பெற்றதைக் கண்டு நான் இறும்பூதெய்துகிறேன்'' என்று ஒருவர் கூறினா ராயின் அவர் நம் இன எதிரியாயிருப்பார்; அல்லது நாம் வெற்றி பெற மாட்டோம் என்று யாராரோ எதற்காகவெல்லாமோ கூறியதைக் கேட்டு நம்பிய பேதையராக இருப்பார் என்றுதான் கருத முடியும்.

ஒருவர் எம்மிடம் வந்து 'அய்யா நீங்கள், நலமுடனிருப் பதைக் கண்டு இறும்பூ தெய்துகிறேன்' என்று கூறினால் நாம் அவரைப் பார்த்து 'ஏனைய்யா, நாம் கடுமையான நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாயிருப்போம் என்று நினைத்து வந்தீரா! என்று தான் வினாவுவோம்.

ஏனென்றால் 'இறும்பூது' என்னும் சொல்லுக்கு வியப்பு ஆச்சரியம் என்பனதாம் பொருள்! ஆகவே தி.மு.க.விடம் நல்லெண்ணமும், அன்பும் கொண்ட அறிவாளிகள் அதன் ஈடற்ற வெற்றியைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன் என்று

எப்படிக் கூற முடியும்? அதே போலத்தான் யாம் நலமுடன் வாழ்வதை விரும்பும் யாரும் யாம் நன்றாயிருப்பதைக் கண்டும் அப்படிப் பேசியிருக்க மாட்டார்கள்.

உண்மை என்ன தெரியுமா? அவ் விரு வகையினரும் இறும்பூது என்னும் சொல்லுக்கு மகிழ்ச்சி என்று பொருள் கொண்டுதான் அப்படிப் பேசியிருக்கிறார்கள். யாரோ வழுக்கிய இடத்தில் இவர்களும் வழுக்கி விழுந்திருக்கிறார்கள்.

☆☆☆☆☆

7. முதலிய, ஆகிய, போன்ற

மேலே உள்ள மூன்று சொற்களும் எல்லோராலும் மிகுதியாகப் பயன் படுத்தப்படுகின்ற சொற்களாகும்.

இவை மூன்றும் பொருள் வேறுபாடற்றவை போலவும், ஏறத்தாழ ஒரே பொருளுடைய மாறுபாடற்ற சொற்கள் போலவும் பலருக்குத் தோன்றும். அதனாற்றான் இச் சொற்களைப் பலரும் தவறாகவே ஆள்கின்றனர்.

''சேரன், சோழன், பாண்டியன் முதலிய தமிழ் வேந்தர்கள் தமிழகத்தை ஆண்டனர். கலைஞர் குறளோவியம், சங்கத் தமிழ் முதலிய இலக்கியங்களைப் படைத்துள்ளார்'' இத்தகைய தொடர்கள் சரியானவை அல்ல. இவை முறையே, 'சேரன், சோழன், பாண்டியன் ஆகிய தமிழ் வேந்தர்கள் தமிழகத்தை ஆண்டனர். கலைஞர் குறளோவியம், சங்கத் தமிழ் போன்ற இலக்கியங்களைப் படைத்துள்ளார்.' என்று இருப்பதே பொருத்தமாகும். இப்போது இம் மூன்று சொற்களுக்கும் இடையிலுள்ள நுட்பமான வேறுபாடு இதைப் படிப்போர்க்கு விளங்கியிருக்கும் என்று கருதுகிறோம்.

'முதலிய' என்னும் சொல் முதலாக உடைய அல்லது முதலாவதாக உள்ள என்பன போன்ற பொருள் உள்ள சொல்லாகும். பலவற்றை வரிசையாகச் சொல்ல நேரும் போது

எல்லாவற்றையும் சொல்லாமல் அவற்றில் முதலிலுள்ள ஒன்றை மட்டுஞ் சொல்லி மற்றவற்றைச் சொல்லாமல் குறிப்பிடுகின்ற இடங்களில் மட்டும் முதலிய என்னும் சொல்லைப் பயன்படுத்தலாம். கலைஞர் குறளோவியம் முதலிய இலக்கியங்களைப் படைத்துள்ளார் என்று சொல்லுவதே சரி. கலைஞர் ஏராளமான இலக்கியங்களைப் படைத்திருக்கிறார். அவற்றை யெல்லாம் இங்கே விரிவாக எழுத முடியவில்லை ஆகவே அவைகளில் ஒன்றை மட்டும் குறிப்பிட்டு 'முதலிய' என்னும் சொல்லைப் பயன்படுத்தி அத் தகவலை நாம் தந்துவிடுகிறோம். எனவே பலவற்றில் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்கின்ற இடங்களில் மட்டும் முதலிய என்னும் சொல்லைப் பயன்படுத்தலாம்.

தமிழ்நாட்டு வேந்தர்கள் மூவர்தாம். அவர்கள் சேரன், சோழன், பாண்டியன் என்போராவர். மூன்று பேர் உள்ள வரிசையில் மூவரையும் சொல்லிவிட்டுப் பிறகு முதலிய என்னும் சொல்லையும் பயன்படுத்தினால் வேறு சிலரையும் அங்குக் குறிப்பிட வேண்டும். அங்குக் குறிப்பிடத் தக்கார் அம் மூவரை அன்றிப் பிறர் இல்லாத காரணத்தால் அது தவறாகும். ஆகவே அத்தகைய இடங்களில், சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் குறிப்பிட வேண்டிய இடங்களில் ஆகிய-ஆகியவை என்பன போன்ற வடிவங்களைப் பயன்படுத்த வேண்டும்.

ஒன்றை மட்டும் சொல்லாமலும், எல்லாவற்றையும் சொல்லாமலும் சிலவற்றை மட்டும் சொல்கின்ற இடங்களில் 'போன்ற' என்னும் சொல்லையும் அதன் பிறவ்டிவங்களையும் பயன் படுத்தலாம்.

சான்றாகக் கலைஞர் பராசக்தி, மந்திரி குமாரி, நீதிக்குத் தண்டனை, பாசப் பறவைகள் போன்ற திரைப்படங்களை உருவாக்கி இருக்கிறார் என்று குறிப்பிடுவது பொருத்தமான தாகும்.

☆☆☆☆☆

8. போன்ற

கலைஞர், பராசக்தி, மந்திரி குமாரி, நீதிக்குத் தண்டனை, பாசப் பறவைகள் போன்ற திரைப் படங்களை உருவாக்கி யிருக்கிறார்.

தென்னை, மா, பலா, எலுமிச்சை போன்ற மரங்களுக்குக்கூட உரமிடுதலும் நீர்ப் பாய்ச்சுதலும் தேவையாகும்.

மேலேயுள்ள இரு தொடர்களும் பிழையில்லாமல் இருக்கின்ற னவா என்று படித்துப் பாருங்கள். ஒரு முறைக்கு இரு முறை அல்லது மும் முறைகூடப் படித்துப் பாருங்கள். ஏதாவது குறைபாடு தெரிகிறதா என்று நன்கு கவனித்துப் பாருங்கள்.

அவ் விரு தொடர்களிலும் 'போன்ற' என்னுஞ் சொல் எதனோடு தொடர்பு கொள்கிறது என்பதை ஆழ்ந்து எண்ணிப் பாருங்கள். முதல் தொடரில் 'போன்ற' என்னும் அச் சொல் பாசப் பறவைகள் என்பதோடு மட்டுந்தானே தொடர்பு கொள்ள முடியும். அதே போல் இரண்டாம் தொடரில் எலுமிச்சை என்னுஞ் சொல்லோடு மட்டுந்தானே தொடர்பு கொள்ள முடியும். அப்படியானால் அத் தொடர்களுக்கு முறையே கலைஞர், பராசக்தி, மந்திரி குமாரி, நீதிக்குத் தண்டனை என்னும் படங் களையும் பாசப் பறவைகள் போன்ற வேறு சில படங்களையும் உருவாக்கியிருக்கிறார் என்றும், இரண்டாம் தொடருக்குத் தென்னை, மா, பலா ஆகிய மரங்களுக்கும் எலுமிச்சை போன்ற வேறு சில மரங்களுக்கும் உர மிடுதலும், நீர் பாய்ச்சுதலும் தேவையாகும் என்றும்தாமே பொருள் கொள்ள வேண்டி வரும். பாசப் பறவைகளை மற்ற படங்களிலிருந்தும், எலுமிச்சையை மற்ற மரங்களிலிருந்தும் வேறுபடுத்தி அவ் விரண்டையும் போன்ற வேறு சிலவற்றைச் சுட்டுவதற்குச் சிறப்புத் தகுதி எதுவும் அந்த இடத்தில் கருதப்படாதபோது அத் தொடர்கள் குறையுடையன வாகவே இருக்க முடியும்.

ஆகவே அவ் விரு தொடர்களிலும் 'போன்ற' என்னுஞ் சொல்லைப் பயன்படுத்துவதற்கு முன்னால் 'என்பன' என்னுஞ் சொல்லைச் சேர்த்து எழுதுவது நல்லது. அஃதாவது கலைஞர், மந்திரி குமாரி, பராசக்தி, நீதிக்குத் தண்டனை, பாசப் பறவைகள் என்பன போன்ற திரைப்படங்களை உருவாக்கியிருக்கிறார். தென்னை, மா, பலா எலுமிச்சை என்பன போன்ற மரங்களுக்கும் உரமிடுதலும், நீர்ப் பாய்ச்சுதலும் தேவையாகும்.

☆☆☆☆☆

9. என் மகன்

''எனது மகன் பாரிக்கும் மெய்யாத்தூர் வேலப்பன் அவர்களது மகள் முல்லைக்கும் நடைபெறும் திருமணத்திற்குத் தாங்கள் தங்கள் குடும்பத்தாருடன் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.''

மேற்காணப்படும் பகுதியில் பொதுவாகத் தவறு ஏதும் இருப்பதாகத் தெரியாது. ஆனால் இதில் ஒரு பெரும் தவறு இடம் பெற்றிருக்கிறது. அது, எனது, அவர்களது என்னும் சொற்களில் உள்ள அது என்பது ஆறாம் வேற்றுமை உருபு ஆகும். அதற்கு உரிய பொருள் கிழமைப் பொருள். அஃதாவது உரிமையைக் குறிக்கும் பொருள்.

ஒருவர் தம்முடைய சொத்துகளைக் குறிப்பிடும் போது அது என்னும் உருபைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக எனது வீடு, எனது நிலம், எனது வண்டி, எனது பணம் என்பன போல வரும் இடங்களில் ஆறாம் வேற்றுமை உருபைப் பயன் படுத்தலாம்.

எனது மனைவி, எனது கணவன், எனது மகன், எனது மகள், எனது தந்தை, எனது மாமா என்பன போன்ற இடங்களில் அது என்னும் உருபைப் பயன்படுத்துவது தமிழ்ப் பண்பாட்டிற்கு மாறானதாகும். தமிழ்ப் பண்பாட்டில் மக்களுக்கு எவையேனும்

அஃறிணைப் பொருள்கள்தாம் உரிமையுடைய சொத்துகளாக இருக்க முடியுமே தவிர உயர்திணைப் பொருள்கள் சொத்துகளாக இருக்க முடியாது. கணவனுக்கு மனைவி சொத்தாக இருக்க முடியாது. தந்தைக்கு மக்கள் சொத்தாக இருக்க முடியாது. அவர்களுக்கு இடையிலே இருப்பது உறவுதானே தவிர சொத்துரிமை அன்று.

ஒருவர் தம் நிலத்தை விற்கலாம், குத்தகைக்கு விடலாம், அடகு வைக்கலாம். ஆனால் ஒருவன் அல்லது ஒருத்தி, தன் மனைவியையோ, கணவனையோ, உடன் பிறந்தாரையோ, தமக்குப் பிறந்த மக்களையோ விற்றல் முதலியன செய்ய முடியாது.

இக் கருத்தைப் பின்வரும் தொல்காப்பிய நூற்பா தெளி வாக்குகிறது:

அது வென் வேற்றுமை
உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபு கெடக் குகரம் வருமே.

தொல்-சொல்-வே.ம.*11*

இதன்படி அது என்னும் உருபு வரக்கூடிய உயர்திணைத் தொகை நிலைத் தொடர்களுக் கெல்லாம் 'கு' என்னும் உருபுதான் வரவேண்டும். எனது மனைவி என்பது போன்ற தொடர்களில் எனக்கு மனைவி, எனக்குக் கணவன், எனக்கு மகள் என்பன போல 'கு' உருபை அமைத்துச் சொல்வதுதான் சரி. அப்படிக் குறிப்பிடும் வழக்கம் இல்லாமையால் நமக்கு அங்கு 'கு' உருபைப் பயன்படுத்துவது பொருத்தம் அற்றது போல் தோன்றும். ஆகவே 'கு' உருபை அவ் விடங்களில் பயன்படுத்த விரும்பாவிட்டால் எந்த உருபையும் பயன்படுத்தாமலேயே வேற்றுமைத் தொகையாகவே குறிப்பிட்டு விடலாம். எடுத்துக் காட்டாக என் மகன், என் மகள், என் கணவன், என் மனைவி, என் மக்கள் என்பனவற்றைக் கூறலாம்.

☆☆☆☆☆

10. மற்றும்

''கணக்கு மற்றும் ஆங்கிலப் பாடங்களில் அவன் தேறவில்லை''.

''திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் மழை பெய்திருக்கிறது.

மேற்காணப்பெறும் இரு தொடர்களிலும் பயன்படுத்தப் பட்டிருக்கும் 'மற்றும்' என்னும் சொல் அங்குத் தேவையற்றது. தேவையற்ற அச் சொல் அங்கு இருப்பதால் அங்கு இருக்க வேண்டிய ஒரு சொல்லுக்கு வாழ்வு போய் விடுகிறது. மேலும் தமிழ் மொழியினுடைய ஒரு சிறப் பியல்பும் அழிந்து விடுகிறது.

இப்படி எழுதும் வழக்கம் அண்மைக் காலத்தில் தமிழில் மேற் கொள்ளப்பட்டு வருவ தாகும்: இப் புதிய வழக்கம் ஏற்பட்ட தற்குக் காரணம் நமக்குள்ள ஆங்கிலத் தொடர்புதான். ஆங்கிலத்தில் அண்டு (And) என்னும் சொல்லைப் பயன் படுத்துகிற நாம் அதே முறையில் அச் சொல்லை மொழி பெயர்த்து 'மற்றும்' என்னும் சொல்லாகத் தமிழில் பயன்படுத்தத் தொடங்கி விட்டோம். இந்த வழக்கம் பண்டைய தமிழ் இலக்கண இலக்கியங்களிலோ, இடைக் கால இலக்கண இலக்கியங்களிலோ, பிற்கால இலக்கண இலக்கியங்களிலோ இல்லை. இக் கால இலக்கியங்கள், செய்தித்தாள்கள், இதழ்கள், அலுவலகக் கடிதப் போக்குவரத்துகள் போன்றவற்றில் மட்டுமே இவ் வழக்கம் காணப்படுகிறது.

அச் சொல் தேவையற்றதாயின் அப் பொருளை வேறு எப்படித் தெரிவிக்க முடியும் என்றால் அதற்கு இலக்கிய இலக்கணங்களைத் தேடிப் போக வேண்டியதில்லை. கல்லாத தமிழ்ப் பொது மக்கள் அப்படிப்பட்டவற்றை எப்படிக் கூறுகிறார்கள் என்று பார்த்தாலே போதும்.

சான்றாக அவனும் நானும், நேற்றும் இன்றும், சோறும் குழம்பும் என்பனவற்றைக் காணலாம். மேலும் அவர்கள் 'உம்'

என்னும் அவ் விடைச் சொல்லைப் பயன் படுத்தாமலேயே அத்தகைய தொடர்களின் பொருள் சிறிதும் மாறாமல் வெளிப்படுத்துவதையும் காணலாம்.

சான்றாகப் பூரிக் கிழங்கு, இராப்பகல், வம்பு தும்பு போன்றவற்றைக் கூறலாம். இத் தொடர்களில் 'உம்' என்னும் இடைச் சொல் இல்லாமலேயே அச்சொல் இருந்தால் அங்கு என்ன பொருள் கிடைக்குமோ அதே பொருளை ஏனைய இரண்டு சொற்களும் சேர்ந்த சேர்க்கைச் சிறப்பால் எளிதாகவும் தெளிவாகவும் ஐயந் திரி பறவும் பெற்றுவிட முடிகிறது. ஆகவே 'உம்' போன்ற இடைச் சொற்களைப் பயன்படுத்தியும் அவ்விடைச் சொல் இல்லாமல் வரும் தொடர்களில் தொகை ஆற்றலாலும் பெறப்படும் பொருளை 'மற்றும்' என்னும் வேறொரு சொல்லைக் கொண்டு பெற வைக்க முயல்வது தேவைதானா? நல்லதுதானா? என்பதை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் 'மற்றும்' என்னும் சொல்லைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டிருந்தால் விரைவில், பூரி மற்றும் கிழங்கு, இட்டிலி மற்றும் சட்டினி என்றெல்லாம் கூட பேசவும் எழுதவும் வேண்டி வந்துவிடும்.

☆☆☆☆☆

11. 'சரிந்தான்'

புதிய கருத்துகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்து வதற்கு வழக்கத்தில் உள்ள பழைய சொற்கள் போதுமான வையாக இரா. உணர்வுகளில் நுட்பம். வேறுபாடு, திரிபு போன்றவை நிகழ்ந்து கொண்டே இருப்பதால் பழைய சொற்கள் சில, அவற்றை உணர்த்தும் திறன் குறைந்தனவாக இருக்கக் கூடும். அவற்றை முழுமையாகவும், தெளிவாகவும் உணர்த்து வதற்குச் சொற்களிலும் வேறுபாடுகள் தேவைப்படக்கூடும். எனவே, அத் தகு நிலையில் இலக்கியப் படைப்பாளர்கள் புதிய

சொற்களையும் வேறுபட்ட சில வடிவங்களையும் நாடுவது தவிர்க்க முடியாததுதான். அவ்வாறு தேவைப்படும் போது எழுத்தாளர்கள் அவற்றைத் தேவைக் கேற்ப ஆக்கிக் கொள்வது தேவையானதுதான். ஆனால் அவ்வாறு புதிய வடிவங்களையோ, வேறுபட்ட பழைய வடிவங்களையோ ஆளத் தொடங்கும் போது மொழி மரபு புறக்கணிக்கப்படக் கூடாது என்று யாம் கருது கிறோம். மொழியில் மரபு குறைந்தால் அல்லது சிதைந்தால் அதன் அடிப்படையே தகர்ந்து போய்விடும். ஒரு சொல் எவ்வாறு எப்பொருளில் நெடுங் காலமாகப் பயன் படுத்தப்பட்டு வருகிறதோ அச் சொல்லை அப்பொருளில் அவ்வாறே பயன்படுத்துவதுதான் மரபு. ஒவ்வொருவரும் அம் மரபை மீறித் தாம் தாம் விரும்பியபடி மொழியை மாற்றினால் ஒருவர் சொல்லுகிற கருத்து மற்றவர்க்கு விளங்காமல் போகவும் கூடும். சாலைகளில் இடப் புறமாகச் செல்ல வேண்டும், பச்சை விளக்கு எரிந்தால் செல்லலாம்; சிவப்பு விளக்கு எரிந்தால் நிற்க வேண்டும் - என்பன போன்றுள்ள விதி முறைகளை ஒவ்வொரு வரும் தத்தமக்கு ஏற்றவாறு மாற்றிக் கொண்டால் என்ன ஆகுமோ அது போன்ற நிலை, மொழி மரபு மாறினாலும் மொழித் துறையில் ஏற்படும் அன்றோ? அதனாற்றான் மொழிக்கு மரபு இன்றியமையாதது என்று அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள்.

புகழ் மிக்க, திறன் சான்ற பல எழுத்தாளர்கள் சரிதல் என்னும் சொல்லைப் புதிய பொருள் ஒன்றில் கையாள்கின்றனர். சரிந்தான், சரிந்தாள் என்பன போன்ற ஆட்சி பரவலாகக் காணப் படுகின்றது. ஆனால் அப் பெருமக்கள் அச் சொல்லினுடைய மரபு வழிப்பட்ட பொருளைப் புறக்கணித்திருக்கிறார்களோ என்று யாம் அய்யப்படுகிறோம்.

கதைத் தலைவனோ, தலைவியோ, மற்றவர்களோ கொந்தளிப்பான ஒரு சூழ்நிலையில் நிலை குலைந்தார்கள் என்றோ நிலைகுலைந்து வீழ்ந்தார்கள் என்றோ சுட்ட வேண்டிய இடங்களில் சரிந்தான் அல்லது சரிந்தாள் என்னும் சொல்லின்

வடிவங்களைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் சரிதல் என்னும் அச் சொல்லுக்கு அவர்கள் உணர்த்த விரும்புகிற பொருள் மரபுவழி நோக்கில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு மணல் மேடு சரியும்; கற் குவியல் சரியலாம்; அடுக்கப்பட்டுள்ள மரத்துண்டுகள்கூடச் சரியலாம். உயிரோடு நிற்கின்ற ஒரு மரம் சரிய முடியுமா? ஓர் ஆணோ, பெண்ணோ சரிந்து விழ முடியுமா? மரமோ மக்களோ சாய்ந்து விழுவது பொருத்தமாக இருக்கலாமே தவிர எப்படிச் சரிந்து விழ முடியும். கற்குவியல் முதலியன போல மரங்களின் கிளைகளோ, மாந்தரின் கை கால்களோ சரிய முடியுமா? ஆகவே, அத் தகைய இடங்களில் சரிந்தான் அல்லது சரிந்தாள் என்னும் சொல்லைப் பயன்படுத்துவது மரபு வழி முறைக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை.

☆☆☆☆☆

12. முகவரி

ஆங்கிலர்கள் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டு காலம் நம்மை ஆண்டனர். 1947-இல் ஆங்கில ஆட்சியை நாம் அகற்றினோம். ஆங்கிலர் ஆட்சியைத்தான் நம்மால் அகற்ற முடிந்திருக்கிறதே தவிர ஆங்கிலத்தின் ஆட்சியை நம்மால் அகற்ற முடியவில்லை. ஆங்கிலத்தின் உதவியை நாம் பெற்றுக் கொள்ளலாமே யன்றி ஆங்கிலத்தின் ஆட்சிக்கு நம் மொழியை அடிமைப்படுத்தி விடக்கூடாது. கண்ணுக்கு உதவியாகக் (தேவையானவர்கள்) கண்ணாடியைப் பயன்படுத்த வேண்டுமே தவிரக் கண்ணுக்குப் பதிலாகக் கண்ணாடியைப் பயன்படுத்த எண்ணக்கூடாது. ஆனால் நடை முறையில் ஆங்கிலத்தின் செல்வாக்கு எந்த அளவு தமிழ் மொழியையும் அதன் செல்வாக்கையும் குறைத்துவிடுகிறது என்பதை நாம் காண்கிறோம். அக் காட்சி, மொழி மரபை அழிய விடக்கூடாது என்று எண்ணுகிற எல்லோருக்கும் அச்சம் தருவதாகவே

இருக்கிறது. இப்போது நாம் ஒருவருடைய முகவரியை எழுதுகிற போதும், ஒருவரை அவர் பிறந்த ஊர் முதலியவற்றோடு சேர்த்துக் குறிப்பிட விரும்புகிற போதும் தமிழ் மரபைப் பெரும்பாலும் புறக்கணித்து வருகிறோம். ஆங்கிலத்தில் Ponnan, S/o.Mannan, No. 12, West street, Kavanur, Virudhachalam Taluk, South Arcot District, என்று குறிப்பிடும் மரபு உள்ளது. அதே மரபைத் தமிழிலும் பின்பற்றி எழுதுகிற வழக்கம் பெரு வழக்கமாகி நடைமுறையில் இருப்பதைக் காண்கிறோம். பொன்னன், த.பெ. மன்னன், 12, மேற்குத் தெரு, காவனூர், விருத்தாசலம் வட்டம், தென்னார்க்காடு மாவட்டம் என்று எழுதப்படுகிறது. இது ஆங்கில மரபே யன்றித் தமிழ் மரபு ஆகாது. இதை நாம் சுட்டிக் காட்டும் போது பலரும் ஆங்கில மரபு பொருத்தமாகவும், எளிதாகவும், பயன் மிக்கதாகவும் இருக்கிறது என்று கூறக் கூடும். அக் கூற்றுப் பழக்கத்தினால் நேர்ந்த மயக்கமே தவிர அதில் வலு ஏதுமில்லை. இன்றைக்கும் அஞ்சல் துறையில் பணியாற்றும் ஊழியர் முதலில் ஒரு மடலின் முகவரியில் எதைப் பார்க்கிறார் என்றால் அஞ்சல் குறியீட்டு எண்ணைத்தான். அதன் பிறகு அவர், அஞ்சல் நிலையம், ஊர், (மாவட்டம், வட்டம் இருந்தால் அவை) தெருப் பெயர், வீட்டு எண், தந்தை பெயர் ஆகிய வற்றைப் பார்த்து இறுதியாக உரியவரிடம் கொடுக்கும்போது தான் அவர் பெயரைப் பார்க்கிறார். ஆகவே, தமிழ் மரபுப்படி முகவரியை எழுதும்போது முதலில் அஞ்சல் குறியீட்டு எண்ணில் தொடங்கி இறுதியில் உரியவரின் பெயரை எழுதி முடித்தால் அது தமிழ் மரபுக்கும் அஞ்சல் துறை நடைமுறைக்கும் ஏற்றதாக இருக்கும் அன்றோ?

இவ்வாறே ஆங்கிலத்தில் 16th September 1990 என்று கூறும் மரபு உள்ளது. பெரும்பாலானவர்கள் அதே மரபைத் தமிழிலும் பின்பற்றி 16ஆம் நாள் செப்டம்பர் மாதம் 1990ஆம் ஆண்டு என்று எழுதுகிற வழக்கம் இருக்கிறது. ஆனால் இது தமிழ் மரபன்று. இன்றும் தமிழ் முறைப்படி ஆவணங்கள் எழுதுகிற

வர்களும், திருமண அழைப்புப் போன்றவற்றை எழுதுகிற வர்களும், சுக்கில ஆண்டு ஆவணித் திங்கள் 31ஆம் நாள் என்றுதான் எழுதுகிறார்கள். ஆகவே, ஆங்கில ஆண்டு முறையில் எழுதும்போதும் நம் தமிழ் மரபைப் பின்பற்றி 1990ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 16ஆம் நாள் என்று எழுதினால் எதுவும் கெட்டு விடாது என்று நினைக்கிறோம்.

☆☆☆☆☆

13. 10இல், 10-ஆம்

யாரோ, எதனாலோ, எப்போதோ வழுக்கி விழுந்த பின்வரும் இடங்களில் நாமும் நம் சோம்பலால் வழுக்கி விழுந்து கொண்டே இருக்கிறோம்.

10-ல், 10-ம், 10-வது, 10-கு

மேல் உள்ளவாறு எழுதுவது எவ்வளவு தவறு என்பது அவற்றை முழுமையாக எழுத்தால் எழுதிப் பார்த்தால் விளங்கும். 10-ல் இதை முழுமையாக எழுத்து வடிவத்திலேயே எழுதினால் பத்து+ல் என்று தானே எழுத வேண்டும். இதைப் படித்துப் பாருங்கள். பத்துல் என்று தானே வருகிறது. பத்தில் என்று நினைத்துக்கொண்டு எழுதும் நாம் பத்துல் என்று எழுதுகிறோமே இது முறைதானா? அவ்வாறே பத்தாம் வகுப்பு என்று எழுதும் போதும் 10-ம் என்று எழுதுகிறோமே, இதையும் மேற் கூறியவாறு முழுமையாக எழுத்து வடிவால் எழுதிப் பார்த்தால் பத்தும் வகுப்பு என்று தானே வருகிறது. ஆகவே இவற்றை முறையே 10-இல், 10-ஆம் என்றுதான் எழுதவேண்டும். எழுத்தில் முழுமையாக எழுதினால் இந்தச் சிக்கலே வராது. எண்ணும் எழுத்தும் கலந்து எழுதப்படும் போதுதான் இச் சிக்கல் வருகிறது. இவ்வாறே 10-கு என்று எழுதினால் பத்துகு என்றுதானே வரும். ஆகவே இதைச் சரியாக எழுத வேண்டுமானால் 10-க்கு என்று எழுதுவதே சரி. எனவே, இத் தகைய இடங்களில் நமக்கு அய்யம் வரும்போது

அப் பகுதியை முழுமையாக எழுத்து வடிவால் எழுதிப் பார்த்தால் அய்யம் தெளிந்து கொள்ளலாம்.

10-ஆம் வகுப்பு என்று எழுதுவதைக் கைவிட்டுச் சிலர் 10-வது வகுப்பு என்று எழுதுகிற வழக்கத்தை மேற்கொள் கின்றனர். இதை முழுமையாக எழுத்தால் எழுதினால் பத்து+வது வகுப்பு என்றுதானே வரும். ஆகவே, இதனைப் 10 ஆவது என்று எழுதுவதே சரி. இதில் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய மற்றொன்றும் இருக்கிறது. 10 ஆம் வகுப்பு என்று சொல்வதுதான் சரியானதே தவிர ஆம் என்பதற்கு மாறாக ஆவது என்பதைப் பயன்படுத்துவதற்கு மொழி மரபில் இடமில்லை. ஏனெனில் ஆகும் என்னும் சொல்தான் ஆம் என மருவி வழங்கப்படுகிறது. வது என்பது ஆவது என்பதிலிருந்து வந்ததென்று கூறவும் முடியாது. அப்படி ஒரு மரபு இருப்பதாகவும் தெரியவில்லை. அதன் பொருளும் ஏற்புடையதாகத் தோன்றவில்லை. ஆகவே ‘ஆவது’ அல்லது ‘வது’ என்று எழுதும் முறையை முற்றிலும் கைவிடுவதே பொருத்தமாகத் தெரிகிறது.

☆☆☆☆☆

14. வேறுபாடு, மாறுபாடு

வேறுபாட்டுக்கும், மாறுபாட்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைத் தெரிந்து கொள்ளாமல் மாறுபட்டு எழுதும் எழுத்துகளை நம்மால் காண முடிகிறது. இதைப் பலரும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனாலும் இன்னமும் மிகப் பலர் இதை உணராமல் பிழைபட எழுதியும் பேசியும் வருவதைக் காண்கிறோம். இதனால் தமிழ் மொழியின் மரபு கெடுகிறது என்று கூற முடியாவிட்டாலும் தமிழ்ச் சொற்களின் நுண் பொருள் திறன் அழிகிறது. ஒரு பக்கத்தில் பொருள் நுட்பத்திற்காகப் புதிய சொற்களைப் படைத்துக் கொண்டிருக்கிற நாம் மற்றொரு பக்கத்தில் பொருள் நுட்பத்தை உணர்த்தும் சொற்களின்

கூர்மையை மழுங்கடித்துக் கொண்டு வருகிறோமே இது சரிதானா?

வேறுபாடு என்பது பசும் பாலுக்கும், எருமைப் பாலுக்கும் இடையே யுள்ளது; அல்லது மாட்டுப் பாலுக்கும், ஆட்டுப் பாலுக்கும் இடையே யுள்ளது; அல்லது பாலுக்கும், நீருக்கும் இடையே யுள்ளது என்று கூறலாம். ஆனால் மாறுபாடு என்பது மாடு, ஆடு போன்றவற்றின் பாலுக்கும், கள்ளிப்பாலுக்கும் இடையே உள்ளது என்பதை நாம் அறிய வேண்டும். நீருக்கும், நெருப்புக்கும் இடையிலே உள்ளது மாறுபாடு என்றும் கொள்ளலாம். வேறுபாடு என்பதை இன்றைய பேச்சுத் தமிழில் வித்தியாசம் என்றும் சொல்லலாம். மாறுபாடு என்பதை முரண்பாடு என்னும் வேறொரு சொல்லால் சுட்டிக் காட்டலாம்.

என்ற, என்னும் ஆகிய இரண்டு சொற்களுக்கும் இடையே உள்ள நுட்பமான வேறுபாட்டையும் நம்மில் பலர் புறக்கணித்து விடுகிறோம். என்ற என்பது இறந்த காலத்தையும், என்னும் என்பது நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றையும் குறிக்கும். 'கரிகாலன் என்ற அரசன்' என்று கூறினால் இப்போது அவனைக் கரிகாலன் என்று யாரும் குறிப்பிடுவதில்லை என்று பொருள் ஏற்படும் அன்றோ? ஏனென்றால் என்ற என்னும் சொல்லுக்கு என்று சொன்ன' அல்லது 'என்று சொல்லப்பட்ட' என்பதுதான் பொருள். ஆகவே, 'கரிகாலன் என்னும் அரசன்' என்று குறிப்பிட்டால் அம் மன்னனை நாம் முக் காலத்திலும் கரிகாலன் என்றே குறிப்பிடும் முறை பொருத்தமாக அமையும். என்னும் எனும் சொல்லுக்கு 'என்று சொல்லப்படுகிற' அல்லது 'என்று சொல்லப்படும்' என்பது பொருள் ஆகும். என்னும் என்பதை எனும் என்று ஆள்வதும் சரியானதே.

''திருவள்ளுவர் தான் எழுதிய திருக்குறளில் தனக்குத் தோன்றியவாறு கருத்துகளைக் கூறவில்லை'' என்னும் தொடரில் உள்ள **'தான்' 'தன்'** என்னும் இரண்டு இடைச்சொற் களும் அங்குப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்ற சொற்கள்

ஆகும். அவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்த வேண்டு மானால் ''திருவள்ளுவன் தான் எழுதிய திருக்குறளில் தனக்குத் தோன்றியவாறு கருத்துகளைக் கூறவில்லை'' என்று குறிப்பிட லாம். திருவள்ளுவர் என்று அவரை உயர்வுப் பன்மையோடு குறிப்பிட்டுவிட்டுத், 'தான்' 'தன்' என்று உயர்வற்ற ஒருமைக் கேற்ற சொல்லால் குறிப்பிடுவது ஒருவரை 'வாருங்கள்' என்று அழைத்துவிட்டு 'உட்காருடா' என்று சொல்வது போல் இருக்கிற தன்றோ? ஆகவே, ''திருவள்ளுவர் **தாம்** எழுதிய திருக்குறளில் **தமக்குத்** தோன்றியவாறு கருத்துகளைக் கூறவில்லை'' என்று கூறுவதே பொருத்தமாகும்.

☆☆☆☆☆

15. ஆசிரியை கத்திவாக்கம்

''அன்பார்ந்த விழாத் தலைவரவர்களே, மரியாதைக்குரிய தலைமை **ஆசிரியை, கத்திவாக்கம் அவர்களே,** அருமை **மாணவர்களே, மாணவிகளே** உங்கள் அனைவர்க்கும் என் **முதற்கண்** வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

சொற்பொழிவாளர் ஒருவரின் மேலுள்ள முன்னுரையை ஒரு முறைக்கு இரு முறை அல்லது மும் முறை கூர்ந்து நோக்குங்கள். அதில் ஏதாவது குறைபாடு அல்லது தவறு இருக்கிறதா என்பதைப் பாருங்கள். அதன்பின் தொடர்ந்து படியுங்கள்.

அப் பேச்சாளரின் துவக்க உரையில் தலைமை யாசிரியை என்று அப் பள்ளியின் தலைமைப் பொறுப்பில் இருப்பவரைக் குறிக்கிறார். அப் பள்ளியின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் ஒரு பெண்மணிதான். ஆகவே, அவரைத் தலைமை யாசிரியை என்று குறிப்பிடுவது சரி தானே என்று உங்களுக்குத் தோன்றும். அப்படியானால் வேறொரு பள்ளியின் தலைமைப் பொறுப்பில் ஓர் ஆண் இருப்பாராயின் அவரை இதே பேச்சாளர் தலைமை யாசிரியன் என்று கூறுவாரா? எப் பேச்சாளரும் அவ்வாறு விளிக்க

மாட்டார் என்பது உறுதி. ஏனெனில் தலைமையாசிரியன் என்று அவரைக் குறிப்பிடுவது மரியாதைக் குறைவாகும் என்று அவர் நினைப்பார். ஆனால் பெண் தலைமை யாசிரியரை மட்டும் தலைமை யாசிரியை என்று குறிப்பிட்டால் அங்கு மரியாதைக் குறைவு ஏற்படும் என்று பலர் கருதுவதே யில்லை. தமிழில் ஆண், பெண், பலர் என்று உயர்திணைக்கு மூன்று பால்கள் உள்ளன. அவற்றுக்கு முறையே ஆசிரியன், ஆசிரியை, ஆசிரியர் என்பனவற்றை எடுத்துக் காட்டுகளாகத் தரலாம். ஆணையோ பெண்ணையோ உயர்வு அல்லது மரியாதையோடு குறிப்பிட விரும்பும் போது ஆசிரியர் என்று பலர் பாலில் குறிப்பிடுவது தமிழில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபாகும். ஆகவே ஆணாயிருந் தாலும் பெண்ணாயிருந்தாலும் தலைமையாசிரியர் என்று சொல்வதே பொருத்தமானது. இதே போல, இப் பேச்சாளர் மாணவர்களே மாணவிகளே என்று விளிப்பதிலும் குறை யிருப்பதை நாம் அறிய வேண்டும். இங்கு ஆண் மாணவர் களுக்கு உயர்வு தந்துவிட்டுப் பெண் மாணவர்களுக்கு உயர்வு தராமல் மாணவிகளே என்று கூறியிருப்பது எப்படி முறையாகும்? மாணவி என்று ஒருமையில் சொல்லி விட்டுப் பிறகு கள் விகுதியை ஏற்றிச் சொல்வதில் உள்ள முரண்பாட்டையும் நாம் புறக்கணிக்க முடியாது. ஆகவே இரு பால் மாணவர்களையும் மாணவர்களே என்று விளிப்பதுதான் ஏற்றது. ஆண், பெண் வேறு பாட்டைப் பகுத்துக் காட்ட வேண்டிய இடங்களில் ஒருமையாய் இருந்தால் மாணவன் மாணவி என்று கூறி விடலாம். ஆனால் அவர்களையே மரியாதையோடு கூற விரும்புகிற இடங்களில் ஆண் மாணவர், பெண் மாணவர் என்று குறிப்பிடலாமே.

அப் பேச்சில் தலைமை யாசிரியை கத்திவாக்கம் அவர்களே என்று குறிப்பிடுகிறார். இத் தகைய பேச்சுகளையும் இவ்வாறு எழுதப்பட்டுள்ள அழைப்பிதழ்களையும் ஏராளமாக நாம் காண முடிகிறது. இங்கே அவர்கள் என்னும் உயர்வுச் சொல்

கத்திவாக்கத்திற்குத்தான் போய்ச் சேர்கிறது. ஆகவே, இத் தகைய இடங்களில் கத்திவாக்கம் தலைமை யாசிரியர் அவர்களே என்று குறிப்பிடுவதுதான் ஏற்றது. கத்திவாக்கம் என்னும் ஊரிலுள்ள பள்ளியின் தலைமை யாசிரியர் என்பது தான் பொருள். அத் துவக்க உரையின் ஈற்றில் அவர் ''என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்கிறார். இதில் முதற்கண் வணக்கம் என்று அவர் சுட்டுவதால், இடைக்கண் வணக்கம், கடைக்கண் வணக்கம் என்றவாறு மேலும் சில வணக்கங்களை அவரிடமிருந்து நாம் எதிர்பார்த்தால் ஏமாற வேண்டியதுதான். ஏனென்றால் அவர் நினைப்பது ஒன்று, சொல்லுவது வெறொன்று என்றுதான் எமக்குத் தோன்றுகிறது. ஆகவே அவர் தம்முடைய பேச்சின் தொடக்கத்தில் தம் வணக்கத்தை அவையோருக்குத் தெரிவிக்க விரும்புகிறார்; அவ்வளவுதான். அப்படியானால் அவர் எப்படிச் சொல்லியிருக்க வேண்டும் என்றால் ''அனைவர்க்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று தான்.

☆☆☆☆☆

16. மக்கள் தொகை, தொழில் துறை

தமிழ்ச் சொற்கள் தொடராகும்போது ஒன்றோடொன்று சேர்ந்து ஒரு சொல்போல் ஆகிப் பொருட் செறிவையும், ஒலி அழகையும் ஏற்படுத்துகின்றன. மேலும் இரு சொற்கள் சேரும் தொகையாற்றலால் பொருட் செறிவுடன், பொருள் வேறுபாடும் ஏற்படுவதுண்டு. அதனாற்றான் தொல்காப்பியர் போன்ற தமிழ் இலக்கண அறிஞர்கள் தத்தம் நூல்களில் புணரியல் என்னும் பகுதியை மிக விரிவாக ஆராய்ந்து அமைத்திருக்கின்றனர். அவை யெல்லாம் தொல்காப்பியர் போன்ற ஆசிரியர்களால் உண்டாக்கப்பட்டவை அல்ல; மக்கள் பொருள் உணர்வோடும், சுவை நோக்கோடும் பேசும்போது இயல்பாக ஏற்படும் புணர்ச்சி

வேறுபாடுகளேயாகும். அப் புணர்ச்சி வேறுபாடுகளைப் பின்பற்றாவிட்டால் சில இடங்களில் பொருளின் திட்பமும், ஒட்பமும் குன்றுவதோடு பொருள் வேறுபாட்டுக்கும் அவை இடம் தரக்கூடும். எடுத்துக்காட்டாக, மக்கள் என்னும் சொல்லும், கடல் என்னும் சொல்லும் தனித்தனியாக நின்று 'மக்கள் கடல் பெரிது' என்றால் மக்களே, கடல் பெரியது என்றும் பொருள் கொள்ள முடியும். கடல் போன்று மக்களின் கூட்டம் பெரியது என்றும் பொருள் கொள்ள முடியும். அவ்வாறின்றிப் புணர்ச்சி விதிகளின்படி மக்கட்கடல் பெரிது என்றால் மக்களாகிய கடல் பெரிது (மக்கள் கூட்டம் கடல் போல் பெரியது) என்று மட்டும் தான் பொருள் ஏற்பட முடியும். மக்கட்கடல் என்பதில் உள்ள செறியும், ஒலி நயமும் கூடுதலான பலன்கள் ஆகும்.

இன்று எழுத்தாளப் பெருமக்கள் பலருக்கு இப் புணர்ச்சி விதிகளை ஓரளவேனும் பின்பற்றி எழுத வேண்டும் என்னும் ஆர்வம் ஏற்பட்டிருப்பது மகிழ்ந்து பாராட்டி வரவேற்கத் தக்கதாகும். அவர்களுக்கு உதவியாக ஓரிரு விளக்கங்களை இங்குத் தர விரும்புகிறோம். மக்கள், தொகை என்னும் இரண்டு சொற்களையும் புணர்த்து எழுதவேண்டும் என்னும் ஆவலால் சிலர் மக்கட் தொகை என்று எழுதுகின்றனர். இது பாதிக் கிணற்றைத் தாண்டுவதாகும். புணர்ச்சி விதிப்படி நிலை மொழியின் இறுதியில் உள்ள 'ள்' 'ட்' என்று திரியும். அப்படி அது திரிந்தால் அதனோடு சேர வரும் வருமொழியின் முதலில் உள்ள 'தொ' போன்ற எழுத்துகளும் திரிந்தாக வேண்டும். நிலை மொழியின் ஈற்றில் உள்ள எழுத்தை மட்டும் திரித்துவிட்டு வருமொழியின் முதலில் உள்ள எழுத்தை இயல்பாக விட்டு விட்டால் அது சரியாகாதன்றோ? ஏன் சரியாகாது என்றால் அவ்வாறு பாதிக் கிணறு தாண்டி அமைக்கப்படும் புணர் மொழிகளை ஒலித்துப் பாருங்கள். அப்போது அதன் இடர்ப்பாடு புரியும். சான்றாக மக்கள் தொகை என்னும் இரு சொற்களையும் புணர்த்து மக்கட் தொகை என்று எழுதியுள்ள அத்தொடர்

மொழியை இயல்பாக ஒலிக்க முடிகிறதா என்று பாருங்கள்; முடியாது. ஊர்தியில் போகும்போது மேடு, பள்ளம் உள்ள சாலைகளில் நம் ஊர்தி வீழ்ந்து, எழுந்து திணறிக்கொண்டு செல்வது போலிருக்கிறதன்றோ? நிலை மொழி, வரு மொழி ஆகிய இரண்டிலும் உரிய திரிபுகளை மேற்கொண்டு 'மக்கட் டொகை' என்று உள்ள புணர் மொழியை ஒலித்துப் பாருங்கள். நல்ல சாலையில் புத்தம் புதிய ஊர்தியைத் திறமை மிக்க ஓட்டுநர் செலுத்தினால் அப்பயணம் எப்படியிருக்குமோ அப்படி இத் தொடர்மொழி ஒலிக்கும்போது ஒலி நயமும் பொருள் திட்பமும் இருப்பதை உணர முடியும்.

இதே போல் தொழில், துறை ஆகிய இரண்டு சொற்களையும் சேர்த்து எழுத விரும்பினால் நிலை மொழியின் இறுதியில் உள்ள 'ல' கர ஒற்றை 'ற' கர ஒற்றாகத் திரிப்பதோடு வரு மொழி முதலில் உள்ள 'த' கர ஒற்றையும் 'ற' கர ஒற்றாகத் திரித்துத் தொழிற்றுறை என்று சொல்லிப் பாருங்கள். முன்னதைப் போல் இதுவும் இனிதாக இருப்பதை அறியலாம். அவ்வாறின்றி இத் தொடரில் உள்ள நிலைமொழியின் இறுதியை மட்டும் திரித்து, வருமொழி யின் முதலைத் திரிக்காமல் இயல்பாகப் பயன்படுத்தினால் அத் தொடர் தொழிற் துறை என்று வரும். இதையும் ஒலித்துப் பாருங்கள். மக்கட் தொகை என்பதுபோலத் தொழிற் துறை என்னும் இத் தொடர்மொழியும் மேடு, பள்ளச் சாலையில் வீழ்ந்து, எழுந்து திணறும் ஊர்திப் பயணம் போல் இருக்கிறதன்றோ? ஆகவே, செய்வன திருந்தச் செய்ய வேண்டும் என்னும் மரபுக் கேற்ப எழுத்தாள நண்பர்கள் இவ்வாறுள்ள ஒரு சில சிறப்பான விதிகளையேனும் பின்பற்றி அவர்கள் தம் சொல்லோவியங் களைத் தீட்டுவார்களானால் அவ் வோவியங்கள் எழிலோடு தமிழ் மணமும் கமழ அமையும் என்று கருதுகிறோம்.

☆☆☆☆☆

17. அனைத்து இந்தியா

All India Radio, All India Labour Party, All India Conference என்பன போன்ற ஆங்கிலத் தொடர்கள் அகில இந்திய வானொலி, அகில இந்திய தொழிற் கட்சி, அகில இந்திய மாநாடு என்பன போல் மொழி பெயர்க்கப்பட்டுப் பிறகு அவை நல்ல தமிழில் முறையே அனைத் திந்திய வானொலி, அனைத் திந்திய தொழிற் கட்சி, அனைத் திந்திய மாநாடு என்பன போல் குறிப்பிடப்படும் வழக்கம் ஏற்பட்டிருகிறது. இவற்றில் All என்னும் ஆங்கிலச் சொல்லின் பொருளைச் செம்மையாகத் தமிழுக்குக் கொண்டு வரத் தவறிய காரணத்தால் ஏற்பட்டுள்ள பெரும் பிழையை நாம் இப்போதாவது உணர்ந்துகொள்ள வேண்டாவா? ஆங்கிலத்தில் All என்னும் சொல்லுக்கு எல்லாம் என்னும் பொருளும், முழுவதும் என்னும் பொருளும் இருக்கின்றன. All the Birds என்னும் தொடரில் எல்லாப் பறவைகளும் என்னும் பொருளும், All India Radio என்னும் தொடரில் முழு இந்திய வானொலி என்னும் பொருளும் இருப்பதை நாம் உணர முடிகிறது. அவ் விரண் டுக்கும் உள்ள தெளிவான வேறுபாடுகளையும் நாம் புறக்கணிப் பதற்கில்லை. ஆனால் இத் தகைய தொடர்களைத் தமிழ்ப் படுத்தியவர்களுக்கு ஏற்பட்ட வழுக்கல் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருப்பது சரியா? All India என்பதை அனைத் திந்தியா என்று மொழி பெயர்த்தால் அதிலுள்ள பொருட் பிழையை நாம் களைய முடியாதே. அனைத்துப் பறவைகளும் என்னும் தொடருக்கும் அனைத் திந்தியாவும் என்னும் தொடருக்கும் உள்ள வேறுபாட்டை நாம் புறக்கணிக்க முடியுமா? பல பறவைகள் இருக்கும்போது அவற்றைப் பறவைகள் அனைத்தும் அல்லது அனைத்துப் பறவைகளும் என்று கூறலாம். அதேபோல் இந்தியாக்கள் பல இருந்தாலன்றோ இந்தியா அனைத்தும் அல்லது அனைத் திந்தியாக்களும் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கும். இந்தியா 7,8 இல்லையே. உள்ளது ஓர் இந்தியாதானே? அப்படியிருக்கும்போது அனைத் திந்தியா அல்லது அனைத் திந்திய என்பன போன்ற வடிவங்களை நாம் பயன் படுத்துவது முறைதானா? என்று எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

☆☆☆☆☆

18. ஒருமை, ஒற்றுமை

சில எழுத்தாளர்கள் **'ஒன்றிணைந்த கருத்துகள்'** என்பது போன்ற தொடர் மொழிகளைப் பயன்படுத்துவதை நாம் காண நேர்கிறது. ஓடுகிற ஓட்டத்தில் அவற்றின் பொருத்தமின்மை புலப்பட்டதில்லை. நின்று நோக்கிய ஒரு முறைதான் அதிலுள்ள முரண்பாடு தெரிந்தது. **'ஒருங்கிணைந்த'** என்னும் தொடர்-மொழியின் பொருளைத் தம் மனத்தில் வைத்துக் கொண்டு அவ் வெழுத்தாளர்கள் 'ஒன்றிணைந்த' என்னும் தொடர் மொழியைப் பயன்படுத்தியிருக்கிறார்களோ என்று யாம் அய்யுறுகிறோம். ஏனென்றால் ஒன்று மட்டும் இணைய முடியாதே? ஒன்றுக்கு மேற்பட்டவைதாமே இணைய முடியும்? எனவே கருத்துகளாயினும், பொருள்களாயினும் பல, இணை வதைத்தானே ஒருங்கிணைதல் என்று சொல்லமுடியும். அவற்றை ஒன்றிணைதல் என்னல் சரியாகாது. ஒன்றாக ஆனால் ஆகலாமே தவிர அவை இணைய முடியாது. இரண்டு விரல்கள் இணைய முடியுமே தவிர இரண்டு விரல்களும் ஒரு விரலாக ஆக முடியுமா? இரண்டு நிறங்கள் வேண்டுமானால் ஒன்றாக ஆகலாம். அப்படியான பிறகும் அது வேறு ஒரு நிறமாக இருக்க முடியுமே தவிர இரண்டு நிறங்கள் இணைந்திருப்பதாகச் சொல்ல முடியாது. இரண்டு நிறங்களையும் தனித் தனியாக ஒரு பொருளின் மீது அருகருகே தீற்றிக் காட்டினால் அத்தகைய இடங்களில் மட்டும் இரண்டு நிறங்கள் இணைந்துள்ளன என்று சொல்லலாம்.

ஆகவே, 'ஒன்றாக ஆவதற்கும்' 'இணைவதற்கும் உள்ள அருமையான வேறுபாட்டை நாம் புறக்கணித்து அவற்றை இணைத்துவிடக் கூடாது. இரு வேறு கருத்துகள் தனித் தனியாக நின்று செயற்படாமல் கூடிச் செயற்பட்டால் மட்டுமே அத்தகைய இடங்களில் அக் கருத்துகள் இணைந்து செயல் பட்டன என்று கூறலாம். அப்படிப் பட்ட இடங்களிலும் அவற்றை 'ஒருங் கிணைந்து' செயல்பட்டன என்று கூறலாமே தவிர அவற்றை ஒன்றிணைந்து செயல்பட்டன என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

இதே போல்தான் **ஒருமை-ஒற்றுமை** என்னும் இரு சொற் களுக்கும் உள்ள அழகான அரிய வேறுபாட்டையும் நம்மில் பலர் புரிந்து கொண்டதாக எமக்குத் தெரியவில்லை. ஒருமை என்பதற்கு ஒன்றாகிய தன்மை. அஃதாவது ஒரே தன்மை என்பது பொருள். ஒற்றுமை என்பதற்குப் பல தன்மைகள் அல்லது பொருள்கள் கூடி நிற்கின்றன அல்லது கூடிச் செயல்படுகின்றன என்பது பொருள். ஒருமைப்பாடு என்பதும் ஒருமை என்பதன் மற்றொரு வடிவமே.

இந்திய ஒருமைப்பாடு என்பதற்கும் இந்திய ஒற்றுமை என்பதற்கும் உள்ள வேறுபாட்டை இந்த அடிப்படையில் நாம் விளங்கிக் கொள்வது நல்லது என்று கருதுகிறோம். இந்திய ஒருமைப்பாடு என்றால் இந்தியாவில் உள்ள பல்வேறு தன்மைகளும் தத்தம் தனி இயல்புகளை விட்டு ஒரே தன்மை உடைய ஒரே பொருளாக ஆகவேண்டும் என்பதுதானே பொருள். அதையே சற்று விரிவாகக் கூறுவதானால் இந்தியாவில் உள்ள பல்வேறு மதங்களும், பல்வேறு இனங்களும், பல்வேறு மொழிகளும், பல்வேறு பண்பாடுகளும் தத்தம் தனிச் சிறப்பியல்புகளை யெல்லாம் இழந்து அல்லது ஒன்றாகப் போட்டுக் கலந்து அவை ஒரே தன்மை உடையவைாக ஆகவேண்டும் என்பதுதான் பொருள்.

இந்திய ஒற்றுமை என்றால் இந்தியாவில் உள்ள மேற்கூறிய எல்லாம் தத்தம் தனி இயல்புகளோடும், சிறப்பியல்புகளோடும் ஒன்றோடொன்று மோதி ஒன்றையொன்று மாய்த்துக் கொள்ளாமல் அவை எல்லாமே தத்தம் போக்கில் மற்றவற்றோடு முரணாது கூடி வாழ்தல் என்று பொருள்படும்.

☆☆☆☆☆

19. 'குறிப்பாக'

1. அவர் பொதுவாக எல்லோரையும் அன்புடன் வரவேற்றாரா யினும், குறிப்பாக என்னை மிகவும் அன்புடன் வரவேற்றார்.

2. அவர் பேச்சில் இன்று நகைச் சுவை மிகுதியாகக் காணப்பட்டது. குறிப்பாகப் புரட்சிக் கவிஞரின் முதியோர் காதல் பற்றிப் பேசும் போது அது மிகுதியாகக் காணப்பட்டது.

மேற்கூறிய இரு தொடர்களிலும் 'குறிப்பாக' என்னுஞ் சொல் தவறாகவே ஆளப்பட்டிருக்கிறது. இவ்வாறு குறிப்பு என்பதனடியாகப் பிறந்த சொற்களை மிக மிகப் பெரும் பாலானவர்கள் பிழைபடவே ஆள்வதைக் காண்கிறோம். அச் சொல் வடிவங்களை ஆள்கிறவர்களின் எண்ணம் சரியாக இருந்தாலும், அவர்கள் எண்ணத்தை வெளிப்படுத்தத் தேர்ந்தெடுத்த சொல் அதற்குப் பொருத்தமானதன்று. அவர்கள் பொதுவாக என்பதற்கு எதிரான சொல்லாகக் 'குறிப்பாக' என்பதைத் தேர்ந்தெடுத்துக் கூறியுள்ளனர்.

உண்மையில் 'பொதுவாக' என்பதன் எதிர்மறைச் சொல் 'சிறப்பாக' என்பதுதான். பொது என்பதற்குச் சிறப்பு என்பதுதான் எதிர்ச் சொல். குறிப்பு என்பது வெளிப்படை என்பதன் எதிர்ச் சொல்லாகும். எடுத்துக்காட்டாக ''அவர் பலவற்றை வெளிப் படையாகக் கூறிச் சிலவற்றை (எங்களுக்கு மட்டும் புரியும் வகையில்) குறிப்பாகக் கூறினார்'' என்னும் தொடரில் குறிப்பாக என்னும் சொல் சரியாக ஆளப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம்.

வெளிப்படையாக அன்றிக் கூறப்படுவனவற்றைத்தான் குறிப்பாகக் கூறப்பட்டவையாகக் கொள்ளலாம். பொதுவாகக் கூறப்படாதவற்றைச் சிறப்பாகக் கூறப்பட்டவை என்றுதான் கூற முடியுமே தவிர அங்குக் குறிப்பாக என்னும் சொல்லைப் பயன்படுத்துவது பொருந்தாது. ஆகவே, இவற்றைப் பின்வரும் வகையில் எதிர்ச்சொற்களாக அமைத்துக் கொண்டு பயன்படுத்துவதே தக்கது.

பொது X சிறப்பு. வெளிப்படை X குறிப்பு.

☆☆☆☆☆

20. 'கள்'

எழுத்துகள், எழுத்துக்கள், கருத்துகள், கருத்துக்கள்;- இத் தகைய இடங்களில் ஒற்று மிக வேண்டுமா என்னும் அய்யம் பிற்காலத்தில்தான் ஏற்பட்டதாகத் தெரிகிறது. பழைய உரையாசிரியர்கள், இடைக் காலப் பிற் காலத் தமிழ் அறிஞர்கள் ஆகியோர் பெரும்பாலும் இவ் வேறுபாட்டைக் கருதாமலேயே எழுதி வந்ததாகத் தெரிகிறது. அண்மைக் காலத்தில் வாழ்ந்து மறைந்த மகாவித்துவான். சிந்தாமணிச் செல்வர் மே.வி. வேணுகோபால் பிள்ளையவர்கள் இவ் வய்யத்தை எழுப்பி அதைத் தெளிவுபடுத்தினார்கள்.

அவருடைய கருத்தைப் பெரும்பாலான தமிழ் அறிஞர்கள் அப்போது ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை யென்றாலும், அக் கருத்தின் நுட்பம், உறுதி ஆகியவை அதை நிலை நாட்டி விட்டன. இன்று அக் கருத்தைப் பெரும்பாலான தமிழ் அறிஞர்கள் ஏற்றுக்கொண்டு நடைமுறையில் கையாள முன்வந்துள்ளனர்.

ஒரு சொல்லின் இறுதியில் உயிரெழுத்து இருந்து அதனோடு சேர வரும் மற்றொரு சொல்லின் முதலில் வல்லின மெய்

யெழுத்து இருந்தால் 'அம்மெய்யெழுத்து மிகவேண்டும், என்பது பொதுவான இலக்கண விதி. எடுத்துக் காட்டாக மர+கிளை= மரக்கிளை, மர+சட்டம்=மரச்சட்டம், மர+தூண்=மரத் தூண், மர+பலகை= மரப் பலகை என்பனவற்றைக் காணலாம். (வல்லினத்தில் ''ட,ற'' ஆகிய இரண்டும் ஒரு சொல்லின் முதலில் வரமாட்டா. அதனால் அவற்றுக்கு எடுத்துக் காட்டுகள் தரவில்லை) இப் பொது விதிக்கு விலக்காகச் சிறப்புவிதி ஒன்றும் இலக்கணத்தில் உண்டு. சேர வருகின்ற சொல் இடைச் சொல்லாகவோ, உரிச் சொல்லாகவோ, வடமொழி போன்ற பிற மொழிச் சொல்லாகவோ இருந்தால் அங்குப் பொது விதியைப் பினபற்ற வேண்டிய இன்றியமையாமை இல்லை என்பது விதிவிலக்காகக் கூறப்பட்டுள்ளது. அந்த விதி விலக்கை முதலில் கூறியுள்ள விதிக்குப் பயன்படுத்தினால் ஒற்றெழுத்து மிக வேண்டும் என்று கூறப்பட்ட இடங்களில் அது மிகாமலும் வரலாம் என்பது பெறப்படும். அம் முறையில் பார்த்தால் ''கள்'' என்பது ஓர் இடைச் சொல்லாகும். அவ் விடைச் சொல் எழுத்து, கருத்து என்னும் உயிரெழுத்துகளை இறுதியில் உடைய சொற்களின் பின்னால் வரும்போது ஒற்றெழுத்து மிக வேண்டிய தில்லை. எடுத்தக்காட்டாக எழுத்து+கள்=எழுத்துகள், கருத்து+கள்=கருத்துகள் (நாள்+கள்=நாள்கள்) என்பனவற்றைக் கொள்ளலாம்.

இவ் விடங்களில் ஒற்றெழுத்தை மிகுத்தும் திரித்தும் எழுதினால் எழுத்தாகிய கள், கருத்துள்ள கள், காலையில் இறக்கப்பட்ட கள் என்பன போல் பொருத்தமற்ற பொருள்கள் ஏற்படும். ஆகவே இத் தகைய இடங்களில் ஒற்றெழுத்தை மிகுக்காமல் எழுதுவதே சரி. மிகுக்கா விட்டால் பொருட் பிழை ஏற்படக்கூடிய இடங்களில் மட்டும் மிகுத்து எழுதலாம்.

☆☆☆☆☆

21. அரசினர் பள்ளி

அரசினர் உயர்நிலைப் பள்ளி
அரசினர் மேல்நிலைப் பள்ளி
அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி
அரசினர் பொது மருத்துவ மனை

என்பன போன்ற பெயர்ப் பலகைகளை நாம் நாடு முழுதும் காண முடிகிறது. அவற்றில் உள்ள 'அரசினர்' என்னும் சொல் உயர்திணையாகும். ஆனால் அச் சொல்லால் சுட்டப்படுகிற பொருள் அஃறிணையாகும். கடவுளை மட்டும் உயர்திணை யாகவும், அஃறிணையாகவும் குறிப்பிடும் வழக்கம் தமிழ் மரபில் இடம் பெற்றிருக்கிறது. சான்றாகச் சாமி வந்தது, சாமி வருகிறார், பெருமாள் எழுந்தருள்கிறார் என்பனவற்றைக் காணலாம்.

சில உயர்திணைப் பொருள்களை அஃறிணைச் சொற்களால் குறிப்பிடும் வழக்கமும் உலக வழக்கில் இருக்கிறது. சான்றாக அம்மா வந்தது, மாமா தூங்குகிறது என்பன போன்றவற்றைக் காணலாம். ஆனால் முற்றிலும் அஃறிணையாகவே கருதப்படும் பொருள்களை உயர்திணைச் சொற்களால் குறிப்பிடும் மரபு தமிழுக்குப் புதியதாகும். இப் புதிய மரபு வழு தமிழில் எப்படி ஏறபட்டது என்று எண்ணிப் பார்த்தால் அதன் வரலாறு அதைத் தெளிவாக விளக்கக் காணலாம்.

ஆங்கில ஆட்சி இந் நாட்டில் இருந்த காலத்தில் 'கவர்ன் மண்ட்' என்னும் ஆங்கிலச் சொல்லைத் தமிழில் எழுதியவர்கள் கவர்ன்மண்ட்டார் என்று எழுதத் தொடங்கினார்கள். அதற்கும் முன்னால் மொகலாயர் ஆட்சிக் காலத்தில் சர்க்கார் என்னும் சொல்லைத் தமிழ்ப்படுத்திய பொழுது அதனைச் சர்க்காரார் என்று எழுதும் வழக்கம் இருந்தது. அப்போது தமிழில் எழுதியவர்கள் கவர்ன்மண்ட், சர்க்கார் என்பனவற்றை அப்படியே எழுதினால் மரியாதைக் குறைவாயிருக்கும் என்று

கருதி இருக்கக்கூடும். அதனால் உயர்வுப் பன்மை விகுதியாகிய 'ஆர்' என்பதைச் சேர்த்துச் சர்க்காரார், கவர்ன்மண்ட்டார் என்று எழுதத் தொடங்கினார்கள். அது நல்ல தமிழாக இல்லை என்று கருதிய தனித்தமிழ் இயக்க நண்பர்கள் அரசாங்கம் என்பதோடு 'ஆர்' விகுதியைச் சேர்த்து அரசாங்கத்தார் என்றும் அரசு என்பதோடு 'அர்' விகுதியையும் அதற்குத் துணையாக 'இன்' என்னும் சாரியை யையும் சேர்த்து அரசினர் என்றும் கூறினர்.

அரசாங்கம் என்பதைவிட அரசு என்னும் சொல் முழுமையான நல்ல தமிழ்ச் சொல்லாக இருப்பதால் அதன் அடியாகப் பிறந்த அரசினர் என்னும் சொல் வேரூன்றி நிலைத்துவிட்டது. ஆனால் அரசு என்னும் அஃறிணைக்கு உயர்வு அல்லது மரியாதை தரும் விகுதி தேவையில்லை. அப்படியிருந்தும் அரசு என்று நினைக்கிறபொழுது அரசை ஆள்கிற பெருமக்கள் நினைவுக்கு வருகிறார்கள். அதனால் உயர்வுப் பன்மை விகுதியைச் சேர்த்து அரசினர் என்றால் நன்றாய் இருப்பதாகச் சிலருக்குத் தோன்றும். தலைமை அமைச்சர், முதலமைச்சர், அமைச்சர் ஆகியவர்கள் பற்றிக் குறிப்பிடும்போது அங்கு 'அர்' விகுதியைச் சேர்த்துச் சொல்லுவது பொருத்தமானது. ஏனெனில் அங்கு அமைச்சு என்னும் அஃறிணையை அது சுட்டவில்லை. அந்த அமைச்சில் வீற்றிருக்கின்ற உயர்திணையாளரைக் குறிப்பதால் அத்தகு இடங்களில் 'அர்' விகுதியைச் சேர்த்து அமைச்சர் என்று சொல்லுவது தேவையானதும், சரியானதும் ஆகும். ஆனால் அரசு என்னும் அந்த அஃறிணை அமைப்பை உயர்திணைக்கே உரிய உயர்வுப் பன்மை விகுதியைச் சேர்த்துச் சொல்வது தேவை யற்றது என்று எமக்குத் தோன்றுகிறது. அதனால் தலைப்பில் எடுத்துக் காட்டியுள்ள பெயர்ப் பலகைகளில் முறையே-

அரசு உயர்நிலைப் பள்ளி
அரசு மேல்நிலைப் பள்ளி
அரசு ஆடவர் கலைக் கல்லூரி

அரசுப் பொது மருத்துவ மனை

என்று குறிப்பிடுவதே பொருத்தமானது.

☆☆☆☆☆

22. எல்லாரும்

''எல்லாரும் வாருங்கள்''

''எல்லோரும் வாருங்கள்''

என்று ஒரே சொல் இரு வேறு வடிவங்களில் பயன்படுவதைக் காண்கிறோம். இவற்றில் எது சரி என்னும் அய்ய வினா சிலருக்கு ஏற்படுவதுண்டு. ஆகவே அதற்குத் தெளிவான விடை காணவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. முதலிலேயே விடையைச் சொல்லி விட்டுப் பிறகு விளக்கலாம் என்று கருதுகிறோம். இரண்டுமே சரிதான் என்பதுதான் அதற்குரிய நேரடியான விடை. ஆனாலும் முதலில் வழக்கத்தில் இருந்த சொல் 'எல்லாரும்' என்பதுதான். பிறகு அது எல்லோரும் என்று மறுவடிவம் பெற்றிருக்கிறது. அம் மறு வடிவத்திற்கு ஒரு வரலாறு உண்டு.

''ஆ ஓ ஆகலும் செய்யுளில் உரித்தே'' என்னும் இலக்கணப் படிச் செய்யுளில் வில்லான் என்னும் சொல்லில் உள்ள 'ஆ' 'ஓ'வாக மாறி, வில்லோன் என்றும் தொடியாள் என்பது தொடியோள் என்றும் வரும் மரபு தமிழ் வழக்கில் இடம்பெற்றது. செய்யுளில் 'ஆ' 'ஓ'வாவதில் இருக்கும் ஓசை நயத்திற்கு ஆட்பட்ட தமிழர்கள் உரை நடையிலும், பேச்சு வழக்கிலும் அதனையே கையாளத் தொடங்கி இருப்பார்கள். அதன் பயன்தான் எல்லாரும் என்பது எல்லோரும் என மறுவடிவம் பெற்ற நிலையாகும். எல்லோரும் வாழ்க!

☆☆☆☆☆

23. எத்தனை!

ஒரு கையில் எத்தனை விரல்கள் இருக்கின்றன?

ஒரு கையில் எத்துணை விரல்கள் இருக்கின்றன?

நான் எத்துணை நேரமாகக் காத்திருக்கிறேன்?

நான் எத்தனை நேரமாகக் காத்திருக்கிறேன்?

மேலுள்ள நான்கு தொடர்களிலும் எத்தனை, எத்துணை என்னும் இரு சொற்களும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இவற்றில் ஏதாவது தவறு உண்டா? அல்லது எல்லாமே சரியா? என்பவைகளை எண்ணிப் பார்ப்போம். எத்தனை என்னும் சொல்லை ஒன்று, இரண்டு என்று எண்ணி அறியக்கூடிய இடங்களில் மட்டுந்தான் பயன்படுத்தலாம். எத்துணை என்பதை அவ்வாறின்றி மற்ற வகையாக அளந்து அறியக் கூடிய அளவு களில் எல்லாம் பயன்படுத்தலாம். எத்துணை என்பதன் பொருள் எவ்வளவு என்பதுதான். எத்தனை என்பதற்கு அய்ந்து, ஆறு என்பனபோல் எண்ணிக்கைக் கணக்கில் விடையளிக்கலாம்.

ஆனால் 'எத்துணை' அல்லது எவ்வளவு என்பதற்கு எண்ணிக்கையில் விடை அளிப்பது எல்லா இடங்களிலும் பொருத்தமாயிராது. ஆகவே எத்துணை என்பதைக் காலம், பரப்பளவு போன்றவற்றைக் குறிப்பிடும் இடங்களில் பயன்படுத்துவதே மிகவும் பொருத்தமாயிருக்கும். எனவே மேலுள்ள தொடர்களில் ஒரு கையில் எத்தனை விரல்கள் இருக்கின்றன என்பது சரியான வினாத் தொடராகும். ஒரு கையில் எத்துணை விரல்கள் இருக்கின்றன என்பது சரியற்ற வினாத் தொடராகும். அடுத்துள்ள இணையில் நான் எத்தனை நேரமாகக் காத்திருக்கிறேன் என்பது சரியற்ற தொடராகும். நான் எத்துணை நேரமாகக் காத்திருக்கிறேன் என்பது சரியான தொடராகும். எத்தனை நாழிகையாக, எத்தனை மணிகளாக என்பனவும் சரியான தொடர்களாகும்.

☆☆☆☆☆

24. அன்று - அல்ல

''அஃது உண்மை அன்று''

''அவை உண்மையல்ல''

இவ் விரு தொடர்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள அன்று, அல்ல என்னும் இரு சொற்களையும் பலர் பொருத்தமற்ற முறையில் (தவறாக என்றும் சொல்லலாம்) பயன்படுத்தி வருவதைக் காண்கிறோம். இவற்றில் 'அன்று' என்பதை ஒருமைக்கும், 'அல்ல' என்னும் சொல்லைப் பன்மைக்கும் பயன்படுத்த வேண்டும். ஒரு பொருளைச் சுட்டி அதை மறுக்கிற போதுதான் அன்று என்னும் சொல்லை ஆளவேண்டும். பல பொருள்களைச் சுட்டிக் காட்டி மறுக்க வேண்டிய இடங்களில் அல்ல என்னும் சொல்லைப் பயன்படுத்துவதுதான் தக்கது. மா மரம் என்னுடைய தன்று. மா மரங்கள் என்னுடையவை யல்ல. அது பசு வன்று. அவை எருமைகள் அல்ல. அது நான் கூறியது அன்று. அவை அவர் உரைத்தவை யல்ல. என்பனபோல் இச்சொற்களை முறை பிறழாது பயன்படுத்துவதே தமிழ் மரபுக்கு ஏற்றது.

☆☆☆☆☆

25. %50

முற்றுப் புள்ளி, வினாக் குறி. வியப்புக் குறி போன்ற நிறுத்தக் குறிகள் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு வந்து சேர்ந்தவையாகும். இக் குறிகள் தமிழில் இல்லாமையால் அவை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குக் கொண்டுவரப்பட்டு இன்று எல்லோராலும் தாராளமாக ஆளப்படுகின்றன. நிறுத்தக் குறிகள் என்னும் குறியீடுகள் பண்டைக் காலத்தில் தமிழில் இலலையே தவிர, அவை இன்று எவற்றிற்காகப் பயன்படுத்தப் படுகின்றனவோ அவற்றிற்காகப் பண்டைக் காலத்தில் இடைச்

சொற்கள் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. 'ஆ' 'ஏ' 'ஓ' என்பன போன்ற வினா இடைச்சொற்கள் இன்றைய வினாக் குறிகளுக்கு ஈடாகப் பயன்படுத்தப் பட்டு வந்தன. அவ்வாறே 'அந்தோ' என்பது போன்ற இடைச் சொற்கள் வியப்புக் குறிகளுக்கு ஈடாகப் பயன்படுத்தப் பட்டு வந்தன. எச்சங்களும், முற்றுகளும், காற் புள்ளி, அரைப் புள்ளி, முற்றுப் புள்ளி போன்றவற்றின் பயனை ஓரளவு நிறைவு செய்தே வந்தன. இன்றும் இக் குறிகள் இடப்படாவிட்டாலும் தமிழில் பெரிய பொருள் வேறுபாடோ, முரண்பாடோ, வேறு இடர்ப்பாடுகளோ ஏற்பட்டுவிட மாட்டா. ஆனாலும் அக் குறியீடுகளின் எளிமையும், பயனும் கருதி அவை இன்று தமிழில் எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் ஒற்று மிக வேண்டிய இடங்களில் அய்யம் வந்தால் சிலர் அவ் விடங்களில் காற் புள்ளி யிட்டுத் தப்பித்துக் கொள்வதாக எண்ணிக் கொள்கின்றனர். ஒற்று மிக வேண்டிய இடங்களில் காற் புள்ளி யிட்டுத் தவிர்ப்பது ஏற்றுக் கொள்ளத் தக்கது ஆகாது. வேறு சிலர்'!' இவ் வியப்புக் குறியை 'வாழ்க' என்பன போல வரும் பல்வேறு வினை முற்றுகளுக்குப் பின் இடுகின்றனர். இப் பழக்கம் எப்படி வந்து சேர்ந்தது என்றே தெரியவில்லை. ஒருவரை வருக என்றாலும், வாழ்க என்றாலும் அதில் வியப்புப் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டிய இன்றியமையாமை இல்லை. ஆகவே அவ்விடங் களில் வியப்புக் குறிகள் இடப்படுவது தேவையற்றதாகும்.

இன்று ஆங்கிலத்தின் தொடர்பால் தமிழில் ஏற்பட்டுள்ள மற்றொரு சிக்கலையும் இங்குத் தீர்ப்பது பொருத்தமானதாகும் என்று கருதுகிறோம். 50% என்பதைத் தமிழிலும் அவ்வாறே எழுதும் பழக்கம் நடைமுறையில் உள்ளது. இதில் ஒரு சிக்கல் இருக்கிறது. அது என்ன வென்றால் அதை ஆங்கிலத்தில் படிப்பதானால்-Fifty Percent என்று படிக்கிறோம். அதில் தவறு ஏதும் இல்லை. வடமொழியைப் பயன்படுத்திப் படிப்பதானால்

அய்ம்பது சதவிகிதம் என்று படிக்க முடியும். ஆனால் தமிழில் படிப்பதானால், அய்ம்பது நூறு விகிதம் அல்லது அய்ம்பது நூற்றுக்கு என்றுதானே படிக்க முடியும்? இப்படிப் படித்தால் எவ்வளவு பெரிய பொருள் முரண்பாடு ஏற்படுகிறது? 50 X 100 = 50,00 என்பது போல் பொருள் ஏற்பட்டு விடாதா? இம் முரண்பாட்டைக் கருதி இக் குறியீட்டை நாம் கைவிட்டு விடவும் வேண்டியதில்லை. 100 என்னும் வடிவை ஏற்றுக் கொண்டுள்ள நாம், அதிலிருந்து உண்டான % என்னும் குறியை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் வேண்டியதில்லை. மேலும் அது மிகவும் பயன் உள்ளதாகவும், பழக்கப்பட்டுவிட்ட தாகவும் இருப்ப தனால் அதை வைத்துக் கொள்வது தக்கதுதான். அப்படியானால் பொருள் முரண்பாட்டைத் தவிர்ப்பது எப்படியென்றால், அக் குறியீட்டை முதலில் போட்டு அதன் பின் எண்ணைக் குறிப்பிட்டால் இச் சிக்கலான முரண்பாடு ஏற்பட முடியாது. அஃதாவது %50 என்று குறிப்பிட வேண்டும். இதைத் தமிழில் படிக்கும்போது நூற்றுக்கு அய்ம்பது என்று படிக்கலாம். விகிதம் என்பது தேவையற்றது. விகிதம், விழுக்காடு என்பன போன்ற சொற்களைப் பின்னால் பயன்படுத்தினாலும் பொருள் தெளிவு ஏற்படுமே தவிரக் குறையோ முரண்பாடோ ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆகவே ஓர் எண்ணுக்கு முன்னால் இக் குறியீட்டைப் பயன்படுத்துவதே அச் சிக்கலுக்கு உரிய தீர்வு ஆகும்.

☆☆☆☆☆

26. அனுப்புக

பொதுவாக எல்லா வகையான கடிதப் போக்குவரத்து களிலும், சிறப்பாக அரசுக் கடிதப் போக்கு வரத்துகளிலும் பின்வரும் தொடர்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன:

அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அனுப்பி வைக்க வேண்டிக் கொள்கிறேன்.

அனுப்பி வைக்க வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இவைகளில் 'கோருகிறேன்' என்னும் சொல்லை வல்லினத் தைப் பயன்படுத்திக் கோறுகிறேன் என்றும் சில இடங்களில் எழுதிவிடுகிறார்கள். அச் சொல்லுக்குக் கொல்லுகிறேன் என்பது பொருளாகும். இச் சிக்கலைத் தவிர்ப்பதற்காக அச் சொல்லையே பலர் கைவிட்டு விடுவது முண்டு. இத் தகைய தொடர்களை மேலலுவலர்கள் தம் கீழ்ப் பணியாற்றும் சார் நிலை அலுவலர் களுக்குப் பயன்படுத்துவதற்குத் தயங்குவார்கள். சார் நிலை அலுவலர்களிடம் பணிந்த வேண்டுகோள் விடுவது தக்கதன்று என்பது அம் மேல் நிலை அலுவலர்களின் எண்ணமாக இருக்கக்கூடும். ஆகவே, 'அனுப்பவும்' என்பது போல 'இதைச் செய்' என்னும் விதித்தல் (கட்டளையிடுதல்) பொருளில் உள்ள சொற்களைக் கையாள்கின்றனர்.

சார் நிலை அலுவலர்கள் தம் மேல் நிலை அலுவலர்களுக்கு எழுதும் போது தாம் பெற விரும்புகின்ற உதவியின் தன்மைக் கேற்ப வேறு சில அடை மொழிகளையும் மேல் உள்ளவற்றோடு சேர்த்து எழுதுவ துண்டு. ஆகவே, இத் தொடர்களை ஆள்கிற போது யார், யாருக்கு, எதற்காக எழுதுகிறார்களோ, அதற்கேற்ப விழிப்புடன் கவனித்து அமைத்து எழுத வேண்டியிருக்கிறது. இது போன்ற சிக்கல்களை யெல்லாம் தவிர்த்து, தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய அய்ந்து பால்களிலும் வேறுபாடில்லாமல் பயன்படுத்தக் கூடிய ஒரு சொல் தமிழில் இருக்கிறது. வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதுபோல் அச் சொல்லை வைத்துக்கொண்டு நாம் அதைப் பயன்படுத்தாமல் வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்தி இடர்ப்படுகிறோம்.

அதுதான் 'வியங்கோள் வினைமுற்று' என்பது. வாழ்க, தருக, செல்க, வாழிய, வாழியர் என்பன போல வருவன எல்லாம் வியங்கோள் வினை முற்றுகளே யாகும். இவை வாழ்த்துதல் பொருளிலும், இதைச் செய் என ஏவுகிற பொருளிலும், வேண்டிக் கொள்ளுதல் பொருளிலும் வரும். ஆகவே இச் சொற்களைக் கடிதப் போக்கு வரத்தில் மேல் நிலை, சார் நிலை என்னும் வேறுபாடு இல்லாமல் யாரும் யாருக்கும் எழுதும் போது அய்யமின்றித் தாராளமாகப் பயன்படுத்தலாம். சார் நிலையோர், மேல் நிலையோருக்கு எழுதும்போது அனுப்புக என்று எழுதினால் அது வேண்டுகோள் பொருளில் அமைந்ததாகக் கொள்ளப்படும். மேல் நிலையோர் சார் நிலையோருக்கு அதே சொல்லைப் பயன்படுத்தினால் அது விதித்தல் பொருள் உடையதாகக் கொள்ளப்படும். போக்குவரத்துக் கட்டுப்பாட்டில் உள்ள காவலர் தம் கையில் உள்ள தகட்டில் 'நிற்க' என்னும் சொல்லை எழுதிப் பயன்படுத்தகிறார். அச் சொல் பொதுமக்கள் முன் காட்டப்படும் போது விதித்தல் பொருளைத் தரும். ஆளுநர், அமைச்சர் போன்ற பெருமக்களின் முன் காட்டப்படும்போது வேண்டிக்கோடற் பொருளைத் தரும். அச் சொல்லைப் பயன்படுத்தாமல் 'நில்' என்னும் சொல்லைப் பயன்படுத்தினால் பெருமக்கள் செல்லும் ஊர்தியின் முன் அது காட்டப்படும்போது அப் பெருமக்களே ஊர்தியை ஓட்டிச் செல்லும் நிலை ஏற்பட்டால் அது மரியாதைக் குறைவாகு மன்றோ? ஆகவே, வியங்கோள் வினைமுற்றுச் சொற்களை நாம் பயன்படுத்துவது சொற் சிக்கனத்திற்கும் சில சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும் உதவியாக இருக்கும். எனவே நாம் அனைவரும் இனி வியங்கோள் வினை முற்றுகளையே உரிய இடங்களில் பயன்படுத்துவோமாக.

☆☆☆☆☆

27. ஏது, தவிரவும்

விருந்து மண்டபத்தில் கூடியுள்ள விருந்தினர்களில் சிலர் யார்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? யார் உதவியுடன் வந்தார்கள்? என்று தெரிந்துகொள்ளப்பட முடியாதவர்களாக இருப்பார்கள். அதுபோலத் தமிழில் வழக்கத்தில் உள்ள சில சொற்கள் யாரால், எப்போது, ஏன், எங்கிருந்து, கொண்டு வரப்பட்டன? என்று தெரிந்து கொள்ள முடியாதபடி யிருக்கும். அப்படிப்பட்ட சொற்களில் ஒன்றுதான் ஏது என்பது. தமிழில், இது உனக்கு ஏது? என்று வினாப்பொருளில் வரும் 'ஏது' என்பது ஒன்று. மற்றொன்று, காரணம் என்னும் பொருளைத் தரும் வடமொழிச் சொல்லாகிய ஏது என்பது. இங்கு நம் ஆய்விற் குரியதாக உள்ள 'ஏது' என்பது இவ் விரண்டு சொற்களும் அல்லாத வேறொரு சொல்லாகும்.

1. ''தாங்கள் எந்த வண்டியில் வருவீர்கள் என்பதை எங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்தால் நாங்கள் நிலையத் திற்கு வந்திருந்து தங்களை வரவேற்க ஏதுவாக இருக்கும்.'' இத்தொடரில் உள்ள ஏது என்னும் சொல் வினாப் பொருளிலோ, காரணப் பொருளிலோ வரவில்லை. ஆனால் இது பலராலும் பயன்படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். அப்படிப் பயன்படுத்தப் படும் இச் சொல்லுக்குத் 'தோதாக இருக்கும்', 'உதவியாக இருக்கும்' என்பன போன்ற பொருள்களே உண்டு. ஆகவே, இச் சொல் இப் பொருளில் தவறாக ஆளப்படுகிறது என்றுதான் தெரிகிறது. ஆகவே, இத் தகைய இடங்களில் மேற் கூறியது போல் 'தோதாக இருக்கும். 'உதவியாக இருக்கும்' என்பன போன்ற சொற்களைப் பயன்படுத்துவதே தக்கதாகும்.

2. எங்கிருந்து வந்தது என்று அறிய வேண்டிய தேவை இல்லா விட்டாலும் பொருத்த மற்ற பொருளில் ஆளப்படும் மற்றொரு சொல் 'தவிரவும்' என்பது. தவிர்த்தல் என்னும் சொல்லுக்குக் கைவிடுதல், விட்டு விடுதல், நிகழாமல் பார்த்துக்கொள்ளுதல்

என்பன போன்ற பொருள்கள்தாம் உண்டு. ஆனால் பின்வரும் தொடரைப் பாருங்கள்:

"நேற்று மழையே பெய்யவில்லை. தவிரவும் அங்குத் தரை ஈரமாகவும் இல்லை. ஆகவே, அவர் கூறுவதை ஏற்க முடியாது."

இத் தொடர்களில் தவிரவும் என்னும் சொல் தனக்குரிய வழக்கமான பொருள் எதையும் தருவதாகத் தெரியவில்லை. ஆகவே, இத் தகைய இடங்களில் இச் சொல் தவிர்க்கப்பட வேண்டியதாகும் என்று கருதுகிறோம். அந்த இடத்தில் 'மேலும்' 'மற்றும்' என்னும் சொற்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது இவை போன்ற பொருத்தமான வேறொரு சொல்லையோ பயன்படுத்துவதுதான் ஏற்றது.

☆☆☆☆☆

28. மாநாடு ஏற்பாடுகள்

1. தேசிய மாநாடு கட்சி
2. மாநாடு ஏற்பாடுகள் நடக்கின்றன
3. கிழக்குக் கூவம் ஆறு சாலை
4. ஆறு மணல் வேலைக்கு நல்லது

மேலுள்ள தொடர்களில் பொருள் வேறுபாட்டுக்கு அல்லது பொருள் குழப்பத்திற்கு இடம் இருக்கிறதா என்று பார்ப்போம். தேசிய மாநாடு கட்சி என்னும் தொடரில் தேசிய மாநாடும், கட்சியும் என்னும் பொருளும், தேசிய மாநாடு என்னும் பெயரை யுடைய ஒரு கட்சி என்னும் பொருளும் அடங்கியிருப்பது தோன்றும். அதே போல் இரண்டாந் தொடரில் அந்த மாநாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகள் நடக்கின்றன என்று ஒரு பொருளும் அந்த மாநாடும் சில ஏற்பாடுகளும் நடைபெறு கின்றன என்னும் மற்றொரு பொருளும் பெறப்படும். மூன்றாவ தாக உள்ள கிழக்குக் கூவம் ஆறு சாலை என்னும் தொடரில் உள்ள ஆறு சாலை என்பதற்கு ஆறு சாலைகள் என்னும் பொருளும், ஆற்றுக்கு அருகில் உள்ள சாலை என்னும் பொருளும் கிடைக்கும். நான்காவது தொடராகிய ஆறு மணல் வேலைக்கு நல்லது என்பதற்கு, எண்ணி ஆறே ஆறு மணல்கள் வேலைக்கு நல்லது என்றும் ஆற்றில் உள்ள மணல் வேலைக்கு நல்லது என்றும் பொருள் ஏற்படும். ஒரு தொடருக்கு இவ்வாறு இரு வேறு பொருள்கள் இருக்குமானால் பொருள் குழப்பமும், சிக்கலும் ஏற்படுமன்றோ? அவற்றைத் தவிர்ப்பதற்காகத் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் இப்படிப்பட்ட இடங்களில் உள்ள 'ட' 'ற' ஆகிய மெய் எழுத்துகளை இரட்டித்துப் பயன்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதனால்தான் காடு பூனை என்பதைக் காட்டுப்பூனை என்றும், ஏடு கல்வி என்பதை ஏட்டுக் கல்வி என்றும், வீடு வசதி என்பதை வீட்டுவசதி என்றும் கூறும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறே ஆறு மணல் என்பதை ஆற்று மணல் என்றும், ஆறு ஊர் என்பதை ஆற்றூர் என்றும் சோறு பானை என்பதைச் சோற்றுப்பானை என்றும் கூறும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இவ்வாறு பொருள் வேறு பாட்டுக்கு இடம் தரக்கூடிய சொற்களில் உள்ள ட்,ற் ஆகிய இரு ஒற்று எழுத்துகளையும் இரட்டித்து எழுதுவதும் பேசுவதும் பொருள் தெளிவுக்கு இன்றியமையாதது என்பதை நாம் மறத்தலாகாது.

☆☆☆☆☆

29. எது? என்ன?

அது எது? அது என்ன? என்னும் இவ்விரு தொடர்களையும் மேலோட்டமாக நோக்கினால் அவைகளுக் கிடையில் எந்த வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. சிலர் எது, என்ன ஆகிய இவ் விரு சொற்களையும், வேறுபாடின்றிப் பயன்படுத்து வதையும் நம்மால் காண முடியும். ஆனால் இவற்றைச் சற்று உற்று நோக்குவோமானால் இவ் விரு வினாச் சொற்களுக்கும்

இடையில் அழகிய, நுட்பமான பொருள் வேறுபாடு இருப்பது புலப்படக் காணலாம். ஒருவரைப் பார்த்து உன் பெயர் என்ன என்று வினாவுவதற்கும், உன் பெயர் எது என்று வினாவுவதற்கும் வேறுபாடு இருக்கிறதா இல்லையா? ஏதோ வேறுபாடு இருப்பதாகத் தோன்றினாலும் அது என்ன வேறுபாடு என்று தோன்றுவது அரிதாயிருக்கும். மேலும் அச் சொற்களைக் கூர்ந்து நோக்குவோமானால் அவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு விளங்காமல் போகாது. எந்த எந்த இடங்களில் இவற்றைப் பயன்படுத்துகிறோம் என்பதையும், அந்த அந்த இடங்களில் உள்ள அவற்றின் சரியான பொருளையும் நன்கு நோக்குவோ மானல் அந்த வேறுபாடு புலப்படும். அவ்வாறு எமக்குப் புலப்பட்ட வேறுபாட்டை இங்குக் கூறுகிறோம். நீங்களும் இதுபற்றி ஆழ்ந்து எண்ணிப் பார்த்து யாம் எடுத்துக்காட்டும் வேறுபாடு சரியானது தானா என்று பார்த்துக் கொள்ளுங்கள். எமக்குத் தோன்றும் வேறுபாடு பின் வருவதுதான்.

'என்ன' என்னும் வினாச் சொல்லை முற்றிலும் நம்மால் அறியப்படாத ஒன்றை அறிந்துகொள்ள விரும்பும் போது பயன்படுத்துகிறோம். 'எது' என்னும் வினாச் சொல்லைப் பொதுவாக அறியப்பட்டும், சிறப்பாக அறியப்படாமலு முள்ள ஒன்றைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பும்போது பயன் படுத்துகிறோம் என்று யாம் கருதுகிறோம். இதை மேலும் சற்று விளக்குவோமா? ஒருவருடைய பெயர் இன்னது என்று முற்றிலும் தெரியாத நிலையில் அஃதாவது சைவப் பெயரா? வைணவப் பெயரா? கிருத்துவப் பெயரா? முகம்மதியப் பெயரா? தமிழ்ப் பெயரா? வடமொழிப் பெயரா? என்பன போன்ற எந்தக் குறிப்பும் தெரியாத இடங்களில் உன் பெயர் என்ன என்று கேட்பது பொருத்தமாயிருக்கும். ஒரு பட்டியலில் உள்ள பெயர்களில் நாம் தெரிந்துகொள்ள விரும்பும் ஒருவரது பெயரும் இருக்கிறது என்னும் பொதுவான அறிவு நமக்கு இருந்து, ஆனால் அப் பட்டியலில் உள்ள பெயர்களில் அவர் பெயர் எது என்பதை நாம்

தெரிந்து கொள்ள விரும்புகிறபோது (இவற்றில்) உன் பெயர் எது என்று கேட்பது பொருத்தமாயிருக்கும். இதை மாற்றிக் கேட்டுப் பாருங்கள். பொதுவாகவோ, சிறப்பாகவோ ஒருவரின் பெயரைப் பற்றி ஒன்றும் தெரியாத இடத்தில் உன் பெயர் 'எது' என்று கேட்டால் சரியாயிருக்குமா? அது போன்றே ஒருபட்டியலில் உள்ளவற்றில் இவர் பெயரும் இருக்கிறது என்று தெரிந்து கொண்டு பிறகு அவற்றில் அவர் பெயர் எது என்பதை மட்டும் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் உன் பெயர் என்ன என்று கேட்பது பொருத்தமாயிருக்குமா? ஆகவே, இவ்வாறு எதிர் முகமாகவும் நோக்கினால் அச் சொற்களின் பொருள் வேறுபாட்டை நாம் சரியாக உணர்ந்து கொள்ள முடியும். இவ் வேறுபாடுகளை அறிந்து இத்தகைய சொற்களைப் பயன் படுத்தாவிட்டால் இத்தகைய சொற்களின் நுட்பமும், கூர்மையும், ஒட்பமும் மழுங்கி, மறைந்து போகுமல்லவா? அதற்கு நாம் இடம் தரலாமா?

☆☆☆☆☆

30. 'கொழும்புவிலிருந்து'

1. அவர் இன்று கொழும்புவிலிருந்து வருகிறார்.
2. எதற்கும் நான் முயற்சித்துப் பார்க்கிறேன்.

மேலுள்ள இரு தொடர்களிலும் ஏதேனும் குறை இருக்கிறதா என்று பாருங்கள். பெரும்பாலும் இவற்றில் எக் குறையும் இருப்பதாக யாருக்கும் தெரியாது. ஏனெனில் இவ் விரு தொடர்களும் நம்முடைய பேச்சிலும், எழுத்திலும் தாராளமாகப் பயன்பட்டு வருகின்றன. பழக்கத்தில் வந்து விடுவதனாலேயே பல பிழைகள் நமக்குத் தெரிவதில்லை. அதிலும் மொழிப் பிழைகள் தெரிவது அரிதினும் அரிதே. ஆயினும் வழக்கத்தில் தாராளமாகக் கையாளப்பட்டாலும், இவ்விரு தொடர்களிலு முள்ள இரு சொற்கள் சரியானவையல்ல. அவை 'கொழும்பு விலிருந்து' என்பதும், 'முயற்சித்து' என்பதும் ஆகும்.

கொழும்பு, இல், இருந்து ஆகிய மூன்று சொற்கள் சேர்ந்து 'கொழும்புவிலிருந்து' என்னும் தொடர் மொழி உருவாகியிருக்கிறது. 'இல்' 'இருந்து' ஆகிய இரண்டும் சேர்ந்து 'இலிருந்து' என்றாகும். இதில் தவறு ஏதுமில்லை. ஆனால் கொழும்பு+இலிருந்து= கொழும்புவிலிருந்து என்று சேர்ந்த சேர்க்கைதான் சரியானதாகப் படவில்லை.

1. உலகு + இல்=உலகுவில்
2. கரும்பு + இல்=கரும்புவில்
3. அரும்பு + இல்=அரும்புவில்

என்பன போல எழுதும் வழக்கமோ, பேசும் வழக்கமோ இருப்பதாகத் தெரியவில்லை.

அவை முறையே உலகில், கரும்பில், அரும்பில் என்றே பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றன. அதுவே தமிழ் மரபுப்படியும், இலக்கணப்படியும் சரியானதாகும். ஆகவே அது கொழும்பு+இல் கொழும்பில் என்றுதான் வரவேண்டும். ஆகவே இன்று 'கொழும்பிலிருந்து' வருகிறார் என்று வழங்குவதே சரியானதாகத் தோன்றுகிறது.

முயற்சித்துப் பார்க்கிறேன் என்பதும் பொருந்தாத வழக்கமாகும். பயிற்சி என்பதைப் பயிற்சித்துப் பார்க்கிறேன் என்று நாம் சொல்வதில்லை. ஆகவே 'முயற்சித்தல்' என்பதும் பொருந்தாத வழக்குதான். அதை 'முயன்று பார்க்கிறேன்' என்று சொல்வதே பொருத்தமான வழக்கு. 'முயல்' என்பதிலிருந்துதான் 'முயலல்', 'முயலுதல்' என்னும் சொற்கள் பிறந்தன. அவற்றின் வளர்ச்சிதான் 'முயலுகிறேன்' 'முயன்று பார்க்கிறேன்' 'முயற்சி செய்கிறேன்' என்பனவெல்லாம். ஆகவே முயற்சித்தல் என்பதை விட 'முயலல்' 'முயற்சி செய்தல்' என்பனவும், 'முயற்சித்துப் பார்க்கிறேன்' என்பதை விட 'முயன்று பார்க்கிறேன்' முயற்சி செய்து பார்க்கிறேன் என்பனவும் சரியான வழக்குகள்.

☆☆☆☆☆

31. அவரது-தமது

1. சேரன் செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோ, சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தைப் படைத்துள்ளார். அவர் அவரது நூலில் முத் தமிழுக்கும் இடம் அளித்துள்ளார்.

2. சேரன் செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோ சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தைப் படைத்துள்ளார். அவர் தமது நூலில் முத் தமிழுக்கும் இடம் அளித்துள்ளார்.

இவ் விரண்டு தொடர்களையும் அமைதியாக ஓரிரு முறை படித்துப் பாருங்கள். இவற்றில் என்ன வேறுபாடு இருக்கிறது என்று கண்டுபிடிப்பதற்காக மட்டும் இவற்றை நாம் இங்குத் தரவில்லை. இவை இரண்டிலுமுள்ள வேறுபாட்டைக் கண்டுபிடிப்பதோடு அவ் வேறுபாடு பொருத்தமானதா என்பதையும் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அவை மட்டுமல்லாமல் மூன்றாவதாக நீங்கள் மற்றொன்றையும் செய்ய வேண்டும். அது என்னவென்றால், இவ் விரண்டு பகுதிகளிலும் எது மிகவும் சரியானது என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும். மிகவும் சரியானது 2. இதே போல் மற்றோர் இணைப் பகுதிகளையும் கீழே தருகிறோம். அவைகளையும் நன்கு கூர்ந்து நோக்குங்கள்:

1. சேரன் ஆண்ட நாடு சேரநாடு என்றும், சோழன் ஆண்ட நாடு சோழநாடு என்றும், பாண்டியன் ஆண்ட நாடு பாண்டிய நாடு என்றும் கூறப்படுகின்றன.

2. சேர, சோழ, பாண்டியர் ஆண்ட நாடுகள் முறையே சேர நாடென்றும், சோழ நாடென்றும், பாண்டிய நாடென்றும் கூறப்படுகின்றன.

இரண்டும் சரியானவையே ஆயினும் 2 சிறப்பானது.

☆☆☆☆☆

32. ஐநூறு - ஐந்நூறு

இக் கட்டுரைத் தொடருக்கு யாம் 'வழுக்குத் தமிழ்' என்று பெயரிட்ட போது தந்த விளக்கத்தை மீண்டும் இங்குக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. முன்னால் செல்கின்ற யாரோ எக் காரணத்தினாலோ வழுக்கி விழ நேர்ந்தால், பின்னால் வருகிற பெரும்பாலானவர்கள் இதுதான் சரியான முறை போலும் என்று கருதி அந்த இடத்தில் தவறாமல் விழுந்து எழுந்து செல்வது போல் யாரோ, எதனாலோ எப்போதோ ஒன்றைப் பிழையாக எழுதிவிடப், பின்னால் அதையே சரியானதாகக் கருதி அப் பிழையை எல்லோரும் தொடர்ந்து செய்கிறார்கள். அதற்கு ஒரு புதிய எடுத்துக்காட்டு மோரீசுத் தீவில் எமக்குக் கிடைத்தது.

அண்மையில் மோரீசுத் தீவு நாட்டில் நடந்த ஏழாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகத் தமிழக அரசின் சார்பில் சென்ற குழுவில் யாமும் இடம் பெற்றிருந்தோம். அந் நாட்டில் புழக்கத்திலுள்ள பணத்தாள்களில் (கரன்சி நோட்) தமிழ் மொழியும் இடம் பெற்றிருக்கிறது. யாம் பார்த்த ஐந்நூறு ரூபாய்த் தாளில் 'ஐநூறு ரூபாய்' என்று எழுதப்பட்டிருந்தது. அத் தவற்றைச் சுட்டிக் காட்டி யாம் உசாவியபோது அதை வடிவமைத்தவர்கள் இந்தியாவிலுள்ள ஐந்நூறு ரூபாய் நோட்டில் எழுதப்பட்டிருந்த தமிழ் வடிவத்தை அப்படியே தாமும் பின்பற்றி எழுதியதாகத் தெரிய வந்தது. பிறகு இங்கு வந்து நம் ஐந்நூறு ரூபாய்த் தாளை முதன் முறையாகப் பார்த்தோம். அதில் மோரீசு நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல் 'ஐநூறு ரூபாய்' என்றுதான் எழுதப்பட்டிருந்தது. அதனால் எமக்கு வருத்தமும், நாணமும் ஏற்பட்டன. உண்மையில் அது ஐந்நூறு ரூபாய் என்றுதான் இருக்க வேண்டும். இந்தப் பிழையை இந்தியாவில் அதை வடிவமைத்தவர்கள் யாரோ, எதனாலோ, எப்போதோ செய்துவிட்டார்கள். அப் பிழை வாழையடி வாழையாகத் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறது. அப் பிழை வாழை

மோரீசுக்குஞ் சென்று மோரீசுப் பிழைவாழையாகவும் தழைத்து வளர்வதைக் கண்டு யாம் தலை குனிகிறோம். இந்தியாவிலுள்ள அல்லது தமிழ் நாட்டிலுள்ள எத் தமிழறிஞரும் இப் பிழையை இது வரை சுட்டிக் காட்டியிருப்பதாக எமக்குத் தெரியவில்லை. ஒரு வேளை யாரேனும் சுட்டிக் காட்டியிருந்தாலும் அது ஏற்கப் படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கவும் கூடும். அல்லது யாம் அது வரையில் ஐந்நூறு ரூபாய்த் தாளைப் பார்க்க நேரமல் இருந்தது போல் எல்லாத் தமிழ் அறிஞர்களுமே இருந்திருப்பார்களோ என்றும் கருதுகிறோம். எப்படியிருந்தாலும் இப் போதேனும் அப் பிழைக்குத் தீர்வு ஏற்பட்டால் போதும் என்று கருதுகிறோம்.

இப் பிழையை யாம் சுட்டிக் காட்டும் போது தமிழிலுள்ள தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரு இலக்கணங்களி லிருந்தும் ஆதாரங்களைத் தர விரும்புகிறோம்.

தொல்காப்பிய எழுத்ததிகாரம், குற்றியலுகரப் புணரியலில் உள்ள ''நூறுமுன் வரினும் கூறிய இயல்பே'' என்னும் 460-ஆம் நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கத்தை எம்சொற்களில் அமைத்துப் பின்வருமாறு தருகிறோம்:

ஒன்று முதல் ஒன்பது வரையிலு முள்ள எண்களின் முன்னால் நூறு என்னும் எண் வந்தாலும், மேல் பத்து என்பது வரும் போது அவை எப்படிச் சேரும் என்று கூறப்பட்டதோ அதே முறையை இங்கேயும் கொள்ள வேண்டும். அடுத்துள்ள 462-ஆம் நூற்பாவில் தொல்காப்பியர் ''நான்கும், ஐந்தும் ஒற்று மெய் திரியா'' என்கிறார். நான்கு, ஐந்து ஆகியவற்றின் முன்னால் நூறு என்னும் எண் வந்து சேரும்போது இவற்றின் நடுவிலுள்ள மெய்யெழுத்துகள் திரியாமல் அப்படியேயிருக்கும் என்பது இதன் பொருள். இதன்படி ஐந்து + நூறு = ஐந்நூறு என்றுதான் ஆக வேண்டும். 460-ஆம் நூற்பாவின்படி 'து' கெட்டு 462-ஆம் நூற்பாவின்படி 'ந்' அப்படியே இருந்து ஐந்நூறு என்னும் தொடர் மொழி உருவாகிறது.

பிற்காலத்தில் வந்த நன்னூலும் உயிரீற்றுப் புணரியலின் 192-ஆம் நூற்பாவில் 'ஐந்தனொற்றடைவதும் இனமுங் கேடும்' என்கிறது. அதற்குச் சிவஞான முனிவர் பின் வருமாறு கூறும் விரிவுரை காணத்தக்கது: ''அடைவதும் இனமும் என்றமையின் அருத்தாபத்தியால் ஐந்நூறு, ஐந்தூண் என்புழி ஒற்றுத் தன்னியல்பில் நிற்றல் கொள்க.'' ஆகவே தமிழ் இலக்கணங்கள் இரண்டும் கூறுகிறபடி ஐந்நூறு ரூபாய் என்று இருப்பது தான் சரி என்று நாம் கருதுகிறோம்.

☆☆☆☆☆

33. அலுப்பு - சலிப்பு

''அவர் அலுப்புச் சலிப்பில்லாமல் தம் கடமையைத் தொடர்ந்து செய்கிறார்.''

இத் தொடரிலுள்ள 'அலுப்புச் சலிப்பு' என்பது அலுப்பும் சலிப்பும் என்னும் இரு சொற்களின் கூட்டு ஆகும். இவற்றைப் பலரும் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தக் காணலாம். இவற்றை ஆள்கிறவர்கள் எல்லோரும் இவற்றின் பொருள் நுட்பத்தை அறிந்துதான் ஆள்கிறார்கள் என்று கூற முடியாது. ஆனாலும் அதனால் பொருள் குழப்பமோ தவறோ ஏற்படுவ தாகவும் தெரியவில்லை. எனினும் அவற்றின் பொருட் சிறப்பை நன்கு நோக்க வேண்டிய தேவை ஏற்பட்டபோதே அச் சொற்கள் இரண்டும் ஆராயப்பட வேண்டியவை என்னும் எண்ணம் எமக்கு ஏற்பட்டது. அதன்படி அவற்றை நாம் கூர்ந்து நோக்கிய போது அவை இரண்டிற்கும் நுண்ணிய பொருள் வேறுபாடு இருப்பது தெரிந்தது.

ஒரு தொழிலைச் செய்யும் போது அதனைத் தொடர்ந்து செய்ய முடியாமல், ''இதனைச் செய்தது போதும். இனிச் செய்ய வேண்டா; நிறுத்தி விடலாம். அல்லது நிறுத்தி வைக்கலாம்'' என்பன போன்ற உணர்வு ஏற்பட்டு அப் பணி தடைப்படுவது என்னும் அளவில் இவ் விரு சொற்களின் பொருளிலும் ஒற்றுமை இருக்கிறது. அப்பொதுத் தன்மையில்லாவிட்டால் அவற்றை

நாம் இணைத்துப் பயன்படுத்த மாட்டோம். இவ்வாறு பொதுத் தன்மையால் ஒன்றுபட்டுள்ள அச் சொற்க ளிரண்டும் சிறப்புத் தன்மையால் பொருள் வேறுபாடு உடையனவாகவும் இருப்பது சுவையானதொரு தகவலாகும்.

இனி அச் சிறப்புத் தன்மையால் அவ் விரு சொற்களுக்கு மிடையேயுள்ள வேறுபாட்டைக் காண்போமா?

அலுப்பு என்பது ஒரு தொழிலைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் போது ஏற்படும் களைப்பினால் உண்டாகும் மனநிலையைக் குறிக்கும். சான்றாக, ''அவருக்கு இதைச் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டது'' என்னும் போது களைத்து விட்டது என்னும் பொருள் அங்குத் தலைகாட்டுவதைக் காணலாம். ஆனால் முழுவதும் களைப்பு என்றும் சொல்லிவிட முடியாது. ஒரு வகையான சலிப்பு உணர்வும் அந்தக் களைப்புக்குள் ஒடுங்கி இருப்பது நமக்குத் தெரிகிறது.

'சலிப்பு' என்பது ஒரு பணியைத் தொடர்ந்து செய்யும் போது உள்ளத்தில் தோன்றுகின்ற ஒரு வகையான வெறுப்பைக் குறிப்பதாகும். இதை முழுவதும் வெறுப்பு என்றும் சொல்லிவிட முடியாது. ஆனாலும் அப்படித்தான் சொல்ல வேண்டியு மிருக்கிறது. எனவே, இதைச் சிறந்த உணவே ஆனாலும் அதை மிகுதியாக உண்ணும்போது ஏற்படுகின்ற திகட்டல் தன்மை கலந்த வெறுப்பு போன்றது என்று சொல்லலாம். இதை இன்னும் நன்றாகக் கவனித்தால் அச் சலிப்புக்குள் மெல்லிய களைப்பு உணர்வும் ஒடுங்கி இருப்பதுபோல் எமக்குத் தோன்றுகிறது.

ஆகவே இச் சிறப்புத் தன்மையால் ஏற்பட்ட வேறுபா டிரண்டும் ஒன்றோடொன்று மாறிக் கலந்துள்ள கூட்டுப் பொதுத் தன்மை யொன்றை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. அதனால் தான் இவ் விரு சொற்களையும் நாம் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பயன்படுத்தினாலும் பிழையோ குறையோ ஏற்படுவதில்லை. இதை அறிஞர்கள் மேலும் எண்ணிப் பார்த்தல் தகும் என்று நாம் கருதுகிறோம்.

☆☆☆☆☆

34. மரம் நடு விழா

பல்லாண்டுகளாக 'மரம் நடு விழா' என்னும் தொடர் அரசு ஆவணங்களிலும். செய்தித் தாள்களிலும், கல்விக்கூட அறிக்கைகளிலும், மக்களின் பிற வழக்குகளிலும் இடம் பெற்றிருப்பதை எல்லாரும் அறிவோம். ஆனால் அதிலுள்ள பிழையைச் சிலர் மட்டுமே அறிந்திருக்கிறோம். அவ் விழாவில் எங்கும் யாரும் மரத்தை நடுவதில்லை. ஆகவே மரம் நடு விழா என்று அதற்குப் பெயர் வைப்பது பொருத்தமற்றது என்பது தெரியும். பின் அங்கு எதை நடுகிறார்கள்? பின்னால் மரங்களாக வளரக்கூடிய கன்றுகளையே நடுகிறார்கள். அவற்றையும் சிலர் கன்று என்று கூறாமல் செடி என்று சொல்லக் காண்கிறோம். மாஞ் செடி, வேப்பஞ் செடி, தென்னஞ் செடி என்று குறிப்பிடுவதை யாம் பரவலாகக் கேட்டிருக்கிறோம். இளைய தென்னையைத் தென்னம் பிள்ளை என்று சொல்வது தான் சரியான வழக்கம். அவ்வாறே பிற இளையவற்றையும் அதாவது பின்னால் மரங்களாகக்கூடிய இளையவற்றைக் கன்றுகள் என்றுதான் சொல்ல வேண்டும். கன்றுக்கும், செடிக்கும் நல்ல வேறுபாடு இருக்கிறது. கத்திரிச் செடி, மிளகாய்ச் செடி ஆகியவை எவ்வளவு நாள் வாழ்ந்தாலும் மரங்களாக மாட்டா. ஆகவே, பின்னால் வளர்ந்து மரங்களாகக் கூடிய மா, வேம்பு, புளி போன்றவற்றை மாங்கன்று, வேப்பங்கன்று, புளியங்கன்று என்று சொல்வதுதான் சரி. மரங்களாகாமல் செடிகளாகவே இருந்து மடியக் கூடிய வற்றைச் செடி என்று சொல்ல வேண்டும். அச் செடிகளின் இளையவற்றை 'நாற்று' என்று சொல்வது தக்கது. கத்திரி நாற்று, மிளகாய் நாற்று போன்றவை இப் பிரிவில் அடங்கும். நாற்றாக இருப்பனவெல்லாம் செடிகளாவதில்லை. மிளகாய் போன்றவை செடிகளாக வளரக் கூடியவை. நெல், கேழ்வரகு போன்றவை ஓரளவு வள்ர்ந்தபின் அவற்றைப் பயிர் என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே **நாற்று, பயிர், செடி, கன்று, மரம்** ஆகியவை தெளிவான வேறுபாடுடைய சொற்கள் என்பதை எல்லாரும் அறிந்துகொண்டு அவற்றைத் தக்கவாறு பயன் படுத்துவது தமிழ் மரபை வாழ வைப்பதாகும். இது தொடர்பாக இன்னொன்றையும் இங்குச் சுட்டுவது ஏற்றதாகும். அஃதாவது **தோட்டம்** என்பதற்கும் **தோப்பு** என்பதற்கு முள்ள வேறு பாட்டையே சுட்டிக் காட்ட விரும்புகிறோம். தோட்டம் என்பது சில இடங்களில் வீட்டின் பின்புறத்தைக் குறிப்பிடப் பயன் படுகிறது. பல இடங்களில் செடி கொடிகள் பயிரிடக்கூடிய ஒரு வகையான நிலத்தைக் குறிக்கப் பயன்படுகிறது. சான்றாகப் பூந்தோட்டம், திராட்சைத் தோட்டம் போன்றவற்றைக் கூறலாம். தோப்பு என்பது பெரு மரங்கள் நிறைந்துள்ள ஒரு பகுதியைக் குறிக்கும். அது புளியந் தோப்பு, மாந் தோப்பு போன்ற வழக்கு களால் உணரப்படலாம். இளைய மரங்களுள்ள இடங்களை 'இள மரக் கா' என்று இலக்கியங்கள் கூறும். **காடு** என்பது இவற்றி லிருந்து முற்றிலும் வேறுபட்டது. மரங்கள் அடர்ந்திருந்தாலும், அதைத் தோப்பு என்று சொல்வதில்லை. தோப்பு மக்களால் வளர்க்கப்படுவது. பொதுவாகக் காடு இயற்கையாக உண்டாகக் கூடியது. இவை இரண்டிற்கும் வேறு சில நல்ல வேறுபாடுகளும் இருப்பதை எல்லோரும் நன்கு அறிவோம்.

☆☆☆☆☆

35. உண்ணுதல்

நாம் உண்ணும் உணவு நான்கு வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளது. நான்கு வகை உணவுகளையும் உண்ணும் தொழிலுக்கு நான்கு வகையான சொற்கள் தமிழில் பழங்காலம் முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவை முறையே உண்ணல், தின்னல், நக்கல், பருகல் என்பனவாகும்.

சோறு, இட்டலி போன்றவற்றை உட்கொள்வதை உண்ணல் என்னும் சொல்லாலும், முறுக்கு, காய்கறி போன்றவற்றை

உட்கொள்வதைத் தின்னல் என்னும் சொல்லாலும், தேன் முதலியவற்றை உட்கொள்வதை நக்குதல் என்னும் சொல் லாலும், மோர், இளநீர், பால், நீர் போன்றவற்றை யுட்கொள் வதைப் பருகல் என்னுஞ் சொல்லாலும் குறிப்பிடுவார்கள். ஆனால் நடைமுறையில் அவற்றில் சில வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. எல்லா வகையான உணவுகளையும் உட் கொள்ளும் தொழிலை உண்ணல் என்னும் சொல்லால் குறிப்பிடும் வழக்கம் வந்துவிட்டது. உண்ணுதல் என்னும் பொருளில் சாப்பிடுதல் என்னும் சொல் பரவலாகப் பயன் படுத்தப்படுகிறது. சோறு சாப்பிட்டேன்; காய்கறி சாப்பிட்டேன்; காப்பிச் சாப்பிட்டேன்; பாயசம் சாப்பிட்டேன் என்று சொல்கிற வழக்கம் வந்து விட்டது. இது சரியான மரபன்று. இந்த மரபை நாம் அனுமதித்துவிட்டால் இன்னும் சிறிது காலம் கழித்துச் சோறு தின்றான் என்னும் தொடர் போல், காப்பித் தின்றான்; பாயசம் தின்றான் என்னும் வழக்கம் ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடக் கூடும். ஆகவே மேற் கூறிய மரபை மாற்றாமல் தமிழிலுள்ள இந்த அருமையான பாகுபாட்டைக் காப்பாற்றுவது நல்லது என்று யாம் நினைக்கிறோம். நான்கு வகை உட்கொள்ளும் முறைகளையும், பொதுவாகக் குறிப்பிடுவதற்கு வேறு சில சொற்கள் தமிழில் இருந்தன. அயிலுதல், மிசைதல் போன்றவையே அவை. ஆனால் அத் தகைய சொற்கள் இப்பொழுது வழக்கத்தில் இல்லை. எனவே பொதுச் சொல்லாக உண்ணுதல் என்னும் சொல்லையே பயன்படுத்தத் தொடங்கி விட்டோம். தின்னுதல் என்னுதை சொல்லை இழி வழக்காக நம்மில் சிலர் கருதத் தொடங்கி விட்டோம். தின்னுதல் என்பதை விலங்குகள் உணவு உண்பதைக் குறிக்கப் பயன்படுத்துகிறோம். ஆதலால் அதை மக்களுக்குப் பயன்படுத்தக்கூடாது என்று அத் தகையோர் நினைக்கின்றார்கள் போலும். பார்த்தல், ஓடுதல் போன்ற வினைகள் விலங்குகள் முதலியவற்றிற்கும் பயன்படுவதால் மக்களுக்கு அவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்று நாம் நினைப்பது இல்லை. ஆகவே

கரும்பு தின்றான் என்று செல்வதில் எத் தவறும் இல்லை. அருந்துதல் என்னும் சொல் இப்போது குடித்தல் என்னும் பொருளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அது உண்ணுதல் என்னும் சொல் போல், பொதுப் பொருள் தருவதும் உண்டு. நீர் அருந்தினான் என்று சொல்வதைப்போல் 'உணவு அருந்தினான்' என்று சொல்கிற வழக்கமும் இருக்கிறது. ஆனால் பருகுதல், குடித்தல் ஆகிய சொற்கள் நிலை பிறழாமல் நீர்ப் பொருள்களை உட்கொள்வதற்கு மட்டும்ஆளப்படுகின்றன. உண்ணல், அருந்துதல் போன்ற சொற்கள் தவிர ஏனைய சொற்களாகிய தின்னல், பருகல் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்கள் தத்தமக்குரிய பொருள்களை மட்டுமே குறிக்குமாறு ஆளப்பட்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

☆☆☆☆☆

36. நாகசுரம்

''நாகசுரம், நாதசுரம்'' ஆகிய இவை இரண்டில் எது சரியானது என்னும் அய்யம் பலருக்கும் ஏற்பட்டுள்ளது. சொற்கள் இரண்டாக இருந்தாலும் அவை ஒரு பொருளைக் குறித்துதான் ஆளப்படுகின்றன. அவ் விரு சொற்களாலும் சுட்டப்படுகின்ற இசைக் கருவி தமிழர்களுக்கே உரியதொரு சிறப்புக் கருவியாகும். இன்றும் பொதுவாகத் தமிழர்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்ற கருவியாகவும் அது இருக்கிறது. ஒரு சில தமிழரல்லாதவர்களும் அதை இன்று பயன்படுத்தத் தொடங்கி யிருப்பினும் அது தமிழ் நாட்டில் மட்டுமே சிறப்பிடம் பெற்றிருக்கிற கருவியாகும். சிறப்பிடம் என்பதைவிடத் தலைமையிடம் பெற்றிருக்கின்றது என்று சொல்வதும் மிகப் பொருத்தம். குடும்ப விழாக்களிலும், பொது இடங்களில் நடக்கின்ற விழாக்களிலும், தமிழர் பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் இக் கருவிக்கு முதலிடம் தரப்படுவதை

இன்றும் காணலாம். ஆகவே தமிழர் நாகரிகத்தின் அடையாளங் களுள் ஒன்றாக விளங்குவது இக் கருவி எனலாம். நாதம் என்பதன் அடியாகப் பிறந்த நாதசுரம் என்பது இக் கருவிக்குப் பொருத்தமான பெயராகத் தெரியவில்லை. ஏனென்றால் எல்லா இசைக்கருவிகளிலுமே நாதம் எழுகிறது. ஒரு வகையில் இக் கருவியின் தோற்றம் பாம்பின் தோற்றத்தை ஒத்ததாக இருப்ப தால் இதற்கு நாக சுரம் என்னும் பெயர்தான் ஓரளவுக்கேனும் பொருந்துவதாக இருக்கிறது. தமிழ் அகர முதலிகள் நாகசுரம் என்னும் சொல்லுக்குத்தான் 'துளைக்கருவி வகை' என்று பொருள் தந்துள்ளன. சென்னைப் பல்கலைக் கழகப் பேரக ராதியில் நாதசுரம் என்னும் சொல்லும் குறிப்பிடப்பட்டு நாகசுரம் என்னும் பகுதியைக் காண்க என்று தரப்பட்டிருக்கிறது. ஆகவே அப் பேரகராதியும் நாகசுரம் என்பதற்கே முதலிடம் தந்துள்ளது என்று தெரிகிறது. ஆகவே அதனை 'நாகசுரம்' என்று வழங்குவது தான் ஏற்புடையது என்பது எம் கருத்து. நாகசுரக் கலை வல்லாரிடையே நாயனம் என்னும் ஒருசொல் வாழ்வதையும் இங்கு நாம் மறந்து விடக் கூடாது.

☆☆☆☆☆

37. எய்தல்-எய்துதல்

சில பொருள்கள் மேற் பார்வைக்கு ஒன்று போல் தோன்றி நம்மை ஏமாற்றுவது உண்டு. அதே போல் சொற்களும் ஒன்றோ டொன்று வடிவ வேறுபாடு மிகுதியாக இல்லாமையால் ஒன்று போல் தோன்றி நம்மைக் குழப்பி விடுவதுண்டு. அப்படிப்பட்ட சொற்கள் சில வற்றை இங்கு நாம் அடையாளம் காணலாம்.

எய்தல் - எய்துதல்

உரியது - உரித்தது

இவ் விரண்டு இணைச் சொற்களும் பல எழுத்தாளர்களை மருட்டி வெற்றி கொண்டிருக்கின்றன. இவைகளுக் கிடையே

சொல் லளவில் மிகுதியான வேறுபாடில்லை. ஆனால் இவ் விணைச் சொற்களுக்கு முற்றிலும் வேறுபட்ட பொருள் களுண்டு. அதனால் பலர் இவற்றைப் பிழைபடக் கையாள்வதை நம்மால் காண முடிகிறது.

எய்தல் என்னும் சொல்லுக்கு அம்பு போன்றவற்றை எய்தல் என்றும், எய்துதல் என்பதற்கு ஒரு குறிப்பிட்ட இடத்தை எய்துதல் என்றும் பொருள் கொள்ள வேண்டும். அவற்றை, அவன் அம்பை எய்தான், அவள் வீட்டை எய்தினாள் என்று ஆளலாம். இப் போது இவ் விரு சொற்களுக்கும் உள்ள பொருள் வேறுபாடு எல்லாருக்கும் நன்றாக விளங்கியிருக்கும் என்று கருதுகிறோம்.

அடுத்த இணையில் 'உரியது' என்பதை அந் நிலம் அவனுக்கு உரியது என்றும், 'உரித்தது' என்பதை அவ் வாழைப் பழம் உரித்தது; இவ் வாழைப் பழம் உரிக்காதது என்னுந் தொடர் களாக்கி அவைகளுக்கிடையேயுள்ள வேறுபாட்டைக் காணலாம். இதனை அவருக்கு உரித்தாக்குகிறேன் என்பதற்கு மாறாகச் சிலர் இதனை அவருக்கு உரித்ததாக்குகிறேன் என்று பிழைபட ஆண்டிருப்பதை நீங்கள் கண்டிருக்கக் கூடும். கூட்டங்களில் நன்றி கூறுகின்ற செயலர்கள் நன்றியை உரித்தாக்குகிறேன் என்பதற்கு மாறாக நன்றியை உரித்ததாக்கு கிறேன் என்று பிழைபடக் கூறுவதைச் சில இடங்களிலேனும் நீங்கள் கேட்டிருக்கக் கூடும்.

இவை போலவே மற்றொரு இணையையும் இங்குச் சுட்டிக் காட்டிவிடுவது நல்லது என்று கருதுகிறோம். அது,

உளமார - உளமாற என்பதுதான்.

இந்த இணையில் இறுதியிலுள்ள 'ரகர' 'றகர' வேறுபாடு தவிர வேறு வேறுபாடு எதுவும் சொல்லளவில் இல்லை. சொல்லள வில் உள்ள இச் சிறு வேறுபாடு பொருளளவில் எவ்வளவு பெரிய வேறுபாட்டைத் தருகிறது என்று நாம் தெரிந்து கொண்டோமே

யானால் இதில் நம்மால் தவறு செய்யாதிருத்தல் முடியாமற் போகாது. செய்தித் தாள்களில் இப்படிப்பட்ட பிழைகள் இருப்பதை யாம் பார்த்திருக்கிறோம். 'உளமார' என்னும் சொல்லுக்கு 'மனம் நிறைய' என்பது பொருள். 'உளமாற' என்னும் சொல்லுக்கு 'மனம் மாறுதலடைய' என்பது பொருள். உளம் நிறைந்த நன்றிக்கும், உளம் மாறுபடும் நன்றிக்கும் எவ்வளவு வேறுபாடுள்ளது! உளமார, மனமார என்றால் உளம் நிறைய, மனம் நிறைய என்றும், உளமாற, மனமாற என்றால் உள்ளம் மாறுபட, மனம் மாறுபட என்றும் பொருள் இருப்பதை நாம் நினைவிற் கொள்ளுதல் நன்று.

☆☆☆☆☆

38. அதுவோ அல்லது இதுவோ

சில நிகழ்ச்சிகளில் அழைக்கப்படாமலேயே வந்து அமர்ந்திருக்கும் தேவையற்ற விருந்தாளிகள் சிலர் காணப்படு வார்கள். அது போல் மொழியிலும் தேவையற்ற சில சொற்கள் ஆங்காங்கே இடம் பெற்று விட்டன. தேவையற்றவைகளைச் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பது தேவையற்றதன்றோ? அதனால் தானே பொங்கலுக்கு முதல் நாள் நிகழும் ''போக்கி''த் திருநாளில் நாம் நம் வீட்டிலுள்ள கழிக்க வேண்டியவைகளை எல்லாம் கழிக்கிறோம். அது போன்றே மொழி நடையில் கழிக்க வேண்டியவற்றைக் கழித்துச் செம்மைப்படுத்துவதும் தேவை யானதுதான். அதனால் மொழிச் செப்பமும், சொற் சுருக்கமும் ஏற்பட்டு மொழி நடையில் ஒரு செறிவும் அமையும். எடுத்துக்காட்டாக, நம் பேச்சிலும், எழுத்திலும் அதுவா? அல்லது இதுவா? அதுவோ? அல்லது இதுவோ? என்பன போன்ற தொடர் மொழிகளைக் கையாள்கிறோம். இவை போன்றவற்றில் உள்ள அல்லது என்னும் சொல் அழையாது நுழைந்து விட்ட விருந்தாளி யாகும். அச் சொல்லை எடுத்துவிட்டு அதுவா, இதுவா; அதுவோ, இதுவோ என்று எழுதினால் 'அல்லது' என்பதைச் சேர்த்து எழுதிய

தொடர்களில் எக் கருத்தும், எவ் வுணர்வும் வெளிப்பட்டனவோ அக் கருத்தும் உணர்வும் இவற்றிலும் குறைவில்லாமல் வெளிப்படும். ஆகவே, இவ் விடங்களிலிருந்து அல்லது என்பதை விடுவிப்பது நல்லது.

''**வேண்டா வெறுப்பாக** அதை ஏற்றுக் கொண்டேன்'' என்று பேச்சு வழக்கில் தாராளமாகப் புழங்கும் ஒரு தொடர் மொழி பற்றி யாம் எண்ணிய பொழுது 'வேண்டா வெறுப்பு' என்பது **'வேண்டா விருப்பு'** என்றிருந்தால் அத் தொடர் மொழியின் பொருள் சிறக்கும் என்னும் கருத்து எமக்கு ஏற்பட்டது. வெறுப்பே வேண்டாதது தானே? அதில் என்ன வேண்டா வெறுப்பு, வேண்டும் வெறுப்பு? ஆனால் சிலவற்றை விரும்புகிற பொழுது, அதில் நமக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் விரும்ப வேண்டிய தேவை ஏற்படும். சில விருந்துகளுக்குச் செல்லும் பொழுதும், சில அழைப்புகளை ஏற்கும் பொழுதும் உளமார நாம் அவற்றை விரும்பாவிட்டாலும் தவிர்க்க முடியாத நிலையில் அவற்றை விரும்பித் தீர நேரும். அத் தகைய இடங்களில் 'வேண்டா விருப்பாக' என்னும் தொடர் மொழியைப் பயன் படுத்துவது எவ்வளவு பொருத்தம் என்று பாருங்கள். உண்மை யிலேயே வேண்டும் வெறுப்பை உடையவர்கள் எவரேனு மிருந்தால் அவர்களுக்கு 'வேண்டாத வெறுப்பு' என்றும் ஒன்று இருக்குமானால் அவர்கள் மட்டும் அத் தகைய இடங்களில் மட்டும் ''வேண்டா வெறுப்பாக'' என்னும் தொடர் மொழியைப் பயன்படுத்துவது பொருத்தமானதாகலாம்.

☆☆☆☆☆

39. காவிரி, காவேரி

பொருள்களில் போலிப் பொருள்கள் என்று ஒருவகை உண்டு. அவை தாமே உருவாவதும் உண்டு; உருவாக்கப் படுவதும் உண்டு. சிலவற்றைப் பொருத்த வரையில் எது உண்மை, எது போலி என்று வேறு பிரித்தறிய முடியாது. அந்த

அளவுக்கு உண்மையும் போலியும் ஒத்திருக்கும். போலி என்றால் தரக்குறைவானது என்னும் பொருளும் உண்டு. ஒன்றைப் போன்றது என்னும் பொருளும் உண்டு. மொழியிலேயும் இப் போலிக்கு இடம் அளித்து இலக்கணங்கள் இயற்றப் பட்டுள்ளன. 'இலக்கணப் போலி' என்னும் ஒருவகைப் போலியை இலக்கணங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இங்குச் சில சொற் போலிகளை நாம் காண இருக்கிறோம். உண்மையான சொற்களைப் போலவே தோற்றமளிக்கும் சில போலிச் சொற்கள் சிறந்த இலக்கியங்களிலும் ஏறியுள்ளன. மக்களைப் போலவே கயவர்களும் இருப்பார்கள் என்று திருவள்ளுவர் கூறி இருப்பதைப் போல் செம்மையான சொற்களைப் போலவே தோற்ற மளிக்கும் போலிச் சொற்கள் இரண்டையே மேலே தலைப்பாகத் தந்துள்ளோம்.

காவிரி என்னும் சொல்லுக்குச் சோலைகளை உருவாக்குவது, வளர்ப்பது என்னும் பொருள் உண்டு. (கா-சோலை) ஆகவே, காவிரி என்னும் சொல் தொன்மையான தாகவும், செம்மையான தாகவும் இருக்கக் கூடும். எல்லாவற்றிற்கும் கதை கட்டுகிற வழக்கம் ஏற்பட்ட பிறகு காவிரி பற்றி எழுந்த ஒரு கதையின் அடிப்படையில் காவேரி என்னும் பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும். கவேரன் என்னும் அசுரனின் மகள் காவேரி என்பது அக் கற்பனைக் கதையின் கருத்தாகும். இவ் விரு சொற்களும் காவிரிப் பூம் பட்டினம், காவிரிப் புதல்வர், காவிரி நாடன் என்றும் காவேரிப் பட்டணம், காவேரி மான்மியம், காவேரிப்பாக்கம் என்றும் ஆளப்படுவதைக் காணலாம்.

மெல்ல - மெள்ள

மேலுள்ள இணையில் மெல்ல என்னும் சொல் செம்மையான தாகும். மென்மை என்பதன் அடியாகத் தோன்றியதே அச் சொல். அதன் போலியாகப் பேச்சு வழக்கில் ஏறியுள்ள சொல்தான் 'மெள்ள' என்பது. சிலர் அதை மொள்ள என்று சொல்லவும்

பழகிவிட்டார்கள். ஒரு தவற்றுக்கு இடம் கொடுத்தால் அது ஒன்பது தவறுகளுக்கு வழி வகுக்கும். மெல்ல என்பதற்கு அடிப்படை மென்மை என்று இருப்பதுபோல், மெள்ள என்பதற்கோ, மொள்ள என்பதற்கோ சரியான அடிப்படை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இது நம் முன்னோர் சிலரின் நா வண்ணத்தால் ஏற்பட்ட திருவிளையாடலாக இருக்கக் கூடும்.

மங்கலம் - மங்களம்

அடுத் துள்ள இணையில் மங்கலம் என்னும் சொல்தான் சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. தமிழிலுள்ள அகரமுதலிகள் மங்கலம், மங்களம் என்னும் இரண்டிற்கும் ஒரே பொருளைத்தான் தந்துள்ளன. ஆனால் மங்களம் என்பதற்கு மங்கலம் என்னும் சொல்லின் பொருளைக் காண்க என்றுதான் அவை சுட்டுகின்றன. ஆகவே மங்கலம் என்னுஞ் சொல்லே தொன்மையும், செம்மையும் வாய்ந்தது என்றும் மங்களம் என்பது போலிச் சொல்லாகவோ பிற மொழியாளர்கள் இசை அரங்குகளின் இறுதியில் பாடும் பாடலில் கையாளப்படும் அச் சொல்லின் செல்வாக்கால் ஏற்பட்டுள்ள திரிபுச் சொல்லாகவோ இருக்கலாம்.

புல்லாங்குழல் - புள்ளாங்குழல்

மேலே உள்ள இணையில் புல்லாங்குழல் என்பதே செம்மை யானது. புல் என்பதற்கு மூங்கில் என்பது பொருள். எனவே மூங்கிற் குழாயில் உருவாக்கப்படும் இசைக் கருவிக்குப் புல்லாங்குழல் என்னும் பெயர்தானே தகும். புள் என்றால் பறவை என்பது பொருள். பறவையால் அக் குழல் உருவாக்கப் படுவதில்லையே. கிட்டிப் புள் என்பதில் உள்ள புள் ஒரு கழியின் சிறு துணுக்கு என்று பொருள்படும். கருப்பம் புள் என்பதும் அதுவே. இப் பொருள் இங்குப் பொருந்துமா என்று காணலாம்.

தமிழ் மரபைக் காக்க விரும்புவோர் காவிரி, மெல்ல, மங்கலம், புல்லாங்குழல் என்பன போன்ற மரபு வழிப்பட்ட செம்மையான சொற்களையே பயன்படுத்துவர்.

☆☆☆☆☆

40. கருப்பு - கறுப்பு

விவரம் - விபரம்

புகைப்படம் - நிழற்படம் - ஒளிப்படம்

மேலுள்ள மூன்று தொகுதிகளிலும் முதல் தொகுதி சிக்கலாக இருப்பதோடு வியப் பளிப்பதாகவும் இருக்கிறது. கருப்பு என்னும் சொல்லுக்குப் பஞ்சம் என்பதுதான் பொருளாக இலக்கியங்களிலும், அகரமுதலிகளிலும் காணப்படுகிறது. கறுப்பு என்னும் சொல்லுக்குக் கருமை, வெகுளி ஆகிய பொருள்கள் அகரமுதலிகளில் காணப்படுகின்றன. தொல் காப்பியம் கறுப்பு என்பதற்கு வெகுளி (சினம்) என்று பொருள் தருகின்றது.

கறுப்பு - கருமை நிறம்
கறுப்பன் - கருமை நிறம் உள்ளவன்
கறுப்பி - கருமை நிறம் உள்ளவள்
கறுப்புத் தேள் - கருந்தேள்

கருமை என்பது கார் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது. கார் என்பதன் அடியாகப் பிறந்து கருமை என்னும் பொருளைத் தரும் மேற்காட்டப்பட்டுள்ள சொற்கள் நான்கும் அடிப்படைச் சொல்லில் உள்ள இடையின எழுத்திற்கு(ரு) மாறாக வல்லின எழுத்தைப்(று) பெற்றுப் பயன்படுவது தமிழ் மரபில் ஏற்பட்டுள்ள ஒரு புதிர் போலும்.

அடுத்துள்ள தொகுதியில் 'விவரம்' என்பது சரியான ஆட்சி; விபரம் போலி. ஏனெனில் விவரம் என்பது விவரித்தல், விவரி, விவரிக்கலாம் என்றவாறு பல வடிவங்களிலும் தொடர்பு கொண்டிருக்கிறது. ஆனால் விபரம் என்பதற்கு அப்படிப்பட்ட இனச் சொல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. விபரித்தல், என்பதுபோல் சொல்கிற வழக்கமில்லை. எனவே, நாம் விவரத்தைப் பயன்படுத்துவதே விவரம் உடைமையாகும்.

அடுத்துள்ள மூன்றும் ஒன்றுக்கே பொருளாகத் தரப்படு கின்றன. 'ஃபோட்டோ' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருளாகவே இம் மூன்றும் தமிழ் அகரமுதலிகளில் தரப்பட்டுள்ளன. இவற்றில் புகைப்படம் என்பது நெடுங் காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நிழற் படம் என்பது பிற் காலத்தில் ஆட்சிக்கு வந்தது. ஒளிப் படம் என்பது இக் காலத்தில் ஆட்சிக்கு வர முயல்கிறது. புகை போல முதலில் தோன்றியதால் புகைப்படம் என்று சொல்லியிருப்பார்கள். ஒன்றன் நிழலாக வடித் தெடுக்கப்படுவதால் நிழற் படம் என்று திருத்தப்பட்டிருக்கலாம். நிழல் அன்று; ஒளிதான் படமாக்கப் படுகிறது என்னும் பொருளில் ஒளிப்படம் என இக் காலத்தில் வழங்கப்படலாம். இவற்றில் எது செல்வாக்குடையது என்பது பிற் காலத்தில் தான் தெரியும். இப் போதைக்கு இம் மூன்றுமே வழக்கில் உள்ளன என்றுதான் சொல்ல முடியும்.

☆☆☆☆☆

41. ஆன்றோரும்-சான்றோரும்

இவ் விரு சொற்களும் இன்றும் வழக்கத்தில் பயன்படுத்தப் படும் சொற்களே. இவை யிரண்டும் பெரும்பாலும் பொருள் வேறுபாடின்றியே ஆளப்படுகின்றன. சங்க இலக்கிய காலந் தொட்டு இன்று வரை செல்வாக்குடன் வாழ்ந்து வரும் சொற்களில் இவையும் அடங்கும். பொருள் வேறுபாடோ, மாறுபாடோ இல்லாமலும் இவை ஆளப்படுகின்றன. பிற்காலச் சொற்களாகிய கோவிந்தா, நாமம், அரோகரா, காவடி என்பன

போன்ற பல சொற்கள் முரண்பாடும் இழிவும் கொண்ட பொருள்களைத் தருவனவாக இன்று ஆளப்படுகின்றன. ஆனால் பழங் காலம் முதல் செல்வாக்கோடு வாழ்ந்து வரும் ஆன்றோர், சான்றோர் ஆகியன போன்ற சொற்கள் பொருள் திரிபு இன்றி வாழ்ந்து வருவது நோக்கத் தக்கது. இவை யிரண்டையும் ஆழ்ந்து நோக்கினால் நுட்பமான சிறு பொருள் வேறுபாட்டுடன் இவை ஆளப்பட்டு வருவது புலப்படாமற் போகாது. இவை ஒவ்வொன்றும் தாம் மட்டும் தனித்து வாழாமல் தம் சுற்றமாகிய கிளைச் சொற்கள் சில புடை சூழ வாழ்வதையும் காணலாம். ஆன்றோர் என்னும் சொல் ஆன்ற, ஆன்றவர், ஆன்றார், ஆன்றோன், ஆன்றோள் என்பன போன்ற கிளைச் சொற்களோடும், சான்றோர் என்பது சால், சால்பு, சால, சாலும், சான்ற, சான்றாண்மை, சான்றான், சான்றாள், சான்றோன், சான்றோள், சான்றோர், சான்றார், சான்றவர் என்பன போன்ற கிளைச் சொற்களோடும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இவைகளில் ஆன்ற என்னும் சொல்லுக்கு-விரிவான, பரந்த, மாண்புள்ள, நிறைந்த என்பன போன்ற பொருள்கள் உள்ளன. ஆன்றவர், ஆன்றோன் என்பன போல வருகின்ற இடங்களில் மேல் ஆன்ற என்னும் சொல்லுக்குத் தரப்பட்ட பொருள்களோடு அறிவுள்ளவர் என்பதும் சேர்த்து வழங்கப்படுகிறது. சான்றாக, ஆன்றோர் என்பதற்கு நிறைந்த அறிவுள்ளவர், விரிவான அறிவுள்ளவர், பரந்த அறிவுள்ளவர், மாண்புள்ள அறிவுள்ளவர் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

சான்றோர் என்பதற்கு அறிவு ஒழுக்கங்களால் நிறைந்தவர் என்று பொருள் கொள்ளப்படுவதைப் பெரு வழக்காகக் காணலாம். ''ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்'' என்னும் பொருட் செறிவுள்ள பழந் தொடர் ஒன்று இருப்பதும் இங்குக் காணத் தக்கது. சால்பு என்பதற்கு நிறை குணம் என்றும், சால என்பதற்கு மிகவும் என்றும், சாலும் என்பதற்குப் போதும் என்றும் பொருள் கொள்ளும் வழக்கமும் உண்டு. ஆகவே,

சான்றோர் என்பது போன்று வரும் சொற்களுக்கெல்லாம் அறிவாலும், அருங்குணத்தாலும் நிறைந்தவர் என்பது போன்ற பொருளைக் கொள்ள முடிந்தது.

எனவே, இவ்விரு வகைச் சொற்களையும் அவை சுட்டும் பொருள்களையும் நுட்பமாக நோக்கினால் ஆன்ற என்பதன் அடியாகப் பிறந்த சொற்கள் எல்லாம் அறிவின் நிறைவை அடிப்படையாகக் கொண்ட பொருள் உடையனவாகவும், சான்ற என்பதன் அடியாகப் பிறந்த சொற்கள் எல்லாம் 'அறிவோடு பண்பின் நிறைவையும் குறிக்கும்' பொருள் உடையனவாகவும் கொள்வது பொருத்தமானது என்று தெரிகிறது. இவ்வாறு வரையறை செய்வதால் ஆன்றோர், போன்றோர் நற்பண்பற்றவர் என்று பொருள் கொண்டு விடக்கூடாது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். வழக்கில் இப்படி ஒரு நுட்பமான வேறுபாட்டை அடிப்படையாகக் கொள்வது இன்றைய தேவையும் ஆகும்.

☆☆☆☆☆

42. மேல்நிலை, மேனிலை

மிகுந்த வேறுபாடற்ற ஒலியையுடைய சொற்கள் சில, எழுதுகின்றவர்களை மருட்டுவனவாக உள்ளன. அத் தகைய இணைகள் சில பற்றி இப்போது பார்க்கலாம். உயர் நிலைப் பள்ளிகளை மேனிலைப் பள்ளிகளாக உயர்த்திய காரணத்தால் மேல்நிலை, மேனிலை ஆகிய தொடர்ச் சொற்களுக்கு இப்போது விளம்பரம் ஏற்பட்டுள்ளது. (மேல்+நிலை=மேனிலை) சொற்களைச் சேர்த்து எழுதினால் மேனிலை என்றுதான் எழுத வேண்டும். தனித்தனியாக எழுத விரும்புகிறவர்கள் மேல் நிலை என்று எழுதுவார்கள். பொருளளவில் இரண்டுக்கும் வேறுபாடில்லை.

செறிதல், செரிதல்

வல்லினம் இடையினம் ஆகிய இரண்டு இன வேறுபாடு களால் இச் சொற்கள் முற்றிலும் வேறுபட்ட இரு வேறு பொருள் களைத் தருகின்றன. அவற்றை அறிந்து இச் சொற்களைப் பயன்படுத்துவது நல்லது. 'செறிதல்' என்று வல்லின எழுத்தைப் பயன்படுத்தி எழுதினால் அது நெருங்குதல் அல்லது கெட்டியாதல் என்பன போன்ற பொருள் தரும். செறிவு என்றால் நெருக்கம் என்பது பொருள். செரிதல் என்பதன் அடியாகப் பிறந்த செரித்தல் என்னும் சொல்லுக்கு உணவு சீரணமாதல் என்பது பொருள். செறித்தல் என்று வல்லினத்தைப் பயன்படுத்தி எழுதினால் இறுக்குதல் என்பது போன்ற பொருள் ஏற்படும்.

சொறிதல் என்னும் வல்லின எழுத்து உள்ள சொல்லுக்குத் தினவு நீங்க நகத்தைக் கொண்டு தேய்த்தல் என்றும், **சொரிதல்** என்னும் இடையின எழுத்துள்ள சொல்லுக்குப் (பூவைக்) கொட்டுதல் (மழை) பொழிதல் என்றும் பொருள் கொள்ளப் படும். **வாணிகம், வாணிபம்** என்னும் இரண்டு சொற்களிலும் உள்ள எழுத்து வேறுபாடுகள் பொருள் வேறுபாட்டைத் தரவில்லை. ஆகவே, அவற்றில் எதை வேண்டுமானாலும் பயன்படுத்தத் தடையில்லை. **நாகரிகம், நாகரீகம்** ஆகிய இவ் விரண்டு சொற்களிலும் உள்ள குறில், நெடில் வேறுபாட்டால் பொருள் வேறுபாடு எதுவும் இல்லை யென்றாலும் நாகரிகம் என்பதே சரியான சொல்லாகும். **மாணவர், மாணாக்கர்** ஆகிய இரண்டும் வேறுபாடின்றிப் பயன்படுத்தத் தக்க சொற்களே யாகும். மாணவன் என்பதற்கு மாண்பினை உடையவன் என்றும், மாணாக்கன் என்பதற்கு மாண்பினை ஆக்குபவன் என்றும் பொருள் கொண்டு இவையிரண்டும் கல்வி கற்கும் தொழில் செய்பவனைக் குறிப்பனவாகவே கருதப்படுகின்றன. **பழனி, பழநி** ஆகிய இரண்டும் பொருள் வேறுபாடற்ற சொற்களே. அவற்றுள் பழனி என்பதே சரியான சொல். பழம் நீ என்று புராண அடிப்படையில் பிரித்துப் பொருள் கொள்ளும் சிலர் பழநி என்று எழுதுகிறார்கள். **நிறை, நிரை** ஆகிய சொற்கள் பொருள்

வேறுபாடு உடையனவாகும். நிறை என்னும் வல்லின எழுத்துள்ள சொல்லுக்கு நிறைந்த, முழுமையான என்னும் பொருள்களும், நிரை என்னும் இடையினத்தையுடைய சொல்லுக்கு வரிசை, கூட்டம் என்னும் பொருள்களும் உண்டு. நிறைமாதம், ஆநிரை ஆகிய இரண்டையும் மேற்கூறியவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

☆☆☆☆☆

43. பேச்சுவார்த்தை நடத்தினார்

கடந்த சில நூற்றாண்டுகளாக ஆங்கிலத்தோடு தமிழுக்கு ஏற்பட்டுவிட்ட உறவினால் தமிழ் தன் மரபை மாற்றிக்கொண்டு புதுத் தோற்றமளிக்கத் தொடங்கிவிட்டது. தமிழர்களின் உடை முதலியன மாறியிருப்பது போல் தமிழ் மொழியின் நடையும் பெரு மளவு மாறத் தொடங்கிவிட்டது. உடை மாற்றம் பெருங்கேடு விளைவிக்காது. ஆனால் நடை மாற்றம் மொழிக்குப் பெருங் கேட்டை விளைவிப்பதோடு, அதனை உருக் குலைத்துவிடும் என்னும் அச்சமும் ஏற்பட்டுள்ளது.

'தமிழக முதலமைச்சர் இந்தியத் தலைமை யமைச்சரோடு பேசினார்' என்று கூறுவதைத் தமிழ் நடை எனலாம். 'தமிழக முதலமைச்சர் இந்தியத் தலைமை யமைச்சரோடு பேச்சு வார்த்தை நடத்தினார்' என்பதை ஆங்கில நடை எனலாம். இப்படிக் கூறுவதால் எவ்வித பொருள் வேறுபாடோ சிறப்போ ஏற்படவில்லை யென்றாலும், ஆங்கிலத்தில் பேசிப் பழக்கப் பட்டவர்கள் தமிழிலும் அவ்வாறே பேசவும் எழுதவும் தலைப்பட்டு விட்டனர். இதனால் தமிழின் இயல்பான நடை திரிந்து செயற்கை நடை ஒன்று உருவாகியிருப்பதைக் காண்கிறோம். தமிழ் எல்லா வகையிலும் இயற்கையோடு ஒன்றித் தோன்றி, வளர்ந்து, வாழ்ந்து வரும் மொழியாகும். அதனைச் செயற்கை எரி தாக்காமல் பாதுகாப்பது தமிழரின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

அவ்வாறே, சோவியத் தலைவர் இந்தியாவிற்கு வந்தார் என்று கூறுவதைவிடுத்து 'சோவியத் தலைவர் இந்தியாவிற்கு **வருகை புரிந்தார்'** என்கிறோம். அதே போல தோட்டம் சுத்தம் செய்யப் பட்டது என்பதைத் தோட்டம் **சுத்திகரிப்புச் செய்யப்பட்டது** என்று கூறும் வழக்கமும் ஏற்பட்டுவிட்டது.

இயல்பாக இடம் பெறும் பேசினார், வந்தார் என்பன போன்ற வினைச்சொற்களைப் பேச்சு வார்த்தை, வருகை என்று பெயர்ச் சொற்களாக்கிப் பிறகு அவற்றை முடிப்பதற்கு 'நடத்தினார்' 'புரிந்தார்' என்பன போன்ற வேறு வினைச்சொற்களின் உதவியையும் நாட வேண்டியிருக்கிறது. 'அன்ன நடை நடக்கப் போய்த் தன் நடையும் கெட்டாற் போல' என்னும் பழமொழிக் கிணங்க ஆங்கிலத்தில் தோய்ந்த உணர்வினால் தமிழுக்குச் சிறப்புச் சேர்ப்பதாக நினைத்துக் கொண்டு தமிழின் இயல்பான, எளிய, இனிய நடை அழகைக் கெடுக்கும் போக்கை நிறுத்திக் கொள்வது நல்லது என்று நாம் கருதுகிறோம்.

இது தொடர்பாக இன்னொன்றையும், இங்குச் சொல்வது பொருந்தும். 'கூட்டத்தைக் கூட்டினார்' என்பதைக் **கூட்டத்தை அழைத்தார்** என்று சொல்வது நடைமுறைக்கு வரத் தொடங்கி விட்டது. கூட்டுவதற்கும், அழைப்பதற்கு முள்ள வேறுபாடு தெளிவாகத் தெரிகிறது. கூட்டத்தைக் கூட்டினார் என்றால் தனித் தனியாகப் பல்வேறு இடங்களிலிருந்த மாந்தரை யெல்லாம் ஓரிடத்தில் ஒரு நேரத்தில் கூடுமாறு செய்தார் என்பது பொருள். கூட்டத்தை அழைத்தார் என்றால், முன்னரே ஏதோ ஒரு காரணத்தால் ஓரிடத்தில் ஒரு நேரத்தில் ஒன்றாகக் கூடியிருந்த மாந்தரை யெல்லாம் தம்மிடம் வருமாறு அழைத்தார் என்பது பொருளாகும். ஆகவே ஆங்கில நடையைத் தமிழ் நடைக்குக் கொண்டு வருவதால் அழகு கெடுவதோடு பொருட் கேடும் ஏற்படுகிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

☆☆☆☆☆

44. என்று அழைக்கலாம்

ஆங்கில மொழியின் செல்வாக்கால் தமிழ் தன் பல்வகை மரபுகளையும் இழந்து, திரிந்து, மங்குவது நாள்தோறும் பெருகிக் கொண்டே இருக்கிறது. உரையாடல்களிலும், எழுத்துகளிலும் தமிழர்களில் குறிப்பிடத் தகுந்த எண்ணிக்கையுள்ள பலர் ஆங்கிலச் சொற்கள் பலவற்றைத் தமிழ்ச் சொற்கள் போலவே கருதிப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். ''பட்'' ''சோ'' ''ஓக்கே'' போன்ற சொற்கள் இடையிடையே தாராளமாகக் கலக்கப்படுகின்றன. ''திங்க்'' பண்ணிக் கொண்டிருந்தேன், வாக்கிங்'' போயிருக்கிறார் என்பன போன்ற ஆட்சிகளும் பெருகத் தொடங்கிவிட்டன.

பல எழுத்தாளர், அறிஞர் ஆகியோர் தம் படைப்புகளில் ''இதனை மலர் என்றும் அழைக்கலாம்'' என்பன போன்ற தொடர்களைப் பயன்படுத்துவதைக் காண்கிறோம். இவர்கள் தாம் ஆங்கிலத்தில் எண்ணிய எண்ணத்தை அப்படியே சொல்லுக்குச் சொல் மொழி மாற்றித் தமிழாக்க முயன்றுள்ளனர் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. ''இதனை மலர் என்றும் சொல்லலாம்'', இதனை மலர் என்றும் வழங்கலாம்'' என்பன போன்ற தொடர்களின் கருத்துகளை இவர்கள் ஆங்கிலத்தில் எண்ணிப் பிறகு சொல்லுக்குச் சொல் தமிழுக்குக் கொண்டு வருகிறார்கள். அழைப்பதற்கும், சொல்வதற்கும் அல்லது வழங்குவதற்கும் உள்ள பொருள் வேறுபாடு இங்கே புறக்கணிக் கப்பட்டுள்ளதை நன்கு காண முடிகிறது.

''அவர் தம் கருத்தைக் கூற ஒரு மணி நேரம் **எடுத்துக் கொண்டார்''** என்று பேசுவதும், எழுதுவதும் தமிழ் மரபின் வீழ்ச்சிக்கு மற்றொரு சான்றாகும். ஒரு மணி நேரத்தை அவர் எங்கிருந்து எடுத்துக் கொண்டார்? எதற்காக எடுத்துக் கொண்டார்? அவர் அதை எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? என்றெல்லாம் எண்ணிப் பார்த்தால் நகைப்புதான் ஏற்படும். ''ஒரு

மணி நேரம் பேசினார்'' ''ஒரு மணி நேரம் தேவைப்பட்டது'' என்பன போல் அமைய வேண்டிய அப் பகுதிகள் ஒரு மணி நேரத்தை எடுத்துக் கொண்டார் என்று அமைந்து ஆங்கில நடம் புரிகின்றன. உணவு உண்ணுதலைக் கூட ''எடுத்துக் கொண்டார்'' அல்லது ''எடுத்துக் கொள்'' என்பன போல் கூறுகிற வழக்கமும் இன்று பெருகத் தொடங்கி இருக்கிறது.

இவற்றை யெல்லாம் சரி செய்து திருத்தாமல் விட்டு விட்டால் எதிர்காலத்தில் ஆங்கில நடையிலிருந்து பிறந்ததுதான் தமிழ் நடை என்று கூறுவோருக்கு நம்மால் மறுப்புக் கூற முடியாமற் போகக் கூடும் என்று யாம் அஞ்சுகிறோம்.

☆☆☆☆☆

45. 'அகலல், அகற்றல்'

மேற் காணப்படும் இரு சொற்களுக்கும் இரண்டிரண்டு பொருள்களுண்டு. அவை பின்வருமாறு:

அ) **அகலல்** ... அகலமாதல்

ஆ) **அகலல்** ... நீங்குதல்

அ) **அகற்றல்** ... அகலமாக்குதல்

ஆ) **அகற்றல்** ... நீக்குதல்

இவ் விரு பொருள்களும் ஒன்றோடொன்று வேறுபட்டன போல் தோன்றும். சிலருக்கு மாறுபட்டன போலவும் தோன்றக் கூடும். உண்மையில் இவை யிரண்டும் வேறுபாடோ. மாறுபாடோ அற்ற, இரு வகைப்பட்ட ஒரு பொருளனவே என்று தோன்றுகிறது. 'அகலல்' என்பதற்கு 'அகலமாதல்' என்று பொருள் காணும் போது அதன் பரப்பு அதிகப்படுகிறது என்பது பொருள். பரப்பு கூடுதலாகிக்கொண்டே வந்தால் ஒரு கட்டத்தில் அது இருப்பது நமக்குத் தெரியாமலே போய்விடும். அதாவது அது மறைந்து விடும். சாக்கடை நீர் தனியாக இருக்கும்போது

அது நம்மால் உணரப்படுகிறது. அதையே கங்கை போன்ற ஆறுகளில் கலக்கச் செய்து விட்டால் அச் சாக்கடை மறைந்து கங்கை நீராகவே அது மாறிவிடுகிறது. இதற்கு நாலடியாரின் பின்வரும் பாடற்பகுதி சான்று பகர்வதைக் காணலாம்:

''ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்.''

அதே போல் நாற்றமும் காற்றில் கலக்கிறபோது அது மறைந்து விடுகிறது. ஒன்றை அகலப்படுத்திப் பரவலாக்கினால் அது இல்லாமலே போய்விடும். எனவே அகலமாக்குதல் என்பதற்கும், நீக்குதல் என்பதற்கும் ஒரு வகையில் வேறுபாடில்லை என்பதை நாம் அறியலாம். 'அகற்றல்' என்பதற்கும் இதே பொருள்தான். இதே விளக்கந் தான்.

ஆனாலும் இவ்விரு சொற்களுக்குமிடையே வேறு ஒரு வேறுபாடு இருப்பதையும் இங்கே நாம் தெரிந்து கொள்ளலாம்.

'அகலுதல்' என்றால் ஒன்று தானே அகலமாதல் அல்லது நீங்குதல் என்று பொருள்படும். 'அகற்றல்' என்பது ஒன்று மற்றொன்றை அகலமாக்குதல் அல்லது நீக்குதல் என்று பொருள்படும். இவற்றை முறையே தன்வினை என்றும், பிறவினை என்றும் இலக்கண ஆசிரியர்கள் பெயர் வைத்துக் குறிப்பிடுகின்றனர். தானே செய்வது தன்வினை என்றும், பிறரை அல்லது பிறிதொன்றைச் செய்யச் செய்வது பிறவினை என்றும் கூறப்படும். ஓடுதல் தன்வினை, ஓட்டுதல் பிறவினை, உண்டல் தன்வினை, ஊட்டுதல் பிறவினை.

இங்கே வேறு ஒரு வகை நுட்பமான கருத்தையும் நாம் தெரிந்துகொள்வது நல்லது என்று கருதுகிறோம். பிறவினை என்பது பிறரை அல்லது பிறிதொன்றைச் செய்யச் செய்வது என்றுதான் பொருள்படுமே தவிர ஒன்று பிறிதொன்றின் வினையைச் செய்வது என்று பொருள்படாது. மாட்டை ஓட்டினான் என்னும் தொடரில் மாட்டை ஓடச் செய்தான்

என்றுதான் பொருளே தவிர அவன் மாட்டுக்காக ஓடினான் என்று பொருள்படாது. அப்படிப் பொருள் பட்டால் அது இவனுடைய வினையாகுமே தவிர மாட்டின் வினையாகிப் பிறவினை ஆகாது. ஆகவே மாட்டை ஓடச் செய்தான் என்பதுதான் அங்கும் பொருள். இப்பொருளின்படி பார்த்தால் பிறவினையும், மற்றொரு வகையில் தன்வினையாகவே ஆகிறது. அத் தன் வினையைச் செய்யத் தூண்டுவதுதான் அந்த மற்றொன்றின் பணியாகும். 'குழந்தைக்குத் தாய் சோறு ஊட்டினாள்' என்றால் குழந்தைக் காகத் தாய் உண்ணுவதில்லையே. அவள் குழந்தையைத்தானே உண்ணச் செய்கிறாள். ஆகவே அது குழந்தைக்குத் தன்வினை தான். அந்தத் தன்வினையைச் செய்யுமாறு அக் குழந்தையைத் தூண்டுவதுதான் தாயின் வினை. இப்படிப் பார்த்தால் வினை என்பதே அவரவர் செய்து தீர வேண்டியது என்றல்லவா ஆகிறது? அப்படியானால் எதற்கெடுத்தாலும் பிறரை ஏவிப் பணிகொள்ள நினைக்கும் இக் காலத்தாருக்கு இவ் வினை யமைப்பு பாடம் புகட்டுவதாக அமைந்திருப்பதைக் கண்டு யாம் இறும்பூது எய்துகிறோம்.

☆☆☆☆☆

46. மயக்கம் தரும் தெளிவு

தமிழிலுள்ள இலக்கணங்கள் இவ்வாறுதான் பேச வேண்டு மென்றோ இவ்வாறுதான் எழுத வேண்டுமென்றோ கட்டளையிடுவதில்லை. மாறாக இவ்வாறு பேசுவது வழக்கம்; இவ்வாறு நம் முன்னோர் எழுதிக் கொண்டு வருகிறார்கள் என்று கூறித் தமிழ் மரபை நமக்கு விளக்குவனவே யாகும்.

பன்னிரண்டு உயிர் எழுத்துகளும். க,ச,த,ந,ப,ம,வ,ய,ஞ,ங ஆகிய பத்து உயிர்மெய் எழுத்துகளும் ஒரு சொல்லின் முதலில் வரும் என்றும், பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் ஞ,ண,ந,ம, ன,ய,ர,ல,வ,ழ,ள, குற்றியலுகரம் ஆகிய இருபத்து நான்கு

எழுத்துகளும், சொல்லின் இறுதியில் வரும் என்றும் கூறிய இலக்கண ஆசிரியர்கள் சொல்லின் இடையில் ஓர் எழுத்தோடு கூடி வரும் பிற எழுத்துகளைப் பற்றியும் கூறியிருக்கிறார்கள். அதற்கு மயக்கம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். மயக்கம் என்னும் இச் சொல்லுக்கு 'மயங்குதல்', அஃதாவது கூடுதல், சேர்தல் என்பன பொருள்களாகும். அவ்வாறு ஒரு சொல்லின் இடையில் எழுத்துகள் கூடுவதை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

அவை

1. உயிரோடு உயிர் கூடி வருவது.
2. உயிரோடு மெய் கூடி வருவது.
3. மெய்யோடு மெய் கூடி வருவது.
4. மெய்யோடு உயிர் கூடி வருவது.

என்பனவாம். உயிரோடு உயிர் சேர்ந்து வரவே வராது. (இரண்டு தலைவர்கள் ஒன்று சேர முடியாதவாறு போல) அவ்வாறின்றி இரண்டு உயிர்கள் சேர்ந்து வர நேர்ந்தால் அவை தனித் தனியாக நின்று ஒலிக்குமே தவிர இரண்டும் சேர்ந்து ஒலிக்க மாட்டா. சில இடங்களில் சேர்ந்து வர நேரும் இரண்டு உயிர் எழுத்துகளின் இடையில் மெய்யெழுத்து ஒன்று வந்து அவற்றை இணைப்பதும் உண்டு. அவ்வெழுத்துகள் 'உடன்படு மெய்கள்' என்று பெயர் பெறும். 'ய''வ' ஆகிய இரண்டு மெய்யெழுத்துகளும் உடன்படாத உயிரெழுத்துகளை உடன் படவைக்கும் எழுத்துகளாக வரும். இனி உயிரோடு மெய்யும் மெய்யோடு உயிரும் மயங்கும் மயக்கத்திற்கு வரையறையே யில்லை. எந்த உயிரோடும் எந்த மெய்யும், எந்த மெய்யோடும் எந்த உயிரும் எக் கட்டுப்பாடுமில்லாமல் கூடி வரும். எஞ்சியிருப்பது மெய்யோடு மெய்கூடும் கூட்டந்தான். அதை மூன்று வகையாக இலக்கண ஆசிரியர்கள் பகுத்திருக்கிறார்கள். அவ்வாறு பகுத்து வரையறுத்துள்ள நன்னூல் ஆசிரியர்

பவணந்தி முனிவரின் கருத்துகளை விளக்கவே இவ்வளவு பெரிய முன்னுரை தேவைப்பட்டது. க,ச,த,ப என்னும் இந் நான்கு மெய்களும், தம்மோடு தாமே மயங்கும். அஃதாவது அவ்வெழுத்துகளுக்குப் பக்கத்தில் வேறு ஓர் எழுத்து வந்து சேராது. ர,ழ என்னும் இரண்டும் தம்மோடு பிறவே மயங்கும். அஃதாவது அவற்றுக்குப் பக்கத்தில் வேறு ஏதேனும் மெய் வருமே தவிர அதே எழுத்து வராது. சான்றாக ர்ர்,ழ்ழ் என்றாற் போல் மெய்யாகவோ, உயிர் மெய்யாகவோ அவை சேர்ந்து வருவதைக் காண முடியாது. மேற்கூறிய ஆறு மெய்யெழுத்து களையும் தவிர எஞ்சியுள்ள பன்னிரெண்டு மெய்யெழுத்து களும் தம்மோடு தாமும், தம்மோடு பிறவும் மயங்கும். அஃதாவது அப் பன்னிரண்டு எழுத்துகளும் எதனோடும் எதுவும் சேர்ந்து வரும். அவற்றுக்கு வரையறையில்லை.

க,ச,த,ப என்னும் நான்கும் தம்மோடு தாம் மட்டுமே சேரும். ர,ழ என்னும் இரண்டும் தம்மோடு பிற மட்டுமே வந்துசேரும். எஞ்சிய பன்னிரண்டும் தம்மோடு தாமும் தம்மோடு பிறவும் மயங்கும். இந்த மூன்று வகை மெய்யெழுத்துகளின் இயல்பு களையும் தனித் தனியே பெற்றுள்ள மூன்று வகையான மக்கள் நம்மோடு வாழ்வது எம் நினைவுக்கு வந்ததாதலின் அதனையும் சுட்டிக் காட்டி இதனை முடிக்க விரும்புகிறோம்.

முதல் வகை மெய்கள் தம்மோடு தாம் மட்டுமே தொடர்பு கொள்பவை. இரண்டாம் வகை பிற எழுத்துகளின் தொடர்பை மட்டுமே மேற்கொள்பவை. மூன்றாம் வகை தம் தொடர்பு, பிறவற்றின் தொடர்பு ஆகிய இரண்டையும் உடையவை. இவற்றின் இயல்பைப் பகுத்து எண்ணிய எமக்கு இவ்வாறே மூன்று வகைப்பட்ட மாந்தர் நம்மைச் சுற்றி வாழ்வதும் புலப்பட்டது. அவர்களுள் முதல் வகையினர் பிறரைப் பற்றிக் கவலைப்படாமல் தம் நலத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவர்கள். இரண்டாம் வகையினர் தம் நலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் பிறர் நலத்தை மட்டுமே கருதி உழைக்கின்ற மேலோர். மூன்றாம் வகையினர் கொள்வதும், கொடுப்பதுமாகிய தம் நலமும், பிறர் நலமும் நாடும் பெருமக்கள். இவ்வளவும் எமக்கு மேற்கூறிய மயக்கம் தந்த தெளிவுகள் தாமே.

☆☆☆☆☆

47. ‘தலா’

மாவட்டங்களுக் கெல்லாம் தலா ஒரு பள்ளி வீதம் சிறப்பு நிதி ஒதுக்கப்படுகிறது.

மாநிலங்களுக் கெல்லாம் தலா ஓர் ஆளுநர் இருப்பார்.

இவ்வாறு ‘தலா’ என்னும் சொல்லைப் பயன்படுத்தும் வழக்கம் மிகவும் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ளது. இது அயல் மரபின் படையெடுப்புக்குக் கிடைத்துள்ள புதிய சான்றாகும். ‘தலை’ என்னும் தமிழ்ச் சொல் பிறமொழி வடிவம் பெற்று இவ்வாறு நம்மை மருட்டுகிறது. தமிழ் நாட்டில் உண்டான பஞ்சு வெளி நாட்டுக்குப் போய் அங்கிருந்து புதிய வடிவில் துணி உருவம் பெற்று நம்மிடம் அதிக விலைக்கு விற்கப்பட்டு நமக்குப் பொருள் இழப்பையும், வேலை யின்மையையும், மானக் குறைவையும் ஏற்படுத்தியது போல் தமிழ்ச் சொல் பிற மொழி இலக்கணத்தை ஏற்றுத் திரிந்து தமிழ் மரபைக் கெடுத்து நம்முடைய மரியாதையையும் குலைக்கிறது.

‘ஒவ்வொரு மாவட்டத்திற்கும்’ ‘ஒவ்வொரு மாநிலத்திற்கும்’ என்பன போல் அக் கருத்தை வெளியிடுவது எளிதானதும் தெளிவானதும்; மட்டுமல்லாமல் அது தமிழ் மரபும் ஆகும். ‘மாணவர்களுக்குத் தலைக்கு இரண்டு சுவடிகள் தருக. குழந்தைகளுக்குத் தலைக்கு ஒரு பழம் தருக’ என்பன போல் ஆளப்படும் மரபுதான் இக் கட்டுரையின் தலைப்பில் சுட்டியவாறு மாறியிருக்கிறது. ‘தலை’ என்பது மாந்தருக்கும், விலங்குகள், பறவைகள் போன்றவற்றிற்கும் பொருந்துமே தவிர மரஞ்செடி

கொடிகளுக்குப் பொருந்துமா? தென்னை மரங்களுக்குத் தலைக்கு இரண்டு குடம் வீதம் தண்ணீர் ஊற்று என்று சொல்வது முழுவதும் பொருத்தமாக இருக்குமா? தென்னை மரத்திற்காவது அதன் உச்சியைத் தலை என்று கொள்ளலாம். மாவட்டங்களுக்கும், மாநிலங்கட்கும் எதைத் தலை என்று கொள்வது? ஒரு வேளை அவற்றின் தலைநகரங்களைத் தலை என்று கொண்டு இவ்வாறு புது வழக்கத்தை ஏற்படுத்தி யிருப்பார்களோ? அல்லது ''ஈச்'' எனும் ஆங்கிலச் சொல்லுக்கு ஈடான புதிய சொல்லாகத் தலா என்பதைப் படைத்துக் கொண்டிருப்பார்களோ? எப்படியிருந்தாலும், தமிழில் அக் கருத்தை வெளியிடப் போதிய தோது இருக்கும்போது வெளியிலிருந்து புதிய ஒன்றைக் கொண்டுவந்து இடர்ப்படு வானேன். படிப்போரையும் இடர்ப்படுத்துவானேன்? தமிழ் மரபுப்படி தலை என்னும் சொல் தலா என்னும் சொல்லாக மாறுவதற் கிடம் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. ஆகவே, தலைக்கு என்றோ, ஒவ்வொருவருக்கு அல்லது ஒவ்வொன்றுக்கு என்பது போன்றோ தமிழ் மரபுக்குட்பட்ட முறையால் அக் கருத்தை வெளியிடுவதுதான் நல்ல தென்று நாம் கருதுகிறோம். அயல் வழக்கின் ஆளுமை இங்கும் தவிர்க்கப் படுவது நல்லதுதானே.

☆☆☆☆☆

48. சேமிப்பு

மக்கள் இயற்கையைப் படிக்கவும், புரிந்து கொள்ளவும், அதன்படி நடக்கவும் கற்றுக்கொண்டால் இன்று உலகில் காணப்படும் பல குறைபாடுகள் ஏற்பட்டு இருக்கவே மாட்டா. சான்றாக ஒரு காட்சியை இப்போது நாம் காண்போமா? வானம் இருண்டு பெரு மழை பெய்கிறது. அம் மழை நீரின் பெரும் பகுதி நிலத்தை வந்தடைகிறது. நிலம் ஆறுகள், வாய்க்கால்கள் போன்றவற்றின் வழியாக உலகெங்கும் அந் நீரைப் பகிர்ந் தளிக்கிறது. மற்றும் தேக்கங்கள், ஏரிகள், குளங்கள் போன்ற வற்றில் நீரைத் தேக்கி வைத்து மழை இல்லாத காலங்களிலும் உலகு பயன்படுத்திக் கொள்வதற்காக அதைச் சேமித்து வைக்கிறது. இவை தவிர மண்ணுக்குள் அந் நீரை உறிஞ்சி வைத்திருந்து உலகில் நீரற்றுப்போன கோடைக் காலத்திலும், பிற வறட்சிக் காலங்களிலும் ஊற்றுகள் வாயிலாகக், கிணறு, குழாய்க் கிணறு போன்றவற்றின் மூலம் உலகுக்கு அளிக்கிறது.

இப் பாடத்தை மக்களில் எத்தனை பேர் படித்திருக்கிறார்கள்? எத்தனை பேர் அதைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக் கிறார்கள்? அவர்களில் எத்தனை பேர் அதைத் தத்தம் வாழ்க்கையில் பின்பற்றுகிறார்கள் என்று தெரியவில்லை. இயற்கை தரும் இந்தப் பாடத்தை மூன்று பகுதிகளாக நாம் வகுத்துக் கொள்ளலாம். 1. பெற்ற நீரை அது உடனடியாகப் பகிர்ந்து அளிக்கிறது. 2. பிற்காலத்தில் பயன் படுத்துவதற்காகத் தேக்கங்கள், ஏரிகள் போன்றவற்றில் அதனைச் சேமித்து வைத்துத் தேவையானவர்களுக்குத் தேவையான காலங்களில் அளித்து உதவுகிறது. 3. பஞ்சக் காலத்திலும் வறட்சிக் காலத்திலும் பயன்படுத்துவதற்காக என்று எளிதில் எடுக்க முடியாத படி தன்னுள் உறிஞ்சி வைத்திருந்து கிணறு போன்றவற்றின் மூலம் அது அக் காலங்களில் நீரைத் தந்து உலகைக் காப்பாற்றுகிறது.

இம் முறையை நாமும் புரிந்துகொண்டு பின்பற்ற முடியாதா? நம் வருமானத்தில் ஒரு பகுதியை உடனடித் தேவைகளுக்கு செலவிடலாம். மற்றொரு பகுதியை அடுத்த வருமானம் வரு வரை அவ்வப்போது தேவைப்படும் செலவுகளுக்காக ஒதுக் வைக்கலாம். மூன்றாவது பகுதியை நெருக்கடி வரும்போ பயன்படுத்துவதற்காக என்று எளிதில் எடுத்துச் செலவி முடியாதபடி சேமித்து வைக்கலாம். பொருளியலைப் பொருத் வரையில் இக் கொள்கையை நாம் பின்பற்றினால் எவ்வள

நன்றாக இருக்கும். நாம் என்று சொல்லும்போது தனிப்பட்ட ஒருவரையும், குடும்பத்தையும், நிறுவனங்களையும், அரசு களையும் அவை போன்ற பிறவற்றையும் சேர்த்தே குறிப்பிடு கிறோம். எல்லார்க்கும் பொதுவானதும், தேவையானதும், எளிதானதுமான இதனைப் படிக்கும் போது சிலருக்கு ஓர் எண்ணம் எழும். வரும் வருமானத்தைச் செலவழிக்க வேண்டுமே தவிரக் கஞ்சத்தனமாக அதைச் சேர்த்து வைக்க நினைப்பது கூடாது என்பது தான் அவ் வெண்ணம். அதைப் பற்றி அடுத்துப் பார்ப்போமா?

☆☆☆☆☆

49. "சிக்கனம்"

கஞ்சத்தனம் என்பது வேறு, சிக்கனம் என்பது வேறு. சேமிக்க வேண்டும் என்றாலே கஞ்சத்தனம் பற்றிய நினைப்பு வரவேண்டிய தேவையில்லை. சிக்கனமாக இருந்து, நம்மால் நம் நிலைக் கேற்பச் சேமிப்பது முடியாததன்று. வீண் செலவு களையும் வரம்பு கடந்த செலவுகளையும் நிறுத்தினால் அல்லது குறைத்தால் நம்மால் சேமிக்க முடியாதா என்று எண்ணிப் பாருங்கள். எண்ணம் இருந்தால் எதையும் நிறைவேற்ற முடியும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்னும் குறள் இதைத்தானே நமக்குக் கூறுகிறது? முதலில் நமக்குச் சேமிக்கவேண்டும் என்னும் எண்ணம் வரவேண்டும். பிறகு அதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். அந்த உறுதிதான் நம்மில் பலருக்கு இருப்பதில்லை. பல நேரங்களில் எல்லோருக்குமே சேமிக்க வேண்டும் என்னும் எண்ணம் ஏற்படக்கூடும். ஆனால் பெரும்பாலானவர்கள் அந்த எண்ணத்தில் உறுதி காட்டுவதில்லை. அதற்குக் காரணம் அவர்களிடத்தில் உள்ள பிற உணர்ச்சிகள்தாம். ஒரு குடும்பத்தில்

அன்றாடச் செலவுகளைக் கருத்துட் கொண்டாலும், வீட்டுத் திருவிழாக்களை கருத்துட் கொண்டாலும் நாம் வீண் செலவு செய்யாமல் இருக்கிறோமா என்று ஒவ்வொருவரும் தத்தம் நெஞ்சைத் தொட்டு எண்ணிப் பாருங்கள். எவ்வளவோ வீண் செலவுகளை நாம் செய்வது அப்போது புலப்படாமல் போகாது. அதே போல் காது குத்துதல், மூக்குக் குத்துதல், மஞ்சள் நீராட்டுதல், புதுமனை புகுதல், திருமணம், இறப்பு போன்ற வற்றில் நாம் செய்யும் செலவுகள் எல்லாம் தவிர்க்க முடியாத வையா? அன்றிக் குறைக்க முடியாதவையா? ஒவ்வொருவரும் உங்களுக்கு நீங்களே எண்ணிப் பார்த்துப் பதில் சொல்லிக் கொள்ளுங்கள். இவற்றில் எல்லாம் ஓரளவேனும் சிக்கனத்தைக் கடைபிடிக்க நம்மால் முடியாதா? முடிந்த அளவு நம்மால் சேமிக்கத்தான் முடியாதா? இன்னும் நம்மில் எத்தனையோ பேர் காப்பி, தேநீர் போன்றவற்றிலும், கள், சாராயம் போன்ற வற்றிலும், சூதாட்டம் போன்றவற்றிலும், வீண் வம்பு வழக்கு களில் ஈடுபடுவதன் மூலமும் நூற்றுக்கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் பொருளைப் பாழாக்கவில்லையா? அறிவுடைய மாந்தர் எண்ணினால் இவற்றையெல்லாம் நிறுத்த முடியாதா? நிறுத்தினால் பொருள் நம்மிடம் தேங்காதா? பாத்திரத்தில் உள்ள ஓட்டையை அடைத்தால் அதில் தண்ணீர் தங்குவதைப்போல் நன்செய் நிலத்தில் உள்ள மோட்டறையை அடைத்தால் வயலில் தண்ணீர் தேங்குவதுபோல் நம் வாழ்க்கையில் நாம் செலவிடும் வீண் செலவுகளையும், ஊதாரித்தனமான செலவுகளையும், தீய செலவுகளையும் நிறுத்தினால் அதற்குப் பெயர்தான் சிக்கனம் என்பது. அச் சிக்கனம் நம் சேமிப்புக்கு வழிகாட்டும். அப்படியானால் கஞ்சத்தனம் பற்றி நீங்கள் சொல்லவே யில்லையே என்றால் அதை அடுத்துச் சொல்கிறேன்.

☆☆☆☆☆

50. "கஞ்சத்தனம்"

கஞ்சத்தனம் என்பதை நல்ல தமிழில் சொல்ல வேண்டு மானால் ''இவறன்மை'' என்று சொல்லலாம். பொருள்களையும், செல்வத்தையும் நாம் பெறுவது அவற்றை நுகர்வதற்காகத்தான். நிலம், தான் வானிலிருந்து பெறுகின்ற நீரைத் தான் நுகர வேண்டிய அளவு நுகர்ந்து, பயன் கொள்ள வேண்டிய அளவுக்குப் பயன் கொண்டு மற்றொரு பகுதியை ஏரி, குளங் களிலும், பிறிதொரு பகுதியை மண்ணுக்குள்ளும் சேர்த்து வைக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உண்ணாமலும், உடுக்காமலும் மற்றும் பல வகைகளாலும் பயன்படுத்தாமலும், சேர்த்து வைக்கும் பழக்கம் உடையவர் களைத்தான் கஞ்சத்தனம் உள்ளவர்கள் என்று சொல்லலாம். அதை யாரும் பின்பற்ற வேண்டும் என்று சொல்வதில்லை. வீட்டில் சோற்றை வைத்துக்கொண்டு அதை உண்ணாமல் மூடிமறைத்து வைத்துவிட்டுப் பசியாலே வருந்துகிறவர்களை மக்கள் என்று சொல்ல முடியுமா? ஐந்து பேர் உள்ள வீட்டில் ஒருவருக்கு 4 இட்டலி வீதம் 20 இட்டலிகள் தேவைப்படும் என்றால் இருபதையும் தயாரித்துக் கொடுப்பது தான் முறை. அப்படியின்றிப் 15 இட்டலியை அவித்துக் கொடுத்துவிட்டு நிறுத்திக்கொள்வது கஞ்சத்தனம். பொருள் இல்லாதவர்கள் இப்படிச் செய்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியும். அரிசியும், பருப்பும் தேவையான பிற பொருள்களும் இருந்தும் இப்படிச் செய்கிறவர்களை நாம் ஆதரிக்கவோ, பாராட்டவோ முடியாது. இப்படிப்பட்டவர்களுக்குப் பொருள் இருப்பதும், இல்லாததும் ஒன்றுதான். அவர்களைத்தான் ''வைத்திழக்கும் வன்கணவர்'' என்று கூறுவர்.

ஊதாரித்தனமாகச் செலவு செய்யக்கூடாது என்று கூறுவதைச் சாக்காக வைத்துக்கொண்டு தேவையானவற்றுக்குக்கூடச் செலவு செய்யாதவர்களைத்தான் நாம் இங்குக் குறிப்பிடு

கிறோம். ஆகவே, இவர்கள் பொருளைத் திரட்டி வைத்துக் கொண்டு தாமும் நுகராமல் அதை நுகரத் தகுதி வாய்ந்த மற்றவர்களுக்கும் தராமல் சேர்த்து வைத்திருப்பதைப் பதுக்கி வைத்திருப்பது என்றுகூடக் கூறலாம். அப்படிப் பதுக்கி வைத்திருப்பது ஒரு சமுதாயக் குற்றமும் ஆகும். முறையான சேமிப்பு ஒரு வகையில் மற்றவர்களுக்குப் பயன்படவும் கூடும். ஆனால் கஞ்சத்தனத்தால் வரும் சேமிப்பு என்று சொல்லப் படுவது மற்றவர்களுக்கு உரியதை அவர்கள் அடைய முடியாத படி தடுத்து நிறுத்துவது என்றாகும். இவர்களைப் பற்றிய ஒரு நாலடியார் பாடல் இங்கு நினைவுக்கு வருகிறது:

உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர் களையான்-கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல்,அ ஆ
இழந்தானென் றெண்ணப்படும்.

☆☆☆☆☆☆

51. வறுமை

குழந்தைகள் மணற் சோறாக்கிப் பரிமாறுவதையும், அதை உண்டு மகிழ்வதையும் நாம் பார்த்து மகிழ்ந்திருக்கிறோம். அங்குப் பரிமாறப்படுவதும், உண்ணப்படுவதும் வெறும் மணலே என்றாலும் பரிமாறுகிற குழந்தையும், அதை உண்ணும் குழந்தையும் உள்ளம் ஒன்றி அம்மணலைச் சோறாகவே உளமார எண்ணிவிடுவதால் அங்கு உண்மையான மகிழ்ச்சி அல்லது உவகை ததும்புவதைக் காணமுடிகிறது. இதற்கு நேர் மாறாக வேறு சில இடங்களில் நாம் உண்ணச் செல்லும்போது பரிமாறுகிறவர்கள் நல்ல சுவையான சோற்றையே பரிமாறி னாலும் அச் சோறு மணலாகி நம்மை வருத்துவதையும் கண்டிருக்கக் கூடும். இங்குச் சோறுதான் பரிமாறப்படுகிறது என்றாலும் பரிமாறுகின்றவர்களும், உண்கின்றவர்களும்

உள்ளம் ஒன்றாமல் வேறுபட்டும், மாறுபட்டும் இருப்பதால் இங்குச் சோறே மணலாகிவிடுகிறது. எனவே, மணல் சோறாவதற்கும், சோறு மணலாவதற்கும் உள்ளமே காரணம் என்று நாம் உணர முடியும். **''இம் மணற் சோறும், சோற்று மணலும்''** எனும் தத்துவம் நம் வாழ்க்கையில் நன்கு ஊடுருவி நம்மை ஆட்டுவிப்பதை உணர முடிந்தவர்கள் எல்லாரும் உணரத் தவற மாட்டார்கள்.

இந்த வகையில் இப்போது வறுமையைப் பற்றி எண்ணிப் பார்ப்போம். வறுமைக்கோடு, வறுமை ஒழிப்பு ஆகிய தொடர்கள் இன்று நாம் அடிக்கடி கேள்விப்படும் தொடர்களாகும். இவற்றில் உள்ள வறுமை என்னும் சொல்லுக்குப் பொருளின்மை அல்லது செல்வமின்மை என்றுதான் நாம் பொருள் கொள்கிறோம். ஆனால் அச் சொல்லுக்கு அவ்வாறு பொருள் கொள்வது பொருந்தாது என்கிறார் தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர். அவர் வறுமை என்பதற்குப் ''போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்'' என்று பொருள் கூறுகிறார். அஃதாவது இன்பத்தை நுகர முடியாததோடு அல்லது அனுபவிக்க முடியாததோடு அவ்வின்ப நுகர்ச்சியில் பற்றுதலுமுள்ள மனமே அவரால் இங்கு வறுமைக்குப் பொருளாகக் காட்டப்படுகிறது. இதனை மேலும் சற்று விளக்கமாகக் கூற வேண்டுமானால் ஒருவருக்கு ஒன்றை அனுபவிக்க வேண்டும் என்னும் ஆசையுமிருந்து அதனை அவரால் அனுபவிக்க முடியாத நிலைமையுமிருக்குமானால் அப்போதுள்ள அத்தகையோரது மன நிலையே வறுமையின் நிலை என்பதாகும். எனவே, நாம் பெறவேண்டிய இன்பங்களை அல்லது அவற்றுக்குத் தேவையானவற்றைப் பெற்றிராமை மட்டுமே வறுமையாகாது. அவற்றை நுகர வேண்டும் என்னும் எண்ணமும் அல்லது ஆசையும் இருக்கவேண்டும். காப்பி கிடைக்காமை மட்டும் வறுமையாகாது. காப்பி கிடைக்காமையோடு காப்பிப் பருக வேண்டும் என்னும் ஆவலும் சேர்ந்து இருக்கும்போதுதான் அங்கு வறுமை ஏற்படும். காப்பி குடிக்க வேண்டும் என்னும் ஆசையே இல்லாதவர்களுக்குக் காப்பி இல்லாமை வறுமை ஆகாதே.

ஆகவே, வறுமை என்பதற்கு ஒருவகை உள்ளத்தையே பேராசிரியர் பொருளாகக் காட்டுகிறார் என்பது பெறப்படும். ஒருவரது உள்ளம் ஒன்றைப் பற்றி நின்று அவரைத் தூண்டித் துன்புறுத்தா விட்டால் அவரை எந்த வறுமையும் அணுகாது. ஒருவரைத் துன்புறுத்து மாற்றல் அவருள்ளத்திற்கு மட்டுமே உண்டு. அதைத் தவிர அவரை வருத்தும் திறம் வேறு யாருக்குமோ எதற்குமோ, இருக்க முடியாது! இதையே-

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

என்னும் குறளும் குறிப்பிடுகிறது.

அப்படியானால் செல்வம் என்பதற்கு என்ன பொருள்? என்றால் அதை அடுத்துச் சொல்லட்டுமா?

☆☆☆☆☆

52. செல்வம்

செல்வம் உடைமை என்றால் பணம் உடைமை அல்லது பொருளுடைமை என்றுதான் நாம் பொருள் கொள்கிறோம். ஏனென்றால் ஒருவரைச் செல்வர் என்று சொல்லும்போது அவர் செல்வம் அல்லது பொருளை உடையவராக இருக்கிறார் என்னும் பொருளில்தான் அவரை அவ்வாறு குறிப்பிடுகிறோம். ஆனால் உளவியல் அடிப்படையில் பேராசிரியரவர்கள் இதற்கு வேறு ஒரு பொருளையே கொள்கிறார். தொல்காப்பியத்தின் மெய்ப் பாட்டியலில் அதன் உரையாசிரியராகிய பேராசிரியர் செல்வம் என்பதற்கு நுகர்ச்சி என்றுதான் பொருள் கொள்கிறார். அப்படியானால் செல்வம் உடையவர்களை யெல்லாம் நாம் செல்வர் என்று கூறுவது முழுவதும் பொருந்தாது என்றுதான்

தோன்றுகிறது. பெட்டியில் பணம் இருப்பதனாலேயே அப் பெட்டியைச் செல்வர் என்று சொல்லிவிட முடியாதே. அல்லது அதற்கு அஃறிணையில் ஒரு பெயர் வைத்தும் அப் பொருள் படச் சொல்லிவிட முடியாதே.

செல்வம் தன் பயனை விளைவிக்கிற போதுதான் அதை உடையவர்களைச் செல்வர் என்று கூற முடியும். செல்வம் எப்போது பயன்பட முடியும் என்றால் அதை நுகர்கிற போதுதான். நுகர்தலுக்கும் பயன்படுத்தலுக்குங்கூட நுட்பமான வேறுபாடு உண்டு. சோற்றைப் பயன் படுத்துவதற்கும் அதை நுகர்வதற்கும் வேறுபாடு இருப்பதாகவே யாம் உணர்கிறோம். கடைக்குச் சென்று கைப்பையில் காய்கறிகளை வாங்கிப் போடுவதுபோல் சோற்றையும், பிற உணவுப் பொருள்களையும் வாய் வழியாக வயிற்றில் போடுவது ஒன்று. அதை நாம் சோற்றைப் பயன் படுத்துவ தெனலாம். அதே உணவுப் பொருள்களை அதே வாய் வழியாக அதே வயிற்றுக்கு அனுப்பும்போது ஆர, அமர உற்றார் உறவினரோடும், இனிய நண்பர்களோடும் மகிழ்ந்து உரையாடிக் கொண்டு நன்றாக மென்று பல்வகையிலும் சுவைத்து உட்கொள்வது என்பது வேறு. இதைத்தான் நுகர்ச்சி என்று பேராசிரியர் சுட்டிக் காட்டுகிறார் என்று எமக்குத் தோன்றுகிறது. நல்ல உணவை உண்டும், நல்ல உடையை உடுத்தியும், நல்ல உறையுளில் தங்கியும் நல்ல ஊர்தியிற் சென்றும் வாழும் மாந்தர் பலர் கவலையோடும் குழப்பத்தோடும் இருக்கக் காண்கிறோம். இவர்களையெல்லாம் பேராசிரியர் குறிப்பிடும் பொருளில் செல்வர் என்று சொல்ல முடியுமா? இத் தகையவர்களை அப் பொருள்களைப் பயன்படுத்துகிறவர்கள் என்று மட்டுமே கூறமுடியுமே தவிர அவற்றை நுகர்கிறவர்கள் என்று கூற முடியாதே. ஆகவே செல்வத்தை நுகர்ந்து இன்புறுகிறவர்களை மட்டுமே செல்வர் எனலாம். அந்த நுகர்ச்சியில் இன்னொரு கிளை இருப்பதையும் யாம் இங்குச் சுட்டிக் காட்ட விழைகிறோம்.

செல்வத்தை நாம் நுகர்ந்து இன்புறுவதைப் போலவே பிறருக்கு ஈந்தும் இன்புற முடியும். அதைத் தான் திருவள்ளுவர்

''ஈத்துவக்கும் இன்பம்'' என்கிறார். இன்ப துன்பமெல்லாம் உள்ளத்தின் போக்கினால் ஏற்படும் உணர்வுகளேயாதலால் நாம் நம் பொருளைத் தகுதியுள்ள ஒருவருக்கு ஈந்து அதை அவர்கள் பெற்று நுகர்ந்து மகிழும்போது அக் காட்சியைக் காணும் நாம் அப் பொருளை நாம் நுகரும்போது அடையும் இன்பத்தைப் போன்ற தொரு உணர்வைப் பெறமுடியும். அவ் வின்பம் நாம் நுகர்ந்த இன்பத்தினும் ஒருவகையில் மேம்பட்டதாகவும் இருக்கும். முன்னது சுவை மாவைத் தின்பது போன்றிருக்கும். பின்னது அம்மாவைப் பணியாரமாக்கித் தின்பதைப் போன்றிருக்கும் என்று கூறத் தோன்றுகிறது எமக்கு. இவ்வாறு நுகராமல் செல்வத்தைப் பயன்படுத்துகிறவர்களைச் செல்வர் என்று சுட்டிக் காட்ட முடியாவிட்டால் அவர்களை வேறு எப்படிச் சுட்டுவது என்னும் வினா இங்கு இயல்பாக எழும். அந்த வினாவுக்குரிய விடையை அடுத்துச் சொல்வோம்.

☆☆☆☆☆

53. உடைமை

உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்-கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல், அ ஆ
இழந்தானென் றெண்ணப் படும்.

என்னும் நாலடியார் சுட்டுவது போலத் தம்முடைய செல்வத்தைத் தாம் நுகர்ந்து உவக்காமலும், தக்கார்க்கு ஈந்து உவக்காமலும் அதனைக் காத்திருந்து பிறகு இழந்துவிடு கிறார்களே அவர்களை அதை அவர்கள் இழக்கும் வரையில் ஏதாவது ஒரு பெயரிட்டுத்தானே குறிப்பிட வேண்டும். அவர்களைச் செல்வர் என்று கூற முடியாது என்று பேராசிரியர் கூறுகிறார். அப்படியானால் அவர்களை வேறு எப்பெயர் கொண்டு குறிப்பிடுவது என்றால் அதற்கும் நாம் பேராசிரி யரிடந்தான் போக வேண்டியிருக்கிறது.

அவர் மெய்ப்பாட்டியலின் வேறு ஒரு பகுதியில் உடைமை என்னும் சொல்லுக்குச் செல்வம் உடைமை அல்லது பொருளுடைமை என்னும் கருத்தில் பொருள் தந்ததோடு அதை மேலும் சற்று விரிவாக விளக்க விரும்பியிருக்கிறார். அது இதுதான்: ''உடைமை என்பது செல்வம். செல்வ நுகர்ச்சியாயின் உவகைப் பொருளாம்; இஃது அன்னதன்றி நுகராதே அச் செல்வந்தன்னை நினைந்து இன்புறுவதற்கு ஏதுவாகிய பற்றுள்ளம். அஃதாவது நிதி மேல் நின்ற மரம் போலச் செல்வம் உடைமையான் வரும் மெய் வேறுபாடு''- இவ் விளக்கத்தில் அவர் கூறுகின்ற ''நிதி மேல் நின்ற மரம் போல'' என்னும் உவமையை இப்போது நாம் விட்டு விடலாம். மற்ற பகுதியை மட்டும் இங்கு நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இங்கு உடைமை என்பதற்குச் செல்வத்தை நுகராமலேயே அதனை உடையவராயிருத்தல் என்று பேராசிரியர் பொருள் கூறுகிறார். நுகர்வது செல்வம் என்னும் பகுதியில் சுட்டப்பட்டது. இங்கே அப் பொருளில்லை. ஏதோ, கையிலோ, பையிலோ, பெட்டியிலோ அல்லது மற்ற இடங்களிலோ பணத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டு அவ்வாறு அதனை வைத்திருக்கிறோம் என்கின்ற ஓர் உணர்வை மட்டும் கொண்டு சிலர் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களின் அத் தன்மையைத்தான் உடைமை என்னும் சொல்லால் தொல்காப்பியர் சுட்டுவதாக அதன் உரையாசிரியராகிய பேராசிரியர் நமக்குக் கூறுகிறார்.

ஆகவே நுகர்ச்சியின்றி வெறும் செல்வப் பொருளைக் குவித்து வைத்துக்கொண்டு இருப்பவர்களை உடையவர் அல்லது உடையர் அல்லது உடையார் என்றுதான் சொல்ல முடியும் என்று எமக்குத் தோன்றுகிறது.

ஆகவே வறுமை, செல்வம் ஆகிய இரண்டிற்கும் மற்றும் இவை போன்ற பலவற்றிற்கும் அடிப்படையாக விருந்து நம்முள் இயங்கிக்கொண்டும், நம்மை இயக்கிக் கொண்டும் இருப்பது நம் உள்ளம்தான். அதனாற்றான் ''உள்ளமுடைமை உடைமை'' என்னும் தொடரும் எழுந்தது. உள்ளம் என்பதற்கு மனம் என்று பொருள் கொண்டு அவ்வுள்ளத்தை அஃதாவது நல்ல, செம்மையான, முழுமையான, பழுதற்ற உள்ளத்தை உடைமை தான் உண்மையான உடைமையாகும். மற்ற பொருளுடைமை போன்றனவெல்லாம் உண்மையான உடைமைகளாகா. அவை சிறந்த பயனையும் நமக்குத் தரமாட்டா. கையில் சோற்று மூட்டையை வைத்துக் கொண்டிருப்பதனால் அதனை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்னும் ஒருவகைத் தெம்பு தவிர அதனால் வேறு என்ன பலன் ஏற்பட்டுவிட முடியும்.

ஆகவே, மேலுள்ள இம் மூன்று கட்டுரைகளிலும் நாம் பேராசிரியர் என்னும் சான்றோரின் சிந்தனையில் பங்கு கொண்டதன் விளைவாக சோற்றுமணற் போக்கைக் கைவிட்டு மணற்சோற்றுப் பான்மையையே சோற்றிலும் பின்பற்றி வாழ வேண்டும் என்னும் அடிப்படை வாழ்வியலைக் கற்றுப் பயன்கொள்ள முயல்வோமாக.

☆☆☆☆☆

54. அண்ணாவின் புதிய பழமொழி

பேரறிஞர் அண்ணா அவர்கள் பல புதிய பழமொழிகளை உருவாக்கி இருக்கிறார்கள். அவற்றுள் ஒன்றுதான் ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு'' என்பது. இதை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபொழுது எல்லோருக்கும் புலப்படும் பொருள் எதிரிகளின் கருத்துகளிலும் உண்மையும், நன்மையும் இருக்கும் என்பதுதான். ஆனால் இதை அமைதியாக இருந்து ஆழ்ந்து நோக்கினால் விரிவான வேறு பொருளும் கிடைக்கும். இத் தொடரை மாற்றான் தோட்டத்து மல்லி கைக்கும் மணம் உண்டு என்று பிரித்துச் சொல்லிப் பார்த்தால் இத் தொடரின் பொருள் சிறவாது. மாற்றான் தோட்டத்து மல்லிகை என்று அதனை இடைவெளியில்லாமல் ஒரு சொல்

போல் நோக்கிப் பார்த்தால்தான் அதன் சிறப்பு நன்கு புலப்படும். பிரித்துப் பார்த்தால் எதிரியின் தோட்டத்தில் உள்ள (மல்லிகைப்பூவுக்கு மட்டுமேயன்றி) கனகாம்பரத்திற்கும், ஊமத்தைக்கும் மணம் உண்டு என்னும் பொருளும் தோன்றும். ஆனால் அண்ணா அவர்கள் கருதிய பொருள் அதுவன்று. நம் தோட்டத்து மல்லிகைக்கு மட்டுமேயன்றி , எதிரியின் தோட்டத்தில் உள்ள மல்லிகைப் பூவுக்கும் மணம் உண்டு என்பது தான் அவர் கருதிய பொருள். இப் பொருள் அத் தொடரை ஒரே சொல் போல் ஒலித்தால் மட்டுமே கிடைக்கும்.

நம் தோட்டத்தில் உள்ள மல்லிகை மணப்பதை நாம் அறிகிறோம். அறிந்து முகர்கிறோம்; நுகர்ந்து இன்புறுகிறோம். அவ்வாறே நம் எதிரியின் தோட்டத்தில் உள்ள மல்லிகைப் பூவுக்கும் மணம் உண்டு என்று நாம் நம்புவதால் என்ன பலன் என்றால் நம் எதிரிமேல் உள்ள நம் பகையும், வெறுப்பும் அவரைச் சேர்ந்த எல்லாவற்றின் மேலும் படருவதைத் தவிர்க்கலாம். அவர்மேல் நமக்கு வெறுப்பு இருப்பதால் அவருடன் தொடர்புடைய எல்லாவற்றின் மேலும் கொள்கின்ற வெறுப்பை இந்த நம்பிக்கை குறைக்க உதவும். அப்படிக் குறைத்துக் கொள்வதால் நம் தோட்டத்தில் மல்லிகை இல்லாத நேரத்தில்கூட மாற்றான் தோட்டத்தில் உள்ள மல்லிகையின் மணம் காற்றுவாக்கில் நம்மை அணுகும்போது நாம் அதை முகர்ந்தும், நுகர்ந்தும் மகிழ முடியும். அம் மகிழ்ச்சி அவர் மேலுள்ள கசப்பையும், வெறுப்பையும் குறைக்க உதவவுங் கூடும். பிறகு நாளாவட்டத்தில் அவர் மேலுள்ள பகை நீங்கி அம்மாற்றார் நமக்கு ஏற்றாராக ஆகவும் அது துணை செய்யலாம்.

ஆகவே, மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணம் உண்டு என்று ஒருவர் கொள்வதால், அம்மாற்றானுக்கு அதனால் பலன் ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் இவருக்கு நல்ல பலன் கிட்டுவது உறுதி. ஏனென்றால் மாற்றாரையும் தமக்கு ஏற்றாராகக் கொள்ள நேர்வதால் அப் பகை நீங்கி இவர் உள்ளத்தில் இருக்கும்

எரிச்சலும், கொதிப்பும் அடங்கிக் குளிர்ச்சியும், அமைதியும் ஏற்படும். அதனால் இவரது வளர்ச்சியும், உயர்ச்சியும் தாராளமாக ஏற்பட வாய்ப்பு உண்டு. அண்ணா அவர்களிடத்தில் இம் மனப்பான்மை இருந்ததற்கும் அதனால் அவர் உயர்ந்து ஓங்கி வளர்ந்ததற்கும் ஓர் எடுத்துக்காட்டை இப்போது காணலாம்.

இந்தியாவின் முதல் தலைமை அமைச்சராக வீற்றிருந்து ஓங்கு புகழ் எய்தி உயர்ந்து வாழும் நேரு அவர்களைப் பற்றி ஒருமுறை அண்ணா குறிப்பிடும் போது ''அவர் கட்டி முடிக்கப் பட்ட கோபுரம். நான் கொட்டிக் கிடக்கின்ற செங்கல்'' என்று கூறியுள்ளார். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்னும் கோட்பாடு அண்ணா அவர்கள் உள்ளத்தில் எந்த அளவு இரண்டறக் கலந்து செயல்பட்டது என்பதற்கு இதை விட வேறு சான்று வேண்டியதில்லை. நேருவைப் பற்றி அவர் வானளாவ உயர்ந்த கோபுரம் போன்றவர் என்று கூறியதன் மூலம் அப் பெருமகனின் சிறப்புகளை எல்லாம் குறைக்காமலும், மறைக்காமலும், மறுக்காமலும் ஏற்று மனமாரப் பாராட்டியுள்ளார்.

அதே நேரத்தில் அண்ணா தம்மை மிக எளிமையானவராக ஆக்கிக் கொள்கிறார். அஃதாவது தாம் கொட்டிக் கிடக்கும் செங்கற்களைப் போன்றவர் என்று கூறிக்கொள்கிறார். இதில் உள்ள மற்றொரு சிறப்பு-அண்ணாவால் எண்ணப்படாத அல்லது குறிப்பிடப்படாத சிறப்பு என்னவென்றால் அண்ணாவும் ஒரு காலத்தில் நேருவைப் போன்று கோபுரமாக ஆகக்கூடும் என்பதே. கொட்டிக் கிடக்கும் செங்கற்கள்தாமே பின்னால் கட்டி முடிக்கப்படும் கோபுரங்கள் ஆகின்றன? அவரைக் கோபுரம் என்றும் தம்மைச் செங்கற்குவியல் என்றும் எண்ணிய எண்ணமே இவர் தம்மைக் கோபுரமாக ஆக்கிக் கொள்வதற்கு நாட்டப்பட்ட அடிக்கல் ஆகும். இந்த எண்ணந்தான் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களை வானுற ஓங்கி வனப்புடன் திகழும் கோபுரமாக உயர்த்தியிருக்கின்றது.

இவ்விரு கோபுரங்களும் நாட்டில் வேறு பற்பல நற்கோபுரங்கள் உருவாக உதவி செய்யும் என்று நாம் நம்புவோம்.

அண்ணா அவர்கள் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணம் உண்டு என்றுதான் கூறினாரேயன்றி, மாற்றான் தோட்டத்தில் உள்ள காட்டாமணக்குக்கும், வெள்ளெருக்குக்கும், கனகாம்பரத்திற்கும் இவை போன்ற பிறவற்றிற்கும் மணம் உண்டு என்று கூறவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதை மறந்துவிட்டு அண்ணா சொன்னதைத் தவறாகப் புரிந்துகொண்டு மாற்றான் தோட்டத்தில் உள்ளவற்றிற் கெல்லாம் மணம் உண்டு என்று குருட்டுத் தனமாக நம்பி அதை நடைமுறையிலும் பின்பற்றத் தொடங்கி விட்டோமானால் நம் வீட்டிலும், நாட்டிலும் குழப்பமும், கவலையும் ஏற்பட்டு நாம் சீரழிய வேண்டி வந்துவிடும்.

மேலும் எதிரிகள் என்றாலே அவர்களோடு தொடர்புடையன வெல்லாம் தீங்கு பயப்பன என்று கொள்ளக்கூடாது, அவற்றில் உள்ள நல்லனவற்றை நாம் கொள்ளத் தவறவும் கூடாது என்று அவர் கூறியதாக ஏற்றுக்கொண்டால் அதன் மறுபக்கமாக நம்மால் நல்லவர், நம்மவர், நண்பர் என்று நம்பி ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களிடத்திலிருந்து நல்லனவும், பொல்லா தனவும்(அவர்கள் அறிந்தோ அறியாமலோ) வெளிப்படவும் கூடும் என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால் நல்லவர்களிடமிருந்து அல்லாதனவும், பொல்லாதவர்களிட மிருந்து நல்லனவும் வெளிப்படவும் கூடும் அன்றோ? அதனாற்றான் திருவள்ளுவர் ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு'' என்றும் ''எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு'' என்றும் கூறியுள்ளார்.

அண்ணா அவர்கள் இக் கருத்தைப் பிறிதோரிடத்தில் வேறோர் உருவகத்தின் மூலம் வெளியிட்டிருப்பதையும் இங்குச்

சுட்டிக்காட்ட விரும்புகிறோம். முருங்கை மரத்தின் எல்லா உறுப்புகளும் நமக்குப் பயன்படுகின்றன. முருங்கை வேர், முருங்கைப்பட்டை போன்றவை மருந்துக்குப் பயன்படு கின்றன. முருங்கைக் கீரை, பூ காய் ஆகியவை நம் உணவுக்குப் பயன்படுகின்றன. ஆகவே, முருங்கையில் உள்ள எல்லாம் நமக்குப் பயன்படுவதால் அதில் உள்ள எல்லாவற்றையும் நாம் குருட்டுத்தனமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று அண்ணா கூறியுள்ளார். அது இதுதான்: ''முருங்கை மரத்தில் இருக்கிறது என்பதற்காக நாம் கம்பளிப் பூச்சியைச் சமைத்து உண்ண முடியுமா'' என்று அவர் வினவுகிறார். ஆகவே நம்மவர், நல்லவர் என்று நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களிடமிருந்து வருவன எல்லாம் நல்லனவாகவே இருக்கும் என்று நம்பிவிடக் கூடாது. இந்த உணர்வு அண்ணாவின் உள்ளத்தில் ஆழமாகவும், நன்றாகவும் பதிந்திருந்த காரணத்தினாலேதான் அவர் தம் அரசியல் வாழ்வில் துளங்காமல், நிலைத்தோங்கி நீடு புகழ் எய்த முடிந்திருக்கிறது. அவரால் மதிக்கப்பட்ட பெருமக்கள் கூறிய சிலவற்றையும் அவர் ஏற்றுக் கொள்ளாமல் தமக்குச் சரியென்று பட்ட கருத்துகளிலே உறுதியாக நின்று தம்முடைய தனித் தன்மையை நிலைநாட்டியிருக்கிறார். இது நாம் அண்ணாவிடமிருந்து பெறும் பாடங்களில் சிறப்பான மற்றொரு பாடமாகத் திகழ வேண்டும்.

☆☆☆☆☆

55. சரியன்று; சரி

சரியன்று	சரி
அகமடியர்	- அகமுடையார்
அடையார் (ஆறு)	- அடையாறு
அணக்கட்டு	- அணைக்கட்டு
அணுக்காக	- அணுவுக்காக
அதுவோ அல்லது இதுவோ	- அதுவோ இதுவோ
அது அல்ல	- அதுவன்று; அது அன்று
அநுபவம்	- அனுபவம்
அம்மா வந்தாள்	- அம்மா வந்தார்
அம்பு எய்த முடியாது	- அம்பு எய்ய முடியாது
அய்நூறு	- அய்ந்நூறு
அரசினர் பள்ளி	- அரசுப்பள்ளி
அரசினர் கல்லூரி	- அரசுக்கல்லூரி
அரசினர் மருத்துவமனை	- அரசு மருத்துவமனை
அரணாக்கயிறு	- அரைக்கயிறு, அரைஞாண்
அருவடை	- அறுவடை
அருவாமணை	- அரிவாள் மணை
அருவாள்	- அரிவாள்
அருகாமையில்	- அருகில்
அவரைத் தொடர்பு கொண்டேன்	- அவரோடு தொடர்பு கொண்டேன்
அவள் சரிந்தாள்	- அவள் நிலை குலைந்தாள்; அவள் சாய்ந்தாள்.

அவாள்	- அவர்கள்
அவா	- அவர்கள்
அவுத்தான்	- அவிழ்த்தான்
அவை அன்று	- அவையல்ல; அவை அல்ல
அவை வராது	- அவை வாரா; அவை வரமாட்டா
அளிச்சான்	- அளித்தான்
அறுபத்தி ஐந்து	- அறுபத்தைந்து; அறுபத்து ஐந்து
அறுவாமணை	- அறுவாள்மணை
அன்னார்	- அவர்
அனைத்திந்தியா	- இந்தியா; முழு இந்தியா
ஆட்டுக்கெடை	- ஆட்டுக்கிடை
ஆத்துக்கு	- அகத்துக்கு; ஆற்றுக்கு
ஆத்துக்காரன்	- அகத்துக்காரன்
ஆத்துக்காரி	- அகத்துக்காரி
ஆப்பை	- அகப்பை
ஆம்படையாள்	- அகமுடையாள்
ஆம்படையான்	- அகமுடையான்
ஆம்பள	- ஆண் பிள்ளை
ஆயிரத்தி முப்பத்தி ஐந்து	- ஆயிரத்து முப்பத்து ஐந்து ; ஆயிரத்து முப்பத்தைந்து
ஆலமரம் சரிந்தது	- ஆலமரம் சாய்ந்தது
ஆலோசனை நடத்தினார்	- ஆலோசித்தார்
ஆறு மணல்	- ஆற்று மணல்
ஆக்ஷி	- ஆட்சி
1000-தை	- 1000 - அத்தை

இசு - இழு
இடிச்சபுளி - இடித்தபுளி
இதில் ஏற்பட்டு வரும் சிக்கல்களைப் புரிந்துள்ளோம் - இதில் ஏற்பட்டு வரும் சிக்கல் களைப் புரிந்து கொண்டுள்ளோம்
இதை அறிவதில் மகிழ்கிறேன் - இதை அறிந்து மகிழ்கிறேன்
இயக்குனர் - இயக்குநர்
இரங்கசாமி - அரங்கசாமி
இரங்கநாதன் - அரங்கநாதன்
இரங்கராச புரம் - அரங்கராச புரம்
இருபத்தி ஐந்து - இருபத்தைந்து; இருபத்து ஐந்து
இருவத்து மூன்று - இருபத்து மூன்று
இளிச்சான் - இளித்தான்

ஈரணமாடு - ஈரிணை மாடு

உண்டை - உருண்டை
உரிதாக்கிக் கொண்டேன் - உரித்தாக்கிக் கொண்டேன்
உருவாகுதல் - உருவாதல்
உறுதிமொழி எடுத்துக் கொண்டார் - உறுதி ஏற்றார்; உறுதி கூறினார்; உறுதிமொழி கூறினார்; உறுதி மொழிந்தார்

எக்கா - என் அக்கா
எத்தனை நேரம் - எத்துணை நேரம்
எத்துணை மரங்கள் - எத்தனை மரங்கள்
எப்பன் - என் அப்பன்
எம்மா - என் அம்மா
எம்ப்ளது; எம்பது - எண்பது

எர நூறு - இரு நூறு
எழ நூறு - எழு நூறு
எழப்புளி - இழைப்புளி
எழவு - இழவு
எறக் கூடை - இறைக்கூடை
எனக்கு உரித்தது - எனக்கு உரியது
எனக்குந் தமிழரசி ஆகணும் - நானும் தமிழரசி ஆக வேண்டும்
எனது தாய் - என் தாய்; எனக்குத்தாய்
எனது தந்தை - என் தந்தை; எனக்குத் தந்தை
எனது மகள் - என் மகள்; எனக்கு மகள்
எனது மகன் - என் மகன்; எனக்கு மகன்

ஏதுவாக - தோதாக; உதவியாக
ஏப்பிரல் 1998 - 1998 ஏப்பிரல்
ஏமாத்தாதே - ஏமாற்றாதே
ஏழாவது மாநாடு - ஏழாம் மாநாடு
ஏள்றார் - எழுந்தருள்கிறார்

ஐ 55% - %55

ஒப்பரவு - ஒப்புரவு
ஒப்பிச்சான் - ஒப்பித்தான்
ஒவ்வொரு இளைஞர்களும் - ஒவ்வொரு இளைஞரும்
ஒன்றிணைந்து - ஒருங்கிணைந்து
ஒன்றுக்கு மேற்பட்ட - சில; பல

ஓச்சல் - ஓய்ச்சல்
ஓட்டுனா் - ஓட்டுநர்

ஒடகாலி	- ஒடு காலி
ஓரணமாடு	- ஓரிணைமாடு
கட்டமரம்	- கட்டு மரம்
கம்மனாட்டி	- கைம் பெண்டாட்டி; கைம் பெண்
கம்மினாட்டி	- கைம்பெண்; கைம் பெண்டாட்டி
கயிர்; கயா்	- கயிறு
கருப்பு	- கறுப்பு
கல்லூரி முதல்வி	- கல்லூரி முதல்வர்
கவுந்தது	- கவிழ்ந்தது
கழட்டினான்	- கழற்றினான்
கழனிப்பானை	- கழி நீர்ப்பானை
கழுத்துக்கால்	- கழுத்துக் கோல்
களக்கட்டு	- களைக்கட்டு; களைக் கொத்து
களிச்சான்	- களித்தான்
கறுமை	- கருமை
காச்சல்	- காய்ச்சல்
காசாம்பூ	- காயாம்பூ
காத்து	- காற்று
காப்பாத்து	- காப்பாற்று
காலம்பர	- காலையில்
காவாய்	- கால்வாய்
காக்ஷி	- காட்சி
குழு தெரிவிப்பார்கள்	- குழு தெரிவிக்கும்; குழுவினர் தெரிவிப்பர்

குற்றுமதிப்பு	- குத்து மதிப்பு
குஷ்டம்	- குட்டம்
கூவம் ஆறு சாலை	- கூவம் ஆற்றுச் சாலை
கூற வேண்டாம்	- கூற வேண்டா
கூறை வேஞ்சார்	- கூரை வேய்ந்தார்
கெடாமாடு	- கிடா மாடு
கேழ்க்காதே; கேக்காதே	- கேட்காதே
கேட்பது யார்?	- கேட்பவர் யார்?
கேப்பை; கேவுரு	- கேழ்வரகு
கேழ்ப்பார்	- கேட்பார்
கேழ்வி	- கேள்வி
கேள்வி பதில்	- வினாவிடை
கொசு வலை	- கொசுத்திரை
கொழும்புவிலிருந்து	- கொழும்பிலிருந்து
சட்டப்பேரவையை அழைத்தார்	- சட்டப் பேரவையைக் கூட்டினார்
சட்டையை அவிழ்த்தான்	- சட்டையைக் கழற்றினான்
சம்மந்தம்	- சம்பந்தம்
சம்மந்தி	- சம்பந்தி
சாச்சான்	- சாய்த்தான்
சாஞ்சது; சாஞ்சுது	- சாய்ந்தது
சாதம்	- சோறு
சாய்ங்காலம்	- சாயுங்காலம்

சிலகாலம்	- சிறிதுகாலம்
சிலது விட்டுப் போயின	- சில விடுபட்டன
சிலவு	- செலவு
சுடு தண்ணி	- சுடுநீர்; வெந்நீர்
செஞ்சார்	- செய்தார்
செய்யார் (ஆறு)	- செய்யாறு
செல்வந்த நாடுகள்	- செல்வ நாடுகள்
செல்வந்தர்	- செல்வர்
சென்னை அய்தரா பாத்திலும் நடைபெறும்	- சென்னையிலும் அய்தரா பாத்திலும் நடைபெறும்
சேர மற்றும் சோழர்	- சேரர், சோழர் ஆகியோர்; சேரரும் சோழரும்.
சொம்பு	- செம்பு
சொரண்டாதே	- சுரண்டாதே
சோமாறி	- சோம்பேறி
டப்	- பட்
டப்பாசு	- பட்டாசு
டமார்	- மடார்
டமாரம்	- மடாரம்
தக்க வைத்துக் கொண்டார்	- தங்க வைத்துக் கொண்டார்
தச்சான்	- தைத்தான்
தப்பிச்சான்	- தப்பித்தான்
தலகாணி; தலவாணி	- தலையணை

தலா இரண்டு வீதம்	- தலைக்கு இரண்டு வீதம்
தலா ஒன்று	- தலைக்கு ஒன்று
தலித் மக்கள் அவர் களையும் அறியாமல்	- தலித் மக்கள் தங்களையும் அறியாமல்
தலைமை ஆசிரியை	- தலைமை ஆசிரியர்
தலைவாசல்	- தலை வாயில்
தலைவி	- தலைவர்
தவுக்களை; தவுக்கட்டான் தவளக்கா	- தவளை
தாப்பாள்	- தாழ்ப்பாள்
திருவாடித்தண்டு	- திருவடித் தண்டு
திருவாணி	- திருகாணி
துகை	- தொகை
துண்ணூத்துப் பச்ச	- திரு நீற்றுப் பச்சை
துண்ணூறு; திருநாறு	- திரு நீறு
துப்பாக்கிச் சூடு நடத்தினர்	- துப்பாக்கியால் சுட்டனர்
தூத்து	- தூற்று
தூத்தல்	- தூற்றல்; தூறல்
தென்னஞ்செடி	- தென்னம்பிள்ளை; தென்னங்கன்று
தேங்காய் மரம்	- தென்னை மரம்
தேச்சாள்	- தேய்த்தாள்
தேனீர்	- தே ;

தொழிற்துறை	- தொழிற்றுறை; தொழில் துறை
நடத்துனர்	- நடத்துநர்
நாக்காலி	- நாற்காலி
நாத்து	- நாற்று
நாதசுரம்	- நாக சுரம்
நாயிற்றுக்கிழமை	- ஞாயிற்றுக் கிழமை
நிமிடங்களில் தயாராகிவிடும்	- சில நிமிடங்களில் தயாராகிவிடும்
நிறுவுனர்	- நிறுவுநர்
நிர்வாகம்	- நிருவாகம்
நிர்வகித்தல்	- நிருவகித்தல்
நீண்ட காலம் எடுத்துக் கொண்டார்	- நீண்டகாலமாயிற்று ; நீண்டகாலம் தேவைப்பட்டது
நுப்பது	- முப்பது
நெவத்தடி	- நுகத்தடி; நுகம்
நேக்கு	- எனக்கு
நேத்து	- நேற்று
நொண்டியா மொடமா?	- நொண்டியா முடமா?
நோக்கு	- உனக்கு
நோண்டு	- தோண்டு
நோண்டுதல்	- தோண்டுதல்
பச்சத் தண்ணி	- தண்ணீர்

படையாச்சி	- படையாட்சி
10-ல்	- 10-ஆல்
10-ம்	- 10-ஆம்
10-ல்	- 10-இல்
10-ம்	- 10-உம்
10-கு	- 10-க்கு
10-வது	- 10-ஆவது
பந்தக்கால்	- பந்தற்கால்; பந்தல் கால்
பயந்தாங்குளி	- பயந்தாங் கொள்ளி
பயித்தம் பருப்பு	- பயிற்றுப் பருப்பு; பயிற்றம் பருப்பு.
பயிறு; பயிரு; பயறு	- பயிர்
பழநி	- பழனி
பாச்சல்	- பாய்ச்சல்
பாத்து	- பார்த்து
பாப்பார்	- பார்ப்பனர்; பார்ப்பார்
பாப்பானை	- பால் பானை; பார்ப்பானை
பாரதிநகர், கொரட்டூர் கிராமம், சைதாப்பேட்டைத் தாலுக்கா	- சைதாப்பேட்டைத் தாலுக்கா; கொரட்டூர் கிராமம்; பாரதி நகர்.
பால் சாப்பிடலாமா?	- பால் பருகலாமா?; பால் குடிக்கலாமா?
பிரளுதல்	- புரளுதல்
புரழ்ச்சி	- புரட்சி
புழக்கடை	- புறக்கடை; புறங்கடை
பூப்பெய்தவுடன்	- பூப்பெய்தியவுடன்; பூப்பு எய்தியவுடன்

பெங்களூர் விரைந்தார்	- பெங்களூருக்கு விரைந்தார்
பெரியவாள்	- பெரியவர்கள்
பேச்சுவார்த்தை நடத்தினார்கள்	- பேசினார்கள்
பேசுவது யார்?	- பேசுபவர் யார்?
பேத்தல்	- பெயர்த்தல்
பேத்தல்	- பிதற்றல்
பைத்து	- பற்று
பொங்குமாங்கடல்	- பொங்குமாக்கடல்
பொசாய	- பொழுது சாய
பொஞ்சாதி	- பெண் சாதி
பொடவை	- புடவை
பொட்டை	- பெட்டை
பொதுவாக எல்லா இலக்கியங்களிலும் குறிப்பாகத் திருக் குறளிலும் அவர் புலமை மிக்கவர்	- பொதுவாக எல்லா இலக்கியங் களிலும் சிறப்பாகத் திருக்குறளிலும் அவர் புலமை மிக்கவர்; எல்லா வற்றையும் வெளிப்படையாகச் சொன்ன அவர் இதை மட்டும் குறிப்பாக உணர்த்தினார்.
பொம்பள	- பெண் பிள்ளை
பொழக்கடை	- புறக்கடை
பொழப்பு	- பிழைப்பு
பொறம்போக்கு	- புறம்போக்கு
பொறவி	- பிறவி
பொறப்பாடு	- புறப்பாடு

போரேளா	- போகிறீர்களா
போறாமை	- போதாமை
போறாமை	- பொறாமை
போறும்	- போதும்
மக்கட்தொகை	- மக்கட்டொகை; மக்கள் தொகை
மதுரையை எய்தார்	- மதுரையை எய்தினார்
மதுவு	- மதகு
மந்தவெளி	- மந்தைவெளி
மமுட்டி	- மண்வெட்டி
மரம் நடுவிழா	- (மரக்)கன்று நடுவிழா
மழை பேஞ்சது	- மழை பெய்தது
மாங்கண்ணு	- மாங்கன்று
மாங்காய் மரம்	- மாமரம்
மாஞ்செடி	- மாங்கன்று
மாடு உட்கார்ந்தது	- மாடு படுத்தது
மாடு கண்ணு	- மாடு கன்று
மாணவிகள்	- (பெண்) மாணவர்கள்
மாநாடு ஏற்பாடுகள்	- மாநாட்டு ஏற்பாடுகள்
மிரண்டான்	- மருண்டான்
மீன் திரை	- மீன் வலை
மீனாக்ஷி	- மீனாட்சி
(மயிர்)**மு**டி ஒடிந்தது; உடைந்தது	- முடி அறுந்தது; முடி பிய்ந்தது

முடிச்சவுக்கி	- முடிச்சு மாறி; முடிச்சவிழ்க்கி
முந்தாணி	- முன் தானை; முன்றானை
முப்பத்தி ஐந்து	- முப்பத்து ஐந்து; முப்பத்தைந்து
முஷ்டி	- முட்டி
மூன்றாவது வகுப்பு	- மூன்றாம் வகுப்பு
மொத்தக் கூட்டமும்	- முழுக் கூட்டமும்; கூட்டம் முழுவதும்
மொதல்	- முதல்
மொதலை	- முதலை
மோட்டுவளை	- முகட்டு வளை
ரூ.33.25 காசு	- ரூ.33.25; 33 ரூபாயும் 25 காசும்
ரேழி	- இடைகழி
ரொப்பு	- நிரப்பு
ரொம்ப	- நிரம்ப
வகுத்து வலி	- வயிற்று வலி
வச்சாள்	- வைத்தாள்
வஞ்சான்	- வைதான்
வயர்	- வயிறு
வரவு	- வரகு
வருகை புரிந்தார்	- வந்தார்
வருவது யார்?	- வருபவர் யார்?
வவுத்தெரிச்சல்	- வயிற்றெரிச்சல்

வாரேளா	- வருகிறீர்களா
வாழ்க்கைத் துணைவி	- வாழ்க்கைத் துணைவர்
விபரம்	- விவரம்
விரை	- விதை
விரைந்திருக்கிறார்	- விரைந்து சென்றிருக்கிறார்
வீட்டு முத்தம்	- வீட்டு முற்றம்
வீடு வசதி	- வீட்டு வசதி
வெழல்	- விழல்
வெள்ளாழர்	- வேளாளர்
வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது	- பரிசோதித்து வெற்றி காணப்பட்டது
வெற்றி வாகை சூடினார்	- வாகை சூடினார்; வெற்றி பெற்றார்; வென்றார்
வென்னித் தண்ணி	- வெந்நீர்
வேட்டியைக் கழற்றினான்	- வேட்டியை அவிழ்த்தான்
வேர்வை	- வியர்வை
வேஷ்டி	- வேட்டி
வைக்கல்	- வை; வைக்கோல்
ஜல்லடை	- சல்லடை
ஜலித்தல்	- சலித்தல்
ஸ்ரீமுஷ்ணம்	- திரு முட்டம்
ஸ்ரீ ரங்கம்	- திருவரங்கம்

☆☆☆☆☆

இந் நூலாசிரியர்
வெளியிட்டுள்ள நூல்களாவன :-

1. சுய சிந்தனையாளர் பெரியார்.
2. பெரியார் கணினி (இரு தொகுதிகள்)
3. பெரியாரின் உவமைகள்.
4. பெரியாரின் பழமொழிகள்.
5. பெரியாரின் குட்டிக் கதைகள்.
6. பெரியாரியல் 1. பொருள்.
7. பெரியாரியல் 2. மொழி.
8. பெரியாரியல் 3. இலக்கியம்.
9. பெரியாரியல் 4. கலை.
10. பெரியாரியல் 5. தாம்.
11. பெரியாரியல் 6. கல்வி.
12. பெரியாரியல் 7. ஒழுக்கம்.
13. பெரியாரியல் 8. திருமணம்.
14. பெரியாரியல் 9. கடவுள்.
15. பெரியாரியல் 10. மதம்.
16. தவறின்றித் தமிழ் எழுதுவோம்
17. தடம் புரள்கிறதா தமிழ் உரைநடை

தவறின்றித்
தமிழ் எழுதுவோம்
மா. நன்னன்